பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

ஜூன் 2026



## கவிக்கிறுக்கன்
## தேவகோட்டை முத்துமணி

நேர்காணல்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – ஜூன் 2026

654

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

பட விநயம் : கூகுள்

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

உலக சூழல் இன்னும் போர் என்னும் கொடிய அரக்கனின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டு, எந்த நேரம் என்ன நடக்குமோ என்னும் பீதியை உருவாக்கியுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கலானது, மக்களை மாபெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.எரிபொருள் விலையுடன், ஏனைய பொருட்கள் அத்தனையும் விலையில் ஏற்றங்காண, மக்கள் வாழ்க்கையோ இறங்குமுகமாவே போகிறதென்பது யுத்தங்களின் உக்கிரத்தை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. சுயலாபத்திற்காக அப்பாவி மக்களின் உயிர்களை மலிவாக்கி, விலைபேசும் வல்லரசு நாடுகள் ஒருபுறம்; அநியாயமாகப் பறிபோகும் உயிர்களைக் காக்க யுத்தமெனும் ஆயுதத்தைக் கையிலெடுத்துள்ள நாடுகள் மறுபுறமுமாக, எது எப்படியோ பறிபோவது மனித உயிர்களும், அவர்களின் இயல்பு வாழ்க்கையும் தான். உலகைப் பதற்றத்திலேயே வைத்திருக்கும் இந்நிலை எப்போது தீருமோ எனக் கவலையாக உள்ளது.

அடுத்ததாக தமிழக அரசியல் மாற்றமும், அதன் விளைவாக ஏற்பட்டு வரும் சம்பவங்களும், மிக முக்கியமாக பெரும்பாலான தமிழ் ஊடகங்களின் கைங்கரியமும் சற்று நெருடலாகவே உள்ளது. காரணம் சில ஊடகங்கள், ஊகங்களை ஊர்ஜிதமாக்கியும், உண்மைகளைப் புறந்தள்ளியும், உண்மைக்குப் புறம்பானதொரு விம்பத்தை மக்களிடம் சேர்ப்பிக்க நீயா நானா எனப் போட்டியிட்டு செயல்படுகின்றன என்பது கண்கூடு. உண்மையைக் கூட்டிக் குறைத்து மக்களிடம் சேர்ப்பது தான் ஊடக தர்மமா? இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட ஊடகங்கள் பக்கச்சார்பின்றி, உள்ளதை உள்ளபடி மக்களிடம் சேர்ப்பதே தம் தலையாய கடமை என்பதை நினைவில் நிறுத்தி செயல்பட்டால், பல அசம்பாவிதங்களைத் தவிர்க்கலாம் என்பது மட்டுமல்லாமல், நீதியை நிலைநாட்டலாம் என்பதே என் கருத்து.இனியாவது இவர்கள் உணர்ந்து செயல்படுவார்களா?

இம்மாதம் 26 ஆம் திகதி அடியேனின் பிறந்தாள் வரவிருப்பதால் என்னைவிட மூத்தவர்களின் ஆசிகளும், இளையவர்களின் வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும் கிடைத்தால், அவை எஞ்சிய என் ஆயுளுக்கு வலு சேர்க்கும். இதுவரை தொடர்ந்தது போல், இன்னும் சில ஆண்டுகள் அன்னைத் தமிழுக்காகவும், அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்காகவும் பணி செய்துக் கிடப்பேன்.


அடுத்த ஜூலை மாத இதழ் கவிஞரேறு புகழ் வாணிதாசனாரின் சிறப்பிதழாக மலரவிருப்பதால், உங்கள் சிறப்பான படைப்புகளைக் கொண்டு இதழை அலங்கரியுங்கள்! இம்மாத இதழை வாசித்து உங்கள் கருத்துக்களையும் பகிர்ந்திடுங்கள்! உலக அமைதிக்காகப் பிரார்த்தனை செய்தவனாக, எல்லோரின் நலம் நாடி விடைபெறுகிறேன்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)



# வெண்பா உரைவீச்சு



## நாத்திகனும் ஆத்திகனும்...

.

ஏடி : -

.

வேண்டுதல் கைகூட
வேல்முருகன் கோயிலுக்கு
ஆண்டாண்டும் போவேன்
அருள்வாங்க - யாண்டும்
நடப்பதெல் லாமே
நரகம்தான் நாளும்
கடப்பதெல் லாமே
கனவு.

.

அமின் : -

.

அப்படி என்ன
அவசர வேண்டுதலோ
இப்படிச் சொல்லுங்க
எங்கிட்டே - எப்போதும்
இன்பமும் துன்பமும்
எல்லாம் இறக்கிவச்சா
உன்பாரம் தீரும்
உடன்.

.

ஏடி : -

.

என்னத்தச் சொல்லி
எதுதான் நடந்திடும்
ஒண்ணும் நடக்காது
உணருங்க - என்னோட
சாமி வரங்கொடுக்க
சாத்தியம் இல்லைன்னா
பூமியில ஒண்ணுமில்ல
போ.

.

அமின் : -

.

உண்மையான உந்தன்
உழைப்பை முதலீடாய்
மண்ணில் விதைத்தால்
மகத்தான - விண்ணுயரம்
ஆண்டாண்டும் நன்றாய்
அடைவாய் இதைவிடுத்து
ஆண்டவனா செய்வான்
அதை.?

.

ஏடி : -

.

வகுத்துநல் வாழ்க்கையை
வானிறைவன் செய்வான்
பகுத்தறிவு முற்றும்
பழசாம் - மகுடங்கள்
சூட்டுவதும் நீக்குவதும்
சூழும் இறையருளே
காட்டும் எனக்கொள்
கணித்து.

.

அமின் : -

.

எல்லாம் சரிதான்போ
இங்கே உழைக்காமல்
எல்லாம் கிடைக்கும்
எனச்சொன்னால் - தொல்லுலகில்
மண்ணுழாமல் சோறும்
மனம்போல எல்லாமும்
எண்ணம்போல் வாய்க்குமே
இங்கு.

.
ஏடி : -
.
முன்னோர்கள் எல்லாரும்
முட்டாளா; அன்றவர்கள்
சொன்னவை பொய்தானா
சொல்லுங்கள் - இன்னுமிங்கே
எத்தனைக் கோயில்கள்
எத்தனைப் பூசைகள்
எத்தனையோ உண்டன்றோ
இங்கு.
.
அமின் : -
.
பக்தி எனக்கில்லை
பார்த்து வணங்குகிற
முக்தி எனக்கில்லை
முன்பிருந்தே - சக்தியெலாம்
எங்கிருந்தும் வாராமல்
எந்தன் உழைப்பில்தான்
இங்குநலம் காண்கிறேன்
யான்.
.
ஏடி : -
.
உங்களின் ஜாதகத்தை
ஓடிப்போய்ப் பாருங்கள்
எங்கேனும் நல்ல
இடமிருந்தால் - இங்குங்கள்
ஜாதகம் அன்றி
சகலமும் வாய்க்காது
ஆதலால் நல்லநேரம்
ஆம்.
.
அமின் : -
.
இதெல்லாம் தவறுடா
இங்கே உழைத்தால்
அதெல்லாம்தா னாநடக்கும்
ஆமாம் - ஏதேதோநீ
நெஞ்சில போட்டு
நிறைய குழம்பிட்டே
கொஞ்சம் வெளியவா
டா.
.
ஏடி : -
.
என்னுடைய ராசிபலன்
எல்லாம் விதிப்படிதான்
அன்றே கணித்தான்
அயலூரான் - இன்றுவரைப்
பத்தாண்டு நான்கடந்தும்
பார்த்துவைத்த ஜாதகம்போல்
அத்தனையும் ஆகிறது
ஆம்.
.
அமின் : -
.
இத்தனை ஆண்டுகள்
இப்படியா நீகழித்தாய்?
முத்தான காலம்
முழுவதையும்? - பத்தாண்டில்
நல்ல உழைப்பிருந்தால்
நாலுகாசு சம்பளத்தால்
செல்வந்தன் ஆயிருப்பாய்ச்
சேர்த்து.
.
ஏடி : -
.
சொந்தபந்தம் எங்களுக்குச்
சூனியம் வைத்ததால்
இந்த நிலையில்
இருக்கின்றோம் - அந்தவொரு
சிக்கலான சூனியத்தைச்
சீக்கிரம் நீக்கிவிட்டால்
பக்கபலம் தெய்வமாகும்
பார்.
.
அமின் : -
.
இத்தனை ஆண்டை
இதுபோல் கழித்துவிட்டு
முத்தான வாழ்வை
முறிக்கின்றாய் - எத்தனையோ
விஞ்ஞானம் இங்கே
விரிந்திருக்க நீமட்டும்
அஞ்ஞானி என்பேன்நான்
ஆம்.

.
ஏடி : -
.
இன்னுமொரு பத்தாண்டில்
என்நிலை மாறுமென
குன்றத்தூர் ஜோசியன்
கூறினான் - இன்றுமுதல்
நித்தமொரு பூசை
நிகழ்த்தினால் காசுபணம்
அத்தனையும் சேருமாம்
ஆம்.
.
அமின் : -
.
நித்தமொரு பூசை
நிகழ்த்தாதே சொல்வதைக்கேள்
அத்தனையும் பொய்தான்
அழித்துவிடும் - இத்தருணம்
உன்றனுக்கு வேலை
உடனேநான் பார்க்கின்றேன்
என்சொல்லைக் கேளேன்
இனி.
.
ஏடி : -
.
இந்தவொரு பூசையை
இல்லாமல் செய்துவிட்டு
அந்தப் பணியைநான்
ஆதரித்தால் - எந்தநேரம்
தெய்வப் பிழையாகி
தேறாமல் போய்விடுவேன்
பொய்சொல்லக் கூடாது
போ.
.
அமின் : -
.
எங்கிட்ட கூட
இருக்குடா வேலையெல்லாம்;
இங்கவந்து பாரேன்
இனிமேல்நீ - உங்களுக்கு
சம்பளமும் நான்தருவேன்
சாப்பாடும் நான்தருவேன்
இம்முன்னு சொல்லுடா
ஏய்.
.
ஏடி : -
.
உங்கிட்ட நான்வார
உத்தரவு வேணும்ன்னா
எங்கவூர் சாமியிடம்
இப்பவே - பொங்கவச்சி
பூப்போட்டு பாத்துட்டு
போகலாம்னா நான்வாரேன்
காப்பு கழட்டமாட்டேன்
கைக்கு.
.
அமின் : -
.
என்னமோ பண்ணிக்கோ
எக்கேடோ கெட்டுப்போ
என்னமோ நல்லதுதான்
நான்சொன்னேன் - உன்னோட
புத்தியெல்லாம் இப்படி
போகும் வரைக்குமே
அத்தனையும் பாழாகும்
ஆம்.





# அன்னையர் தினம்



**மைதிலி சம்பத்,**
**செகந்திராபாத்**

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆகையால் கலெக்டர் கௌசல்யா துளசி கொண்டு வைத்திருந்த ஓமம் வெற்றிலை போட்டு காய்ச்சிய எண்ணையை தலையில் தேய்த்து நன்றாக குளித்துவிட்டு வந்து அவள் கொடுத்த நல்ல சூடான அடைகளை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் மனதுக்குள் தோன்றியது ‘நமக்கு வயது ஆகிவிட்டது, இனிமேல் இப்படி எல்லாம் இஷ்டம் போல் சாப்பிடக்கூடாது. ஒவ்வொரு சமயம் நினைத்தால் எதற்காக உயிர் வாழ்கிறோம் இதில் ஏதாவது குறிக்கோள் உண்டா’ என்றெல்லாம் தோன்றும். எப்போதாவது தோன்றுவதுதான். உடனே அதை மறந்து ஏதாவது டிவி பார்ப்பாள், இல்லை கதை புத்தகம் படிப்பாள். ஆபீஸ் இருந்தால் இந்த பிரச்னை எல்லாம் இல்லை போவாள். நிறைய வேலை இருக்கும். அப்போது திரும்ப வீட்டுக்கு வரும்போது ரொம்ப களைப்பாக இருக்கும். வந்ததும்தூங்கி விடுவாள்.ஆபீஸ் இல்லாத தால் தான் இந்த பிரச்னை எல்லாம். பேப்பரை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். “துளசி, சாப்பிட்டியா?” என்று கேட்டாள்.. “சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்” என்றாள் அவள்.. அதற்குள் வாசலில் ஏதோ சத்தம் கேட்க போய் கதவை திறந்தால் இவளுடைய பால்ய சிநேகிதி வசந்தா. சென்ட்ரியுடன் பேசிக் கொண்டிருந்தாள். கூடவே மூன்று பெண்மணிகளும் வந்திருந்தார்கள். “எப்படி இருக்கே, கௌசி” என்று வசந்தா கேட்க, அப்போதுதான் வசந்தாவின் கூடவே வந்திருந்தவர்களை கவனித்த கௌசல்யா அவர்களையும் “வாருங்கள்” என்று வரவேற்றாள். எல்லாரையும் உட்கார்ந்துக்கோங்க என்று இவள் சொல்லி முடிக்கும் வேளையில் துளசி ஒரு ட்ரேயில் நிறைய கண்ணாடி கோப்பைகளில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து விட்டாள். “எல்லாரும் எப்படி இருக்கீங்க” என்று கேட்கும் போது வசந்தா எல்லோரையும் அறிமுகப்படுத்தினாள்.

“இவங்க டாக்டர் மேனகா., அடுத்தாப்புல இருக்கிறது ஸ்கூல் ஹெட் மிஸ்ட்ரஸ் கருணா,, இந்த பக்கம் உட்கார்ந்து இருக்காங்களே இவங்க அட்வகேட். வைதேகி. நாங்க எல்லாரும் உன்னை வந்து பாக்கணும்னு ரொம்ப நாளா நினைச்சுட்டு இருந்தோம். அன்னைக்கு போன்ல சொன்னேனே”.

அதற்குள் மாதர் சங்கத் தலைவியான அட்வகேட் மேடம் தாங்கள் கொண்டு வந்திருந்த பூங்கொத்தையும், ஸ்வீட்டையும் கௌசல்யாவிடம் கொடுத்தாள். “இதெல்லாம் என்னத்துக்கு என்ன பார்மாலிட்டி” என்று சொல்லி வாங்கிக் கொண்டாள் .

“பிஸியா கௌசல்யா?” என்று கேட்டாள் வசந்தா.

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல. இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே! அது சரி, நீங்க எல்லாம் என்ன டிபன் சாப்பிடுறீங்களா?"

"இல்ல, இல்ல! எல்லாருமே டிபன் சாப்பிட்டுட்டு தான் வந்தோம்" என்று சொல்லவும் "சரி காபியாவது சாப்பிடுங்க" என்றாள். துளசி உடனே எல்லோருக்கும் காபி எடுத்துக் கொண்டு வந்தாள். "என்ன விஷயம்?" என்று கேட்டாள் கௌசல்யா..

"எங்களோட மாதர் சங்கத்துல அன்னையர் தினம் கொண்டாடுகிறோம் உனக்கு தான் தெரியுமே, நாங்க சின்னதா ஒரு முதியோர் இல்லம் மாதிரி நடத்திட்டு இருக்கோம்னு. அதுலயும் 60 பேர் இருப்பாங்க."

"அப்படியா?"

"இந்த வருஷம் அன்னையர் தினத்தில் அவங்க எல்லாருக்கும் ஒரு என்டர்டைன்மென்ட், ஒரு கொண்டாட்டம், அப்புறம் பரிசுகள் அப்படின்னு பிளான் பண்ணி இருக்கோம். நீ வந்து தலைமை தாங்கி நடத்திக் கொடுத்து, கொஞ்சம் பேசணும். அது எங்களோட கோரிக்கை" "ஆமா ஆமா கண்டிப்பா நீங்க வரணும்" என்று மற்றவர்களும் சொன்னார்கள்.

"அப்படி நான் என்ன பேச போறேன் புதுசா? எத்தனையோ பேர் எத்தனையோ பேசியிருப்பாங்க. நான் பேசுறதுக்கு என்ன இருக்கு? அதுவுமில்லாமே நான் மேடைப்பேச்சுல அவ்வளவு கெட்டிக்காரி கிடையாது."

"இல்ல நீ கண்டிப்பா வரணும்" என்று வசந்தா சொல்லவும் "ஆமாம் மேடம்! நீங்க வந்தா எங்களுக்கும் கௌரவம். எங்களுக்கு தெரியும் நீங்க நல்லா பேசுறீங்க. கண்டிப்பா வரணும்" என்று அவர்கள் மறுபடியும் மறுபடியும் சொல்லவே, "சரி நான் வரேன்" என்ற கௌசல்யா "கொஞ்சம் இருங்க! எங்க ஆபீஸ்லேயும் நிறைய லேடிஸ் இருக்காங்க. அதனால அன்னையர் தினத்தை முன்னிட்டு ஒரு சின்ன நிகழ்ச்சி நடத்துவோம். ஒரு நிமிஷம் பார்த்துட்டு சொல்றேன் அது எப்போ வச்சிருக்காங்கன்னு" என்று சொல்லிவிட்டு ஆபீஸ்ல இருக்குற தன்னுடைய பி.ஏவை கூப்பிட்டாள்.

அவங்களோட நிகழ்ச்சி காலையிலேயே முடிச்சிடுறாங்களாம் அதுக்கப்புறம் மாலைல வெச்சால் ஒண்ணும் பிரச்னை இல்லை அதனால நான் வரேன்"

"ரொம்ப சந்தோஷம் மேடம், நிகழ்ச்சி அன்னிக்கு நான் கார் அனுப்பறேன்" என்று சொன்னார்கள்.

"நோ, நோ! அவசியமில்லை. நானே வந்துடறேன்"

அதன் பிறகு ஒரு நாள் வசந்தா போனில் கூப்பிட்டு இருவருமாக கடைகளுக்கெல்லாம் போக வேண்டி இருக்கு. வரியா என்று கேட்க சரி ஏன்றாள் கௌசல்யா. அப்போது பழைய சினேகிதிகள் இருவரும் தனியே நிறைய பேசிக் கொண்டார்கள்.

"ஆமாம் கேட்கிறேன் என்று நினைத்துக் கொள்ளாதே உனக்கு உறவுக்காரர்கள் யார் இருக்கிறார்கள் நாளைக்கு உனக்கு பிறகு உன் சொத்துக்கள் எல்லாம் யாருக்கு?" என்று வசந்தா கேட்டாள்.

"இந்த துளசி என்கிட்ட தன்னோட பத்து வயதில் வந்தவள். அவளுக்கும் யாரும் கிடையாது. நான் என்னுடைய கூடப் பிறந்தவளாகத்தான் பார்த்துக்

கொள்கிறேன். ஒரு நாளும் அவளை ஒரு அசிஸ்டன்ட், வேலைக்காரி என்றெல்லாம் நினைத்ததே இல்லை .அவளாக இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதுதான். படிக்கவும் வைத்திருக்கிறேன். எனக்குப் பிறகு என்னுடைய எல்லா சொத்துக்களும் ஏதோ சிலது டிரஸ்ட்களுக்கு போக பாக்கியை அவளுக்குத்தான் கொடுக்கப் போகிறேன்" என்று சொன்னாள். சொற்பொழிவு பற்றி தன் மனதுக்குள் ஏதோ யோசித்து வைத்து இருந்தாள்.

அன்னையர் தினம் வந்தது. கௌசல்யா நேரு ஃபங்ஷன் ஹாலுக்கு போனாள். வாசலிலேயே மாதர் சங்க முக்கியஸ்தர்கள் நின்று வரவேற்றார்கள். உடனே வசந்தா அவளை கீழே அரங்கத்தில் நடு நாயகமாக உட்கார்த்திவைத்து எப்படி ப்ரோக்ராம் வரிசைப்படுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னாள். "முதல்ல சின்னதா ஒரு வரவேற்புரை கொடுத்துட்டு நான் இறங்கி விடுகிறேன். அதுக்கப்புறம் இங்க இருக்கிறவர்கள் எல்லாம் முதியோர்கள். ஆனாலும் ஸ்டேஜ் ஆசை இருக்கு அவங்களுக்கு எல்லாம். அதனால அவங்களுடைய கலை நிகழ்ச்சி கொஞ்சம் நடக்கும். அதுக்கப்புறம் நம்முடைய சொற்பொழிவுகள் நிகழ்ச்சியை வச்சுக்கலாம்னு நினைக்கிறேன். நீ என்ன சொல்ற" என்று கேட்டாள். "அப்படியே பண்ணலாமே" என்று சொன்னாள் கௌசல்யா. உடனே மேடை ஏறிய வசந்தா "நம்முடன் அன்னையர் தினத்தை கொண்டாடுவதற்கு இந்த ஊர் கலெக்டர் கௌசல்யா வந்திருக்கிறார்கள். நமக்கெல்லாம் அதில் ரொம்ப சந்தோஷம். அவர்களுக்கு என் நன்றி" என்றவுடன் பலத்த கரகோஷம் எழுந்தது "இப்போது கலை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் திருமதி பத்மினி அவர்களிடம் மைக்கை வழங்குகிறேன்" என்று சொன்னாள்.

வரிசையாக முதலில் ஒரு கணபதி பாட்டு இரண்டு புதிய பெண்மணிகள் வந்து பாடினார்கள். அவர்கள் வயதிற்கு நன்றாகவே பாடினார்கள். அதன் பிறகு இன்னும் சில பேர் ஒன் றொன்று பாடினார்கள். அது முடிந்த தும் ஒரு பெண்மணி அழகான ஒரு தமிழ் பேச்சை வழங்கினார். மேடையில் கும்மி பாட்டு பாடி அதற்கு வட்டமாக ஆடினார்கள். எல்லாம் நன்றாக இருந்தது. சிலர் இதெல்லாம் முடியாதவர்கள் கீழே உட்கார்ந்து இருந் தார்கள். ஆனால் அவர்களும் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். இதன் பிறகு நிகழ்ச்சியில் பங்கெடுத்தவர்கள் எல்லாம் கீழே போக



வசந்தாவின் வரவேற்பில் கீழே இருந்து முக்கிய விருந்தினர்கள் மேடைக்கு வந்தார்கள் கௌசல்யா பலத்த கரகோஷத்துடன் மேடைக்கு அழைத்துவரப்பட்டாள். மேடையில் பாடியவர்கள், பேசியவர் மற்றும் கும்மி அடித்தவர்கள் எல்லோருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் மேலே ஏறி வருவது கஷ்டம் என்பதால் கௌசல்யா கீழே கொண்டு கொடுக்கிறேன் என்றாள்.

"இல்லை, பரவாயில்லை. அவர்கள் வருவார்கள் என்றாள் வசந்தா. எல்லோரும் ஸ்கிரீனுக்கு பின்னால்தான் இருந்தார்கள். ஒருவர் பின் ஒருவராக வந்தார்கள். துளசி என்று கௌசல்யா கூப்பிடவும் அருகே இருந்த துளசி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பை கொண்டுவந்து கௌசல்யாவிடம் கொடுத்தாள். பங்கேற்றவர்களுக்கு அதை கொடுத்தாள் கௌசல்யா. கொடுத்துவிட்டு அவள் செய்த காரியம் தான் எல்லோருக்கும் ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொருவர் காலிலும் குனிந்து தொட்டு வணங்கினாள். முதலிலேயே இவள் கேட்டுக் கொண்டிருந்த படி இவளுடைய தாய் தந்தை உடைய படமும் மேடையில் வைக்கப்பட்டிருந்தது. பிறகு "இதில் ஒரு புடவை. ரவிக்கை கொஞ்சம் பணம் ஸ்வீட் எல்லாம் இருக்கிறது. எல்லோருக்குமே இதில் இருக்கிறது. மற்றவர்களுக்கு நான் கீழேயே கொடுக்க சொல்லி இருக்கிறேன்" என்றாள்.

"நாம் அன்னையர் தினம் கொண்டாட வேண்டும் வாருங்கள்' என்று சொன்னதும் உடனே சரி என்று சொல்லாததற்கு காரணம் நான் அதற்கு தகுதியானவள் தானா என்று யோசித்ததுதான். ஏனென்றால் நான் அன்னையையே பார்க்காதவள். சின்ன வயதிலேயே தந்தையையும் இழந்தவள். ஏதோ ஆசிரமங்களில் இருந்து படித்து முன்னுக்கு வந்தேன். அது மட்டும் இல்லை. எனக்கும் கல்யாணம் ஆயிற்று. ஒரு குழந்தையும் பிறந்தது. ஒரு நாள் ஸ்கூட்டரில் என் கணவரும் குழந்தையும் போகும்போது விபத்தாகி அந்த இடத்திலேயே இருவரும் போய்விட்டார்கள்." அதை சொல்லும்போது கௌசல்யாவிற்கு குரல் கம்மி விட்டது கண்களில் நீர் தளும்பி விட்டது. தண்ணீர் ஒரு வாய் குடித்துக் கொண்ட கௌசல்யா தொடர்ந்தாள் "அதனால் தான் அம்மாவைப் பார்க்காத நான் இதற்கு தகுதி உள்ளவள் தானா என்று நினைத்தேன். இது இந்த முதியோர் இல்லத்திற்கு நான் கொடுக்கும் சிறிய அன்பளிப்பு என்று ஒரு செக்கை கொடுத்தாள். வசந்தாவிற்கு ரொம்ப மகிழ்ச்சி "அம்மாடியோ! நாங்க இவ்வளவு எல்லாம் எதிர்பார்க்கவே இல்லை இதில் கௌசல்யா அம்மா ஐந்து லட்சத்திற்கு செக் எழுதி இருக்கிறார்கள்" என்றாள் மிகப்பெரிய கரகோஷம் எழுந்தது.

"நான் ஒண்டிக்கட்டை. என்ன செய்யப் போகிறேன். உங்களுக்கெல்லாம் கொடுத்து நான் சந்தோஷப்பட போகிறேன் அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டு துளசி என்றாள் துளசி கை நிறைய பூ கொண்டு வந்தாள் அதை அப்படியே தன் அம்மா அப்பா படத்தின் முன்னால் தூவிவிட்டு கீழே விழுந்து வணங்கியவள் அவ்வளவுதான் எழுந்திருக்கவே இல்லை. ஒரு நிமிடம் கழித்து அவளை "எழுந்திரு. உணர்ச்சி வசப்படாதே என்று கூப்பிட்ட வசந்தா அவளைத் தொடவும் கௌசல்யா அப்படியே சரிந்துவிட்டாள். விஎல்லோரும் எழுந்து நின்று ஓம் சாந்தி ஓம் சாந்தி என்று மூன்று முறை சொன்னார்கள் "அக்கா! என்னை இப்படி விட்டுட்டு போயிட்டீங்களே" என்று துளசி கதற, "அழாதம்மா! அவங்க அவங்களோட அம்மா அப்பா கிட்ட போய் சேர்ந்துட்டாங்க என்று சொல்லி வசந்தா அவளை தேற்றினாள்.

# விட்டில் பூச்சிகள்

## சிவசங்கரி குருநாதன்
சென்னை



மாலை மங்கும் நேரம் பெண்டுலக் கடிகாரத்தில் மணி ஆறு எனக் காண்பிக்க, அதற்காகவே காத்திருந்ததுபோல் வேக வேகமாக எழுந்து முற்றத்தில் விளக்கை ஏற்றினாள் சாந்தா. விளக்கொளி வீடெங்கும் பரவி, பிரகாசிக்க அதைப்பார்த்து பெருமூச்சு விட்டவாறு வீட்டு வாசலில் திண்ணையின் ஓரம் இருந்த விளக்கு மாடத்திலும் விளக்கை ஏற்றிவிட்டு திண்ணையில் அமர்ந்து வாசலையே பார்த்துக்கொண்டிருந்தாள் சாந்தா. வயது எண்பதைக் கடந்திருக்க வயது மூப்பின் காரணமாக நடை தளர்ந்து, உடல் மெலிந்து காணப்பட்டாள்.




ஒரு காலத்தில் இந்த வெளிச்சம் போல வீடெங்கும் அன்பு பரவிக்கிடந்தது. இப்பொழுது வெறுமை மட்டுமே மிச்சமாய் இருந்தது. இருப்பினும் மறுபடியும் பழைய நிலை திரும்புமென நம்பிக்கையுடன் காத்திருந்தாள் சாந்தா. சாந்தாவிற்கு மூன்று பையன்கள் இரண்டு பெண் குழந்தைகள் என மொத்தம் ஐந்து பிள்ளைகள். மூத்தவன் மணிமாறன், இரண்டாவது குணசீலன், மூன்றாவது பையன் சுகுமாறன், அதற்கடுத்தவள் சுசீலா, கடைக்குட்டி தேவி என அடுத்தடுத்து இரண்டு வயது வித்தியாசத்தில் ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். சாந்தாவின் கணவனான வெங்கடேசன் முதல் நான்கு பேருக்கும் திருமணமான நிலையில் நோயில் படுத்தவன், கடைக்குட்டி தேவியின் திருமணத்தைப் பார்க்காமலேயே சென்றுவிட, சாந்தா தனியாளாய் அவளைக் கரையேற்றினாள். அதுவரை கட்டுக்கோப்பாக குடும்பத்தை ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென மெனக்கெட்டாள் சாந்தா. அது வெகு நாட்கள் நீடிக்கவில்லை. மகள்கள் இருவரையும் அருகே உள்ள ஊரில் கட்டிக்கொடுத்தாள், மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் என நிறைந்து இருக்க வீடே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது.

மணிமாறனுக்கு இரண்டு பையன்கள், ஒரு பெண் குழந்தை, குணசீலனுக்கு ஒரு பையன், சுகுமாறனுக்கு ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும், மகள் சுசீலாவிற்கும், தேவிக்கும் ஒரு ஆண், ஒரு பெண் என்ற வீதத்தில் நான்கு குழந்தைகள் என மொத்தம் பத்து பேரக்குழந்தைகள்.

மகன்கள்,மருமகள்கள், மகள்கள், மருமகன்கள் என அதுவும் பத்துப் பேர் என இவளுடன் சேர்த்து இருபத்து ஒன்று. எங்காவது வெளியில் சென்றால் ஊரில் உள்ள அனைவரது கண்ணும் இவள் குடும்பத்தின் மீதே இருக்கும். இதனால் சாந்தா வீட்டுக்கு வந்தவுடன் முதல் வேலையாக அனைவரையும் நிற்கவைத்து முச்சந்தி மண்ணை எடுத்து வந்து உப்பு, மிளகாய் சேர்த்து, திருஷ்டி சுத்திப் போட்டு அது நெருப்பில் பட்டு வெடிக்கும் போது அதைப் பார்த்து சந்தோசம் கொள்வாள். பின் மொத்தமாக நெட்டி முறித்து எத்தன?கண்ணு என்று பெருமூச்சு விடுவாள். எப்பொழுதும் சிரிப்புச் சத்தமும், அடுப்பங்கரையில் சமைக்கும் பொழுது மருமகள்களின் கேலியும், கிண்டலும், பேரப்பிள்ளைகளின் குறும்பும், விளையாட்டும் என நிறைந்து காணப் பட்டது. அவை வெகுநாட்கள் நீடிக்க வில்லை.

சாந்தா அதனைத் தக்க வைத்துக் கொள்ள எவ்வளவோ போராடியும் முடியாமல் போனது. வேலை, சம்பாத்யம், பிள்ளைகளின் படிப்பு என ஆளுக்கொரு காரணத்தைக்கூறி பிரிந்த நிலையில் நிர்க்கதியாய் இவள் மட்டும். இவற்றை எண்ணி பெருமூச்சு விட்டபடி திண்ணையில் சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். அந்தப்பக்கமாக சென்ற கோமளத்தைக் கண்டதும்,

"அடியே! கோமளம் நாளைக்கு விடிய காத்தால வந்து வாசப்பெருக்கி கோலம் போட்ரு. புள்ளைகளெல்லாம் ஊர்ல இருந்து வாராக! என்ன ? தாமசமா வந்து நிக்காத" என்றதும், கோமளம்,

"அப்படியாம்மா! இங்க வந்து தங்க போறாகளா? இதுக்குத்தான? இத்தன நாள் காத்துக்கிட்டு இருந்திய அப்புறம் ஏம்மா! இன்னும் கவலையாவே இருக்கீங்க?"

"ம்.... அதெல்லாம் ஒன்னுமில்லடி" என்று பெருமூச்சு விட்டவள்,

"நீநாளைக்கு வெரசாவா!என்ன" என்று உள்ளே சென்று விட்டாள். கோமளமோ! மண்டையைச் சொறிந்தவாறு இந்த அம்மாவுக்கு என்னாச்சு? இத்தன நாள் புள்ளைங்க வரலைன்னு கவலைப்பட்டாங்க, இப்பதான் அவுக எல்லாரும் வரப்போறாகளே! இன்னும் ஏன்? இந்த அம்மா முகம் இப்படி வாடிக்கெடக்கு? ம்.....என்னமோ! போ ! ஒன்னும் வெளங்கமாட்டேங்கிது? என்று அலுத்துக்கொண்டாள். சாந்தாவின் பிள்ளைகள் விட்டுச்சென்ற நேரத்தில் அவளுக்கு ஆறுதலாகவும், உதவியாகவும் இருந்தவள் கோமளம்.

அதற்கு கைமாறாக அவ்வப்போது அரிசி, பருப்பு என எதையாவது கொடுத்து உதவுவாள் சாந்தா, வசதியில்லாத காரணத்தால் கோமளமும் மறுப்புச்சொல்லாமல் அவற்றை ஏற்றுக் கொள்வாள். வருத்தமிருந்தாலும் முகத் தில் காட்டிக்கொள்ளாமல் எப்பொழு தும் கலகலப்பாக இருக்கும் சாந்தா இன்று என்னவோ போல் இருந்தது கோமளத்திற்கு நெருடலாக இருக்க, குழப்பத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

சாந்தாவோ அடுப்பங்கரைக்கு வந்தவள், சாப்பிட மனமில்லாமல் இருந்த சோற்றில் தண்ணீரை ஊற்றி மூடி வைத்துவிட்டு, முற்றத்தின் ஓரம் போடப்பட்டிருந்த தம்முடைய கயிற்றுக்கட்டிலில் வந்து படுத்துக்கொண்டாள். கண்ணை மூடி படுத்தவளின் கண்ணிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்க எண்ணம் முழுவதும் மணிமாறன் பேசிய வார்த்தைகளின் வீரியம் குறையாமல் வலியைத் தந்து கொண்டிருந்தது. காலையில் பக்கத்து வீட்டு வள்ளி வந்து அவளது லேன்லைன் போனுக்கு மணிமாறன் போன் பண்ணியிருப்பதாகக் கூறி அழைத்ததும் சந்தோசம் தாங்காமல் சின்னப் பெண்ணாட்டம் துள்ளிக்குதித்து ஓடியவள், மகன் தன்னை மறக்காமல் இருப்பதாக வள்ளியிடம் பெருமை கூறிக்கொண்டு ரிசீவரைக் காதில் வைத்தவளின் முகம் சிறிது நேரத்தில் மாறியது.

போனில் மணிமாறன் நாளை அனை வரும் அங்கு வரவிருப்பதாகவும் சாந்தா இருக்கும் வீட்டை விற்க போவதாக கூற ,

"அது நா இருக்க வரைக்கும் நடக்காது. இது உங்கப்பா, நாமெல்லாம் சந்தோசமா வாழ்ந்த வீடுடா! இத நா அனுமதிக்க மாட்டேன்" என்று வாக்குவாதம் செய்த வளிடம் ,

"அதுக்காக நீ எப்ப போக? நாங்க எப்ப விக்க? எங்களுக்குன்னு தேவைகள் இருக்காதா ?" என்று எரிந்து விழ உடைந்து போனாள் சாந்தா. ஒன்றாக இருந்தவரை அம்மாவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாத பிள்ளைகள்,அம்மாவே உலகம் என இருந்த பிள்ளைகள், இன்று விளக்கொளியை தேடிச்சாகும் விட்டில் பூச்சிகளாக பட்டணத்துப் பகட்டுக்கு மயங்கி, உண்மையான அன்பை மறந்து இப்படியொரு வார்த்தையை உதிர்த்ததை அவளால் தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்தாள். தூக்கம் வராமல் எழுந்தவள் மரப்பீரோவில் இருந்த வீட்டுப்பத்திரத்தைக் கையிலெடுத்தாள்.

முற்றத்தின் ஓரம் இருந்த தூணில் சாய்ந்தபடி கண்கொட்டாமல் பத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள் எவ்வளவு நேரம் அமர்ந்திருந் தாளோ? தெரியவில்லை அப்படியே உறங்கிப் போனாள். பொழுது புலர்ந்ததும் வாசற்பெருக்க வந்த கோமளம் வேலையை முடித்துவிட்டு சாந்தா கொடுக்கும் காப்பிக்காக,

"அம்மா..... அம்மா....." என்று கதவை தட்டினாள். உள்ளிருந்து பதிலேதும் வராததால் என்னாச்சு? இந்தம்மாவுக்கு காலைல நாலு மணிக்கெல்லாம் எழுந்திரிக்கிறவுக, இன்னைக்கு இம்புட்டு நேரமா தூங்குராவ! என்று சந்தேகத்துடன் கதவைத் தட்டச்சென்றவள், கதவு திறந்திருப்பது கண்டு மெதுவாக உள்ளே சென்றாள். அங்கு முற்றத்துத் தூணில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த சாந்தாவைப் பார்த்ததும், ஏம்மா எவ்வளவு? நேரமா அம்மா.. அம்மான்னு கூப்பிட்டிக்கிட்டு இருக்கேன், நீங்க என்னான்னே கேக்கலையே! இம்புட்டு காப்பித்தண்ணி தருவியளேன்னு கூப்பிட்டா அப்படி என்ன? யோசிச்சுக்கிட்டிருக்கீங்க என்று தோளில் கை வைத்தவள், சாந்தா தலை தொங்கியது கண்டு, அதிர்ச்சியில் உறைந்து போனாள். ஒரு கையில் பத்திரத்தைப் பற்றியபடி, கண்கள் விளக்கை நோக்கிப் பார்த்திருக்க அவள் உயிர் பிரிந்திருந்தது. ஒரு நிமிடம் அதிர்ச்சியில் உறைந்தவள், வாசலில் கார் ஹாரன் ஒலிக்க, நிகழ்வுக்கு வந்தவளாய், ஓ...!வெனக்கதறினாள்.

# கவிக்கிறுக்கன் தேவகோட்டை முத்துமணி

## நேர்காணல்

நேர்கண்டவர் – கவிஞர் மாலதி இராமலிங்கம்



'நன்றி: பட்டாம்பூச்சி பண்பலை'

கடல் கடந்தும் நம் தமிழர்கள் கோலேச்சியவர்கள்தான் என்பது புதிய செய்தி இல்லை. வாழ்வியல் முறையில் முதன்மையாகத் தம்மைச் செதுக்கிக் காண்பித்தவர்கள் நம் முன்னோர் என்பதும் புதியது இல்லை. ஆனால், உலகத்தார் வியக்கும் வண்ணம் நம் மூத்தோர்கள் விட்டுச் சென்ற தமிழ் எச்சங்கள் இன்றும் புதிது புதிதாய் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. போலவே, அயலகத்தில் வாழும் நம் தமிழ் வேர்கள், புலம் பெயர்ந்தோர்கள், தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த வரிசையில், நம் "தமிழ்நெஞ்சம்" இதழுக்காக, ஒரு நற்றமிழ் பற்றுடை ஆளுமையான ஒருவருடன், நேர்காணலைத் திறன்பேசியின் வழியே கண்டோம். இதோ, விடுத்த வினாக்களும் கொடுத்த அறிமுகமும் கொட்டிய அனுபவங்களும்!

"வணக்கம் 'கவிக்கிறுக்கன் தேவ கோட்டை முத்துமணி அவர்களே... மனம், மொழி, மெய் என்று தமிழையே சிந்திக்கும் தங்களுக்குக் காற்றலை வணக்கம்!"

"வணக்கம்! தமிழுக்கும் தமிழ்நெஞ்சம் அனைவருக்கும் அன்பு வணக்கம்!"

"முதலில், தங்களைப் பற்றி நம் "தமிழ்நெஞ்சம்" வாசகர்களுக்காக ஒரு அறிமுகத்தை வழங்குங்கள். தங்களின் வேரிடமும் வேற்றிடமும் கூறுங்கள்!"

"என் உயிர்வேர், தமிழகத்தின் தென்கோடி மாவட்டமான தற்போதைய சிவகங்கை சீமையில் உள்ளது. அதுவே என் தாய்மடி! இந்த வேரிலிருந்து இளைஞனாகி வேற்றிடமான அயலகம் செல்லும் இடைக்காலத்தில், செட்டி நாட்டுப் பகுதியிலே மிகவும் தொன்மை வாய்ந்த தேவகோட்டை நகரில் கல்லூரிக் காலம் முடிந்து, தமிழக அரசின் போக்கு வரத்துத் துறையில் 6 ஆண்டுகள் பணி புரிந்தேன். அதன் பின் செலவின மற்றும் தணிக்கை (COST AND WORKS ACCOUNTANT) மேல் படிப்பை முடித்தேன். பின், இந்தோனேசியாவில் 1988ஆம் ஆண்டு முதல் வேற்றிட வாழ்வு தொடங்கியது. இங்கு பன்னாட்டு நிறுவனங்களில் தலைமை நிதி நிலைத் தலைவராகப் பணியாற்றுகிறேன்.


தற்போது இந்தோனேசியாவின் தலை நகர் ஜகார்தாவில் வசிக்கிறேன். பணி நிமித்தமாகக் கடந்த 4 தசாப்தங்களாக இந்தோனேசியாவில் (பல நகரங்களில்) வாழ்ந்து வருகிறேன்.

அவ்வப்போது, என் தாய்மண்ணைத் தொட மறப்பதில்லை. ஏனெனில், குடும்ப மும் உறவும் கூடும் தேவைகளுக்காக என்று என் வருகையை அவாவுடன் எதிர்நோக்கும் சொந்தமும் இருப்பதால் தொப்புள் கொடியின் பிடிப்பு இருக்கிறது. இறுகுகிறது!"

"மகிழ்ச்சி! தங்களின் தமிழடையாளப் பெயர்க்காரணத்தைப் பற்றிக் கூறுங்க ளேன்"

"தமிழ் மேல் நான் கிறுக்காய் இருப்பதனாலும், நான் எழுதுவது வெறும் கிறுக்கல்களே என எண்ணுவதாலும் முத்துமணி என்னும் நான், என் பெயரைக் 'கவிக்கிறுக்கன் முத்துமணி' என்றும், பிறந்த மண், தேவகோட்டை நகரை மறக்காமல் என்னை 'கவிக்கிறுக்கன் தேவகோட்டை முத்துமணி' என்று அழைத்துக்கொள்வதில் மகிழ்கிறேன். இவ்வாறே, தமிழடையாளம் பெற விழைகிறேன்."

இந்தோனேசியாவில் மத்திய சாவ கத்தில் "டியங்' பள்ளத்தாக்கு 4/5ஆம் நூற்றாண்டு கால கட்டத்தில் துறவர் களின் பகுதியாய் விளங்கிய கோவில் தொகுப்பின் ஒரு பகுதி (Photo1989)



"தமிழார்வம் கூடிய தங்களின் அனுபவங்கள் இளம் வயதில் எப்படி இருந்தன? அதைத் தங்களின் நடையிலேயே சொல்லுங்களேன்."

ஒரு கூட்டு புழுவாய் இருந்த என்னை ஒரு வண்ணத்துப் பூச்சியாக மாற்றியது இளம் வயதில் நான் பிறந்து வாழ்ந்த ஊருதான். அந்த ஊர்ல தான் எனக்கு தமிழ் கிடைத்தது. அதாவது, இப்படிச் சொல்லுவாங்க!

"தாவரங்கள் கூட
தமிழே உன்னை
'தா'வரங்களெனும்
தேவகோட்டை!"

அந்த மாதிரி சைவமும் தமிழும் ஒரு சேர வளர்க்கின்ற நகரத்தார் இருக்கின்ற பகுதி அந்த நகரத்தார்களோடு நான் அதிகமாக பழகுனதுனால தான் அவங்களுடைய வாடை எனக்கும் கிடைச்சிருக்கு. கலை உலகத்துப் பிரமுகர்கள் நிறைய அந்த ஊரில் இருந்து வந்திருக்காங்க. சைவமும் தமிழும் ஒன்று சேர்ந்தது. பிரிக்க இயலாதது. நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே தேவகோட்டை தான். நிறைய கோவில்களும் குளங்களும் அமைந்த ஊர். அதே மாதிரி அந்த காலத்திலேயே பள்ளிகள் நிறைய உண்டு. தாளாளர்கள் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாது மக்களுக்கு அந்த கல்வி போய் சேரணும் அப்படின்றது அது ஒரு கடமையாச்சு செஞ்ச ஊர் அந்த ஊர். அதனால எல்லா கோவில் பக்கத்துலேயும் ஒரு பள்ளி இருக்கும்.

நான் படிச்சதெல்லாம் கருதாவூரணி பிள்ளையார் கோவில் அருகில் இருக்கும் சைவ பிரகாச வித்யாசாலை, அதே மாதிரி செயின்ட் ஜான்ஸ் பள்ளி, அதுக்கப்புறம் சிவன் கோவில் பக்கத்துல திருவேங்கடமுடையான் நடுநிலைப்பள்ளி. அதுக்கப்புறம் மேல் நிலைக்கு தே பிரித்தோ உயர்நிலைப் பள்ளி. அதன் பின்னர் அண்ணாமலை சேவுகன் அண்ணாமலை கல்லூரியில். அவரும் ஒரு நகரத்தார் தான். சின்ன ஊரில் கூட அந்த ஊர் மக்கள் கல்வி கற்க வேண்டி அந்த மாதிரி கல்வி சார்ந்த நிறைய இடங்களைத் திறந்தது தான் காரணம். ஆகவே நான் என்னுடைய பெயரைத் தனியே சொல்வதை விட 'தேவகோட்டை' என்ற பெயரை எனக்கு முன்னாடி சொல்லிக்கொள்வது தானே நன்றி உணர்வு. ரொம்ப நன்றி! இந்த கேள்விக்கு என்னுடைய ஊரை பற்றி நான் உங்களோட பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்."

"தங்களின் பெயரின் மூலமாகத்

தமிழர் சந்திப்பில் கலந்து கொண்ட முத்துமணி



தாங்கள் ஒரு கவிஞர் என்பதைக் காட்டி யுள்ளீர்கள். தங்களுக்குக் கவியார்வத்தை முதலில் ஊட்டியது யார்?"

"என் தாயும் தாய் மண்ணுந்தான்! என் தாய் பாண்டி அம்மாள், தந்தை வண்ணங்கன்.

என் தாய் படித்தவள் இல்லை. ஆனால், வட்டில் சோறிடுவதில் தொடங்கி வாழ்வின் அத்தனையிலும் அவள் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் அனைத்திலும் தமிழ் வாசம்தான். என் தாயின் மிகச் சாதாரணமான உரையாடல்களே பாடலின் இலக்கணத் தைக் கொண்டதுபோல இருக்கும். தாயின் மொழியே தமிழை என்னுள் முதலில் கவியார்வத்தை ஊற்றெடுக்க வைத்தது."

"தாய் முதலில் கொடுத்தத் தமிழைத் தொடர்ந்து, அடுத்த நிலையைச் சொல் லுங்களேன்."

"நல்ல கேள்வி! தாயை அடுத்து, கவிதை எழுதக்கூடிய ஆர்வம் பிறந்ததற்கும் அந்த தேவகோட்டை தான் காரணம். எண்பது வருடமாக கந்தர் சஷ்டி விழா நடத்திட்டு இருக்காங்க. அது கந்தன் என்ற சைவம் அல்லது தெய்வீக சம்மந்தமான விழாவாக இருந்த போதிலும் அதுல சுற்றி சுற்றி பார்த்தீர்கள் என்றால் கலை, இலக்கியம் மற்றும் தமிழ் தான்.

கந்தர் சஷ்டி விழாவுக்கு வராத பிரமுகர்கள் கிடையாது. அப்படி வராதவங்க பிரமுகர்களே கிடையாது. செல்வி ஜெயலலிதா முதற்கொண்டு வந்திருக்காங்க. பட்டிமன்றம் என்பது எங்க ஊர்ல தான் பெயர் பெற்றது. ஏன்.. எங்கள் பகுதியில் தான் உருப்பெற்றது என்று கூடச் சொல்லலாம். கம்பன்





தேவகோட்டை நகரில் உள்ள
செட்டிநாட்டு பாரம்பரிய வீடுகள்

அடிப்பொடி சா.கணேசன் அய்யாவில் தொடங்கி, குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ. விஸ்வநாதன், நீதிபதி மு.மு.இஸ்மாயில் இவர்களை எல்லாம் நான் சின்ன பையனாக இருந்த பொழுதே மிக மிக அருகாமையில் இருந்து அவர்களது உரை வீச்சை அவதானித்து இருக்கிறேன்.

அதிலும் அந்த கந்தன் விழா ஒரு லயத்தோடு, ஒருநாள் முழுக்க பட்டி மன்றம், ஒரு நாளைக்கு இலக்கியப் பேருரை, ஒரு நாள் கவியரங்கம், ஒரு நாள் வழக்காடு மன்றம் என்று ஒவ்வொரு நாளும் நடந்துகிட்டே இருக்கும். அப்போ அந்த சின்ன ஊருல அந்த சின்ன வயதில் அது பெரிய விதையாக இடம் மனதில் விழுந்தது. அதிலும், கவிதைகள், அந்த எதுகையையும், மோனையையும் காதுல கேட்க கேட்க எனக்கும் அதே மாதிரி சொல்லி பார்க்கணும்னு ஆசை இருந்தது. அதை வளர்த்து விட்டவர் என்னுடைய பள்ளி ஆசிரியர் திரு. தாமஸ் அவர்கள்.

அப்ப ஏழாவது வகுப்பு, எட்டாம் வகுப்பு படிக்கும் பொழுது இலக்கிய மன்றங்கள் நடத்துவாங்க. திராவிட முன்னேற்ற கழகம் நாவன்மையால் நல்ல தமிழ் பேசி முன்னணிக்கு வந்த காலம்.

அறிஞர் அண்ணாதுரை அவர்களின் பேச்சு வன்மை அதை ஒட்டி கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசிக் கொண்டிருப்பது, நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் இவர்களது தமிழை எல்லாம் காதுல கேட்க கேட்க அந்த தமிழின் தொனி மனசுக்கு என்னமோ செய்ற மாதிரி இருந்தது. இதெல்லாம் சேர்ந்து முதன் முதலில் நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது, என்னுடைய வயது 13 வயதிற்கு நினைக்கிறேன், அந்த வயதிலேயே நாம் முதலில் கவிதை எழுத ஆரம்பிச்சிட்டேன்."

இளைஞனாக இருக்கையில் கவியரங்கங்களிலும் பங்கேற்க வாய்ப்பளித்தது என் தாய்த்தமிழ்!

"ஒரு புலம் பெயர் தமிழராய் இருந்து நீங்க சந்திக்கும் அயலகச் சூழல் எவ்வாறு உள்ளது?"

"புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள், ஒரு வேளை, ஐரோப்பிய நாடுகளுக்கோ அல்லது அமெரிக்கா போன்ற மேல் நாடுகளுக்குச் செல்லும் பொழுது அவர்களுக்குச் சவால்களைச் சந்திக்க நேரிடலாம். கீழ்த்திசை நாடுகளைப் பொறுத்தவரை நமது அகண்ட பாரதம் 2000ஆண்டுகள்அல்ல;அதற்கும்முன்னரே தொடர்பில் இருந்து இருக்கிறது. நான் வாழும் இந்த இந்தோனேசியா மொத்தம் பதினெட்டாயிரத்துக்கும் அதிகமான தீவுகளைக் கொண்டது. பல்வேறு மொழிகள் ஆயிரத்துக்கும் மேல் இன்னும் வழக்கில் உள்ளன. இதன் பெரிய தீவுகளான நிலப்பரப்புகள் தான் நமது பண்டைய தமிழில் சாவகம், புட்பகம், சொர்ணத்தீவுகள் என்று அழைக்கப்பட்டு இருந்தன. ஆக, நமக்கு இந்தோனேசியா பல்லாயிரம் ஆண்டுகளாக பரிச்சயமான பகுதி தான். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது தமிழர்களின் காலடிச் சுவடுகள் பதிந்த பூமி இது.

இந்தோனேசிய பண்பாட்டு விழாவில் முத்துமணி.





தேவகோட்டை நகரின் அடையாளமாகத் திகழும் வளைவு.

நாட்டின் தலைநகரான ஜகார்தாவில் தான் வசிக்கிறேன். இந்தப் பகுதி தான் ஜாவா என்று அழைக்கப்படுகிறது. இதற்கு முன்னர், ஜாவாவின் பல்வேறு பகுதிகளில் வசித்து இருக்கிறேன். இந்த ஜாவா மொழியில் சாவா (சாவகம்) என்றால் வயல் மற்றும் வயல் வெளிகள் நிறைந்த பகுதி என்று பொருள். அப்படியே நம்ம தமிழகத்தின் கிராமங்களில் வாழும் உணர்வையே, நெல் நிறைந்த இந்த வயல் வெளி நமக்கு அளிக்கும். இயற்கையாகவே மொழி ஆர்வம் மிக்கவனாக இருப்பதால், ஒவ்வொரு முறை அறிந்த வார்த்தைகள் காதில் விழும் போதெல்லாம் இந்த மொழியின் வேர்ச்சொற்களை மனம் ஆய்ந்து, தமிழில் தொடர்புடைய சமமான சொற்களைத் தேட ஆரம்பிக்கும். மலாய் மொழி தான் தேசிய மொழியாக பயன்படுத்தப்படுகிறது. தற்சமயம் இந்தோனேசியா மொழியில் அமைந்துள்ள வேர்ச்சொற்களை ஆய்ந்து தமிழில் அதன் தொடர்பு வார்த்தையைத் தேடி ஒரு அகராதி அமைக்க முயன்று வருகிறேன். அது சிறப்புற உருவாக இறையருள் துணை புரிய வேண்டும்.

இங்கு, சமக்கிருதக் கலப்பும் நிறையவே இருக்கிறது. அன்றைய அகண்ட பாரதத்தின் ஒரு பகுதியாக, இந்தத் தீவுக்கூட்டங்கள் இருந்திருக்க வேண்டும். அனுமன் வழிபாடு, இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் இன்றும் எழிலோடு விளங்குகின்றன. ஆகவே இவர்களின் கலாச்சாரம் நமது கலாச்சாரத்தை ஒட்டியே இருக்கிறது.

இன்றைக்கு இங்கே நிறைய தமிழர்கள், பாரதத்தின் மற்ற பகுதிகளில் இருந்து பணிக்காகவும், தொழில் புரியவும் வந்தவர்கள் பலர் வாழ்கின்றனர். நான் இங்கே வந்து சுமார் 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. அன்றைய கால கட்டத்தில் இவ்வளவு புலம் பெயர்ந்தோர் இங்கு இல்லை.

அன்றும் சரி; இன்றும் சரி; நம் தமிழர் / இந்தியர் மீது அளவற்ற மரியாதை வைத்து இருப்பவர்களாக இந்தோனேசியர்கள் இருப்பதை உணர முடிகிறது. அதனால், நான் இங்குச் சவால்கள் இன்றிச் சுமூகமாக வாழ்கிறேன்."

"அயலகத்தில் தங்களின் தமிழ்ப்பணியைப் பற்றிச் சொல்லுங்கள்!"

"இங்கே நம் நாட்டில் இருந்து பணி புரிய வருபவர்கள் எல்லோருமே அவரவர் துறையில் வல்லுநர்கள். அப்படி மொழி வாரியாக பார்த்தால், தமிழர், தெலுங்கர், மலையாளிகள், வட மாநிலத்தவர்

என்று இருக்கிறார்கள். மொழி வாரியாக அமைப்புகளும் இருக்கின்றன. இவற்றில் தமிழர் அமைப்பான "இந்தோனேசியத் தமிழ்ச் சங்கம்" பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்ட பெரிய அமைப்பாகும்.

இது பல்லாண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டு, பின்னர், பல்வேறு காரணிகளால் இடையில் கொஞ்சம் செயல் பாடின்றி இருந்து மீண்டும் 15 ஆண்டுகளுக்கு முன்னர் புதுப்பொலிவுடன் புத்துயிர் பெற்று நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதில் என் பங்கு (குழுவாக 3 ஆசிரியர்களுடன் சேர்ந்து) இங்குள்ள குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தருவது ஆகும்.

ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை என்று இரண்டு பகுதிகளாக வகுப்புகளைப் பிரித்து ஒவ்வொரு ஆண்டிற்கு 3 பருவங்கள் என்ற வகையில் தமிழ் கற்றுத் தருகிறோம். மேலும், தேர்வு வைத்துத் தேர்ச்சி அடைந்த மாணாக்கர்களுக்குச் சான்றிதழ் வழங்குகிறோம். அத்துடன், பல்வேறு வகைகளில் அவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொள்ள ஊக்கம் அளித்து வருகிறோம்.

பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழி

DE BRITTO HIGHER SECONDARY SCHOOL, DEVAKOTTAI1911





வரலாற்றின் சாட்சியாக நிற்கும் பழமையான கட்டிட நுழைவாயில் - 1911

யாக இருப்பதனாலும், புலம் பெயர்ந்த காரணத்தால் தமிழ் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போவதாலும் தமிழின் எண்ணும் எழுத்தும் அவர்கள் கண்களில் படுவதற்கு வாய்ப்பு இன்றிப் போய்விடுகிறது. அந்தக் குறையை எங்கள் தமிழ்ப்பள்ளி தவிர்த்து அனைத்துத் தமிழர் குழந்தைகளும் தாய் மொழியைக் கற்றுக்கொள்ள வகை செய்கிறது."

"குழந்தைகளுக்குப் பயிற்றுவித்தல் மட்டுமன்றி வேறு என்ன இந்த அமைப்பின் மூலம் நடக்கிறது?"

"இது தவிர, கலை நிகழ்ச்சிகளாக ஆண்டுக்கு 4 நிகழ்ச்சிகள் நடத்துகிறோம். அவற்றில் ஒன்று, தமிழக கிராமியக் கலை நிகழ்வு. இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வண்ணமே இது நிகழ்த்தப்பட்டாலும் தமிழகத்தில் இருந்து நலிந்த கிராமியக் கலைஞர்களை இங்கே வரவழைத்து சிறப்பிக்கிறோம். இது எங்களுக்கு மனநிறைவை அளிக்கிறது. இது தவிர ஒரு இசை நிகழ்ச்சி, ஒரு இலக்கியப் பேருரை நிகழ்ச்சி மற்றும் இங்கே இருப்பவர்களின்

திறமையை வெளிக்காட்டும் வண்ணம் ஒரு நிகழ்வு என்று ஒரு சமுதாயமாக அவர்களை ஒன்று கூட்டி வென்று காட்டும் முயற்சியில் ஈடுபடுகிறது இந்த அமைப்பு.

மேலும், "இந்தோனேசியத் தமிழ்ச் சங்கம்" மூலம் ஆண்டு தோறும் தமிழில் மலர் வெளியிடுகிறோம். அந்த மலரின் தலைமைப் பொறுப்பு ஆசிரியராக 15 ஆண்டு காலமாக கடமை ஆற்றி வருகிறேன்."

"நீங்கள் தனிப்பட்ட முறையில் செய்யும் தமிழ் ஆக்கங்களை எவ்வாறு பதிவிடுகிறீர்கள்?"

"இணைய வழியிலும், அச்சு நூலாகவும் என் படைப்புகள் இருக்கின்றன.

தமிழ் ஆர்வம் மிகுதியாலும் கவிதைக் காதலினாலும், இந்தோனேசியாவில் உள்ள தமிழின் தொன்மையையும், தமிழர்களின் தொடர்புகளையும், மத, இலக்கிய, கலாச்சாரப் பரவுதல்களையும் நான் இங்கு, நேரடியாகத் தேடுகிறேன். அது குறித்து, என் வலையொளி மற்றும் வலைப்பக்கங்களில், முகநூல் பக்கத்தில் மிகுந்த ஆய்வுகளுக்குப் பிறகு பதிவேற்றி வருகிறேன். இந்தோனேசிய மொழியில் தமிழ் மொழியின் வேர்ச்சொற்களை ஆய்ந்து ஒரு பட்டியலே உருவாக்கி வருவது குறித்து முன்னர் சொன்னேன் அல்லவா? அதையும் செய்கிறேன்.

நான் வாழ்ந்த தேவகோட்டை நகரைப் பற்றி வரலாறு பூர்வமான நிகழ்வுகளைப், பெருந்தொடராக எழுதி வந்து, பின்னர் அவற்றைத் தொகுத்து, 'வேர்களைத் தேடிய விழுதுகள்' என்ற நூலாக வெளியிட்டு உள்ளேன். அது என் முதல் நூலாக்கம். நான் பிறந்த மண்ணிலே




அதைச் சிறப்பாக வெளியிட்டேன். என் வேரிடத்தேவ(ள)ரும்தலைமுறைகளுக்கு அது ஒரு ஆவணமாகத் திகழும் வண்ணம் அமைந்துள்ளது என்பதை இங்குக் குறிப்பிடுவதில் மகிழ்கிறேன்.

அடுத்து, 'விதைக்குள் உறங்கும் விருட்சங்கள்' என்ற தலைப்பில் என் கவிதை நூலும் வெளி வந்து இருக்கிறது. பல்வேறு பணிகளுக்கிடையே என்னை ஆற்றுப்படுத்தும் தமிழோடு, எனக்குள் ஊறும் கவிதைத் தாகத்திற்கு வடிகாலாய் நான் வடிக்கும் கவிதைகளைத் தொகுத் துள்ளேன். அது மின்னூலாகவும் மின்னவையில் கிடைக்கிறது. வெவ்வேறு இடத்தில் வாழும் என் தமிழுறவுகளுக்குக் கிட்டும் வகையில் அதனைப் பதிவேற்றம் செய்துள்ளேன்.

மேலும், 'தினமலர்' பத்திரிகையின் மாணவர் பதிப்பாக வெளிவரும் 'பட்டம்' இதழ்களில், மாணவர்களுக்காக, தெற்காசிய நாடுகளின் தமிழ்த் தொடர்புகளை எழுதி வருகிறேன்.




ACTIVITIES OF INDONESIAN TAMIL SANGAM at Jakarta, Indonesia


மரபுப்பா, புதுக்கவிதை என்ற வகையிலும் கட்டுரை வடிவிலுமாக, குரல் பதிவுகளாக என்பதோடு அல்லாமல் தமிழ் குறித்த இணைய வழி உரையாடல் நிகழ்வுகளிலும் பங்கேற்கிறேன்."

"ஐயா கடைசியாக ஒரு கேள்வி தமிழ் நெஞ்சம் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

நல்ல கேள்வி. தமிழ்நெஞ்சம்.... அந்தப் பெயரே ரொம்ப அருமை.... அதாவது யாரும் ஒரு உறுதிமொழி எடுக்கும் பொழுதோ அல்லது நான் பொய் சொல்லவில்லை என் நெஞ்சப்படி பேசுறேன்னு சொல்லும் பொழுதோ நெஞ்சில் தான் கைவைத்துப் பேசுவாங்க. அப்படி தமிழ் எல்லோருடைய நெஞ்சத்திலும் இருக்கிறது என்று சொல்லாம சொல்ற மாதிரி 'தமிழ்நெஞ்சம்' என்று பெயர் சூட்டி இருக்கீங்க. அதுவும் இன்றைய காலகட்டத்தில் இல்லை. 1972 ஆம் ஆண்டு முதல் நிகழ்ந்து வரும் உங்களுடைய தமிழ் பணி எல்லா தமிழ் நெஞ்சத்திலும் பதிந்து தொடர்ந்து நடக்கணும்னு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். நன்றி வணக்கம்

(2026) பிப்ரவரி (2023)



"மகிழ்ச்சி! தாயகத்தையும் தமிழையும் நேசிக்கிறீர்கள்; அதே சமயத்தில் சென்ற இடத்திலும் தமிழை வெல்லச் செய்கிறீர்கள்! சிறப்பு!

தங்களின் தமிழ்ப்பணி சிறக்க, உலகெங்கும் உள்ள தமிழுள்ளங்களின் சார்பாகவும் "தமிழ்நெஞ்சம்" இதழின் சார்பாகவும் தங்களை வாழ்த்துகிறோம்! நன்றி! வணக்கம்!"

# ஆலமர நிழலிலே



ஆலமர ஊஞ்சல் நீ
ஆடுறத நான் பாத்தேன்
சோலக்குயில் கூவல் நீ
சொன்னதெல்லாம் நான் கேட்டேன்

சேலதொட ஆச வச்சு
சேவல் போல கூவினேன்
மாலதர முடியாம
மலையோரம் தவிக்கிறேன்

ஏழமனக் காள நானும்
ஏக்கத்துல தான் நிக்கேன்
வாழக்குமரி உன் நெஞ்ச
வாங்கவந்த வழி தேடேன்

சாலத்தடம் தெரியாம
சாமமெல்லாம் அலையுறேன்
ஆள மாத்த மனமில்ல
அந்த ஆண்டவனும் அறிவான்

ஒன்னோட வாழாம
என்னுசுரும் வாழாது
எண்ணக்கரு எல்லாமே
உன் வண்ணக்கனா தானடி

தன்னந்தனி காட்டுக்குள்ள
காத்தோட நான் போராடேன்
உன்ன எண்ணிப் பாக்கயில
நெஞ்சுக்குள்ள நெருப்பு மூளுது

சின்னவள் நெனப்புதானே
சின்னவன நோக்குதடி
மன்னவன் நான் வருவேன்
மஞ்சள் கயிறு தேடுதடி

எண்ணக்கரு எல்லாமே
என் தேவதை நீதானடி
விண்ணத்தொடும் ஆசயில
வஞ்சிக்கொடி நீதானடி

அன்னக்கிளி காத்திருக்கா
ஆச தங்கம் நான் வருவேன்
பொன்னால இல்லாட்டியும்
பூவால தாலி கட்ட
ஓடிவந்து கூட்டிப்போவேன்

கவித்தோழி **பாத்திமா சுமையா**
குருநாகல் மாவட்டம்

# வெய்யில் கவிதைகள்

சட்டென உலர்ந்து மறைந்திடும்
வெயில் கால மழையென
நீ விலகிப் போனாலும்
விட்டு விலகாதிருக்கின்றது
மண்வாசனையென
உன் வெப்ப நினைவுகள்.

■■■

முதுகை நனைத்துத்
தூங்கவிடாது எழுப்பிடும்
வெய்யில் கால
வியர்வைத் துளிகளாய்
மனதினைத் தூங்கவிடாது
ஈரமாக்குகின்றன
உன் பிரிவின் நினைவுகள்.

■■■

நுரை தள்ளி
கரை ஒதுங்குகின்றன
ஆர்ப்பரிக்கும் அலைகள்.
வியர்வையைக் குடித்துத்
தாகம் தணிக்கின்றன
வரண்ட வெண் மேகங்கள்.
ஒதுங்க நிழல் இல்லாமல்
ஓடி ஒளிகின்றன நண்டுகள்
அந்திக்காகக் காத்திருக்கிறது
ஆள் அரவமற்ற கடற்கரை.
வெய்யில் வாழ்க்கையைக்
கடினமாகத் தான் கடக்கின்றது
என்னைப் போல் கடலும்.

■■■

நீயில்லாத நாட்களெல்லாம்
வெய்யில் நாட்களில்
கல்லிடுக்கில் மழைக்காக
காத்திருக்கும் தவளையாய்
மனது
தவித்துக் கிடக்கிறது

■■■

இனியவளே உன்
இமைகளைத் திறந்து மூடு
குளிரடிக்கும் பார்வையில்
கனலடிக்கும் கோடையைச்
சற்றே கடந்து விடுவேன்

■■■

அப்பு ராஜகுமார்

## கருவின் குரல்

அம்மா அம்மா
உன் கருவறையில்
தெய்வம் நான்
உன் கருவறை விட்டு
வெளியே வந்துவிட்டால்
நீயெனக்கு தெய்வம்
ஆனால்
கருவறை விட்டு
வெளியே வருமளவுக்கு
அங்கே சமத்துவம் இருக்கா?
அமைதி இருக்கா?
நிம்மதி கிடைக்குமா?
போரில்லா உலகமா?
ஏமாற்றாத மனிதருண்டா?
வஞ்சம் இல்லா
வக்கிரம் இல்லா மனமுண்டா?
சக உயிர்களை நேசிக்கும்
பண்பும் அன்பும் உண்டா?
இதற்கெல்லாம் நீயளிக்கும்
பதில்களை பொறுத்து
நான் வருவது முடிவாகும்

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு



# செந்தமிழ்த் தேன்மொழியாள்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

மேதினியில் மூத்தமகள் மேன்மைக்கே உரித்துடையாள்
முத்தெனவே இலங்கிடுவாள் மகிமைகளில் மாசில்லாள்
முதுசங்கள் வளர்த்திட்ட முக்கனி அமுதாவாள்
சொத்தாக இனித்திடும் சீரிளமைச் செம்மொழியாள்

இலக்கணம் துலக்கியவள் இலக்கியம் வழங்கியவள்
கலைக்காவியமாய் ஓவியமாய் கவினுறவே தாள்பதித்தாள்
உயிராகி மெய்யாகி உயிர்மெய்யும் அவளாகி
தேனிமை தந்திடுவாள் தெவிட்டாத தீங்கனியாள்

அகத்திணை புறத்திணையில் அற்புதமாய்க் கவிதந்தாள்
இகத்தினிலே அறம்காத்து பக்தியையும் பிரசவித்தாள்
ஆசாரங்கள் அத்தனைக்கும் ஆதாரம் ஆகிடுவாள்
ஆசிகள் நிறைத்திடுவாள் அகிலத்தையே அலங்கரிப்பாள்

சங்கத்தில் வளர்ந்தவளாம் சௌந்தர்யம் பெற்றவளாம்
மங்காத புகழ்வேந்தர் வளர்த்தெடுத்த மகிமையாள்
முதுபெருங் கவிவாணர் முன்னோர்கள் போற்றியவள்
மதுரம் நிறைந்திடுவாள் மாருதமாய் இதம்தருவாள்


எம்மொழியாள் பொன்மொழியாள் எம்நாவில் நடம்புரிவாள்
நம்மவரை நெருங்கிடுவாள் நேசத்தில கலந்திடுவாள்
தண்மதி போல் தரையிலுள்ளோர் வெண்மனதை ஆட்கொணடு
உண்மையினை வென்றிடுவாள் மென்மையுறு வனப்புடையாள்

பழைமைகளும் புதுமைகளும் செழுமையுறப் பழகிடுவாள்
பழிகளின்றி பரவிநிற்பாள் பாசமிகு நீர்மையாள்
தத்துவங்கள் பொதிந்திருக்கும் வித்தகியாய் வாழ்ந்திருந்தாள்
முத்தமிழும் மகிழ்வுறவே பத்தினியாய் பவனிவந்தாள்.

கொஞ்சும் மொழிநடையாள் விஞ்சிடும் விதங்களிலே
நெஞ்சங்கள் திளைத்திடுமே அஞ்சுகமும் மிஞ்சிடுமே
வஞ்சியாளை வாழ்த்திட வார்த்தைகள் கெஞ்சிடுமே
வஞ்சனைகள் அஞ்சி நிதம் பஞ்சாகப் பறந்திடுமே

காதலின் மொழியாவாள் கன்னித் தமிழாவாள்
சாதலே இல்லாத கனிமொழியும் அவளாவாள்
கலிகாலம் தன்னில் பலியாகிப் போயிடாது
வலிமையோடு நிலைத்திடுவாள் வாசனையும் வீசிடுவாள்

# வியர்வையின் மணம்



முனைவர்
**சிவகாமசுந்தரி நாகமணி**

சுஜா தனது மூன்று வயது மகள் மித்ராவை அழைத்துக்கொண்டு, நகரின் புகழ்பெற்ற குழந்தைகள் சிறப்பு மருத்துவ மனைக்குச் சென்றாள். குழந்தைக்கு இரண்டு நாட்களாகக் கடும் காய்ச்சல். பெரிய மருத்துவமனையில் காட்டினால் தான், உடல் நலம் சரியாகி, மனம் நிம்மதியடையும் என்பது அவள் எண்ணம்.

மருத்துவமனையின் வரவேற்பறை மிகவும் ஆடம்பரமாக இருந்தது. பளிங்குத் தரை, குளிரூட்டப்பட்ட அறை, மென்மையான இசை. அங்கு காத்திருந்தவர்கள் அனைவரும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டனர். விலையுயர்ந்த ஆடைகள், வைர நகைகள், நவீனக் கைபேசிகள் என ஒவ்வொருவரும் தங்கள் செல்வாக்கை வெளிப்படுத்தினர்.

சுஜா தனது பெயரைப் பதிவு செய்துவிட்டு, காத்திருப்போர் அறையில் அமர்ந்தாள். அப்போது ஒருவர் உள்ளே நுழைந்தார். அவரது காக்கி சீருடை, வியர்வையில் முழுவதும் நனைந்திருந்தது. சட்டையின் கழுத்துப் பகுதியில் உப்பு படிந்திருந்தது. கலைந்த தலைமுடி, கையில் பழைய துணிப்பை. அவர் ஒரு ஆட்டோ ஓட்டுநர் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவரது மடியில் நான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் காய்ச்சலுடன் படுத்திருந்தான்.

அவரைக் கண்டதும் சுஜாவின் மனம் சுருங்கியது. இத்தகைய உயர்தர மருத்துவமனைக்கு இவரைப் போன்றவர்களும் வரவேண்டுமா? குளிரூட்டப்பட்ட அறையில் அவரது வியர்வை நெடி அருவருப்பை ஏற்படுத்தும் என்று எண்ணினாள். அவர் மூலையில் இருந்த ஒரு நாற்காலியில் அமைதியாக அமர்ந்து, மகனை மார்போடு அணைத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் செவிலியர் சுஜாவின் மகள் பெயரை அழைத்தார். அவள் அவசரமாக எழுந்து மருத்துவரின் அறைக்குள் சென்றாள். அந்தப் பரபரப்பில் தனது கைப்பை கீழே விழுந்ததை அவள் கவனிக்கவில்லை.

மருத்துவர் குழந்தையைப் பரிசோதித்துவிட்டு, 'பயப்பட வேண்டாம். சாதாரண வைரஸ் காய்ச்சல் தான். மருந்துகளை எழுதித் தருகிறேன். மூன்று நாட்களில் சரியாகிவிடும்,' என்று கூறினார்.

நிம்மதியுடன் வெளியே வந்த சுஜா, தனது கைப்பையைத் தேடினாள். அது அங்கு இல்லை. பதற்றத்துடன் முழு அறையையும் தேடினாள். பக்கத்தில் அமர்ந்திருந்த பெண்மணியிடம் விசாரித்தாள்.

'நான் பாக்கலப்பா. உன் சாமான நீதான் பாத்துக்கணும்,' என்று அந்தப் பெண்மணி

அலட்சியமாகப் பதிலளித்தார்.

வரவேற்பறையில் முறையிட்டபோது, ‘நாங்க பொறுப்பு இல்ல மேடம். புகார் கொடுத்தா CCTVல பாப்போம்,‘ என்று சலிப்புடன் கூறினர்.

கைப்பையில் தான் கைபேசி, பணப்பை, வாகனத்தின் சாவி அனைத்தும் இருந்தன. கணவனுக்கு அழைக்க முடியவில்லை. மருந்து வாங்கப் பணம் இல்லை. வீட்டிற்குச் செல்ல வழி இல்லை. சுஜாவின் கண்கள் கலங்கின. மகள் அழத் தொடங்கினாள்.

‘அம்மா, வீட்டுக்குப் போலாம்...‘

சுற்றியிருந்தோர் வேடிக்கை பார்த்தனரே தவிர, ஒருவரும் உதவ முன்வரவில்லை. அந்த நேரத்தில் யாரோ அவள் தோளைத் தொட்டனர். திரும்பிப் பார்த்தாள். அந்த ஆட்டோ ஓட்டுநர் தான். அவர் கையில் சுஜாவின் கைப்பை இருந்தது.

‘அக்கா, இது உங்களுது தானே? கீழ கிடந்துச்சு. எல்லாம் பத்திரமா இருக்கும் பாருங்க,‘ என்றார் மென்மையான குரலில்.

சுஜாவால் பேச முடியவில்லை. நடுங்கும் கரங்களால் கைப்பையை வாங்கினாள். உள்ளே அனைத்து பொருட்களும் பத்திரமாக இருந்தன.

‘அண்ணே... ரொம்ப நன்றி... நான்...‘ அவள் குரல் தழுதழுத்தது .

‘பரவால்லக்கா. பதட்டப்படாதீங்க. பாப்பாவுக்கு என்ன?‘ என்று கேட்டபடி குழந்தையின் கன்னத்தை வருடினார்.

‘வைரஸ் காய்ச்சல்... மருந்து வாங்கணும்.‘

‘சரிக்கா. நீங்க பில்லு கட்டிட்டு வாங்க. நான் ஆட்டோவக் கொண்டு வந்து வாசல்ல நிறுத்துறேன். உங்கள வீட்டுல கொண்டு போய் விட்டுடுறேன். இந்த நேரத்துல நீங்க சிரமப்பட வேணாம்.‘

சுஜா திகைத்தாள். சில நிமிடங்களுக்கு முன் அருவருப்புடன் பார்த்த மனிதர், இப்போது தெய்வமாகத் தெரிந்தார்.

‘இல்லண்ணே... காசு...‘

‘அதெல்லாம் அப்புறம் பாத்துக்



கலாம்க்கா. முதல்ல பாப்பாவக் கூட்டிட்டு போங்க. என் மவனுக்கும் ரெண்டு நாளாக் காய்ச்சல். எனக்கு உங்க கஷ்டம் புரியுது.'

மருந்து வாங்கிக்கொண்டு வெளியே வந்தபோது, மருத்துவமனை வாயிலில் அவரது ஆட்டோ தயாராக நின்றது. பின் இருக்கையில் அவரது மகன் உறங்கிக் கொண்டிருந்தான். அவர் இருக்கையைத் துடைத்துவிட்டு, 'உக்காருங்கக்கா,' என்றார்.

பயணத்தின் போது சுஜா வினவினாள், 'அண்ணே, உங்க பேரு?'

'முருகன்க்கா. திருவல்லிக்கேணி ஆட்டோ ஸ்டாண்ட்.'

'உங்க பையனுக்கு என்ன ஆச்சு?'

முருகனின் கண்கள் கலங்கின. 'ஒண்ணுமில்லக்கா. இவனுக்கு இருதயத்துல சின்ன ஓட்டை. ஆபரேஷன் பண்ணணும். அஞ்சு லட்சம் கேக்குறாங்க. ராத்திரி பகலா ஆட்டோ ஓட்டுறேன். மிச்சம் பிடிச்சுச் சேக்குறேன். இன்னும் ரெண்டு லட்சம் சேரணும். அதுவரைக்கும் மாத்திரை மருந்துன்னு ஓட்டிக்கிட்டு இருக்கேன். என் சம்சாரம் போன வருஷம் புற்றுநோய்ல போயிட்டா. இவன் ஒருத்தன் தான் என் உலகம்.'

சுஜாவின் இதயம் கனத்தது. அவள் மௌனமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

வீடு வந்து சேர்ந்ததும், பணப்பையை எடுத்து, 'எவ்வளவு ஆச்சு அண்ணே?' என்று கேட்டாள்.

'வேணாங்க்கா. பாப்பாவப் பாத்துக் கோங்க. அதுவே போதும்,' என்றார் முருகன்.

'இல்லண்ணே, பிடிங்க. இது உங்க உழைப்பு,' என்று ஆயிரம் ரூபாயை நீட்டினாள்.

முருகன் அதை வாங்க மறுத்தார். 'அக்கா, நான் உதவி பண்ணது காசுக்கு இல்ல. நாளைக்கு என் மவனுக்கு யாராவது உதவுவாங்கன்ற நம்பிக்கையில. நீங்க பத்திரமாப் போய் சேர்ந்தா போதும்.'

ஆட்டோ புறப்பட்டது. செல்லும் வழியில் முருகனின் மகன் விழித்து, சுஜாவைப் பார்த்து புன்னகைத்துக் கையசைத்தான்.

சுஜா வாசலிலேயே நின்றாள். மகளை இறுக அணைத்துக்கொண்டாள். சில நிமிடங்களுக்கு முன் அருவருப்பாக நினைத்த அந்த வியர்வையின் மணம், இப்போது அவளுக்கு மனிதநேயத்தின் வாசனையாக மாறியிருந்தது.

ஆடையை வைத்து மனிதரை எடை போடக்கூடாது என்ற உண்மையை அன்று அவள் முழுமையாக உணர்ந்தாள். வெளித்தோற்றம் எப்போதும் உண்மையைப் பிரதிபலிப்பதில்லை. வியர்வையில் மூழ்கிய ஒரு காக்கிச் சீருடைக்குள்ளும் ஒரு தங்கமான இதயம் துடித்துக்கொண்டிருக்கும் என்பதை அவள் கண்ணீருடன் ஏற்றுக்கொண்டாள்.

கணவரை அலைபேசியில் அழைத்து, அவர் உறுப்பினராயுள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் முருகனுடைய குழந்தைக்கான அறுவை சிகிச்சைக்கான பணத்தை ஏற்பாடு செய்யச் சொன்னாள்.

# நாடக உறவுகள்

பரணி சுப சேகர்
மதுரை 17



நம்மைச்சுற்றி நான்கு பேர்கள் இருக்கலாம். அந்த நான்கு பேர்களும் நாற்திசையில் என புரிந்து கொள்வது அவசியம். நமக்கான உறவுகள் எப்போதும் நம் நலம் நாடும் என்று நம்பிவிடக்கூடாது. ஒரு சிலர் ஒரு சமயத்தில் நமக்கு உண்மையாக இருந்திருக்கலாம். அது கடந்த காலம் என்பதைக் கவனத்தில் கொள்வது நலம். உண்மையாய் இருந்தவர்களுக்கு உண்மைகள் சில தெரிந்திருக்கலாம். அந்த. உண்மைகள் அந்த காலத்திற்கு ஏற்றதாக இருந்திருக்கலாம். அது இன்றைய நிகழ்வில் சங்கடங்களைத் தந்திருக்கலாம் தரலாம். அப்போது உறவுகள் சங்கட மாகலாம். அந்த சங்கடங்களால் சில உண்மைகள் இன்று மறைக்கப்படலாம். மறுக்கப்படலாம். சம்பவம் என்றோ, நிகழ்வு என்றோ, சொல்வது மறைக்கப் பட்ட உண்மைகள் தான். இந்த வார்த்தையை உபயோகிக்கக் காரணம் உண்மைகளை எப்போதும் ஒளித்து வைக்க முடியாதே. கடந்து வந்த பாதையை மறந்து தன்னிலை மறந்து இன்றைய நிலைமைக்காக உண்மைகளை மறந்தவர்களே நாடக உறவுகளின் நாயக நாயகிகள் என புரிந்து கொள்ளல் வேண்டும்.

பார்க்கும் போது புன்னகைத்து விட்டு, பார்த்து விட்டோமே என்று வருத்தப் படுபவர்களைக் கடந்து தான் நாம் தினமும் பயணிக்க வேண்டியுள்ளது. நேற்றை மறந்தவர்களுக்கு மறக்க நினைப்பவர்களுக்கு உறவுகளின் புனிதமும் மறந்துதான் போயிருக்கும். எதற்காகவும் சுயத்தை இழந்து விடக்கூடாது. காசும் பணமும் வசதியும் இன்று பலருக்கு கண்ணை மறைக்கலாம். அல்லது திரையாகக் கூட இருக்கலாம். வருத்தமோ மகிழ்வோ எதையும் தொலைவிலேயே வைக்கப் பழகிக் கொண்டால் வலியின் கடுமை குறையும். எப்போது மற்றவர்களின் அன்பும் ஆதரவும் தேவையோ அப்போது அதைக் கொடுக்க முடியாதவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். சுயம் என்ற ஒன்று அப்போது அவர்கள் கண்ணை மறைத்தபோது உன் வலியின் உணர்வை நாம் எப்போதும் மறந்து விடக்கூடாது. இரக்கம் பார்த்து ஏமாந்தவர்கள் உறவுகளாலும் ஒதுக்கி வைக்கப்படலாம். அவர்கள் பார்வையில் அவர்கள் மட்டுமே புனிதமானவர்கள்.

ஏறிவந்த பாதையில் முள் குத்திய போது எடுத்து விட்ட கைகளை இப்போது வெட்டி விடத்துடிப்பது தான் உறவின் முகவரிகளாக. எதையும் ஒருதலைப்பட்சமாக நினைப்பவர்களுக்கு உறவு என்பது காலத்திற்கேற்ப மாறும். அதை நினைத்துக் கவலைப்படக்கூடாது.

தெரிந்தது அவ்வளவு தான் என நினைத்து நீயும் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று நீயும் உன் வழியில் செல்ல முற்பட்டால் வாழ்க்கை வலியின்றி வசமாகும்.

ஆடி காரில் பயணப்பட்டாலும் அரையாடை யோடு நடந்தே சென்றாலும்

கடைசியில் ஆறடி நிலம் தான். அதுவும் அடுத்து ஒன்று வரும் வரை. மக்கி விட்டால் மண்ணோடு மண் தான். எதைக் கொண்டு வந்தோம் எதைக் கொண்டு போகப்போகிறோம். யோசித்தால் வழி புரியும். இன்றைய வசதிகள் நாளை இருந்திட என்ன உத்திரவாதம். காலம் கடமையைக் கணக்காக செய்யும். நினைவு படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உறவுகள் எப்போதும் உன் முன்னேற்றத்தை விரும்புவதுமில்லை. அவர்கள் முன்னேற்றத்தை வசதிகளை பகிர விரும்புவதுமில்லை. எதார்த்தம் இது தான். அவர்கள் வசதியை நீ பார்த்துவிட்டால்... நீ எதுவும் நினைத்து விடக்கூடாதே என்ற பயம். தன்னைப்போல மற்றவர்களும் இருப் பதை மறந்து விடுவதும் இயல்பு தானே. உழைப்பால்உயர்ந்தாலும்அந்த இடத்தை அடைவதற்கு சந்தித்த வலிகளை மறந்து விட்டு இவனா.. இவனுக்கா என்ற பார்வை இருக்கும் போது உறவுகளை நாடக உறவுகள் என்றழைப்பதில் தவறில்லை. விவாதங்களில் விருப்பம் வேண்டாம். காரணங்களைத் தான் தேடுவார்கள். கண்முன் கல்போல பெரிதென்பார்கள். அதே குறை அவர்கள் பக்கம் வரும்போது பூசி மெழுகி விடுவார்கள். என்ன செய்வது சுயம் என்பது சும்மா இருக்காதே.

ஒருவன் நன்றாக இருப்பதைப் பார்த்து ஒருவன் மகிழ்கிறான் என்றால் அங்கே உறவு இருக்கிறது என்று பொருள். மாறினால் நடிப்புக்கு பொருளெதற்கு? வாய்ச் சொல்லில் வீரர்களாக நாடக உரையிருக்கும். நம்பி விடக்கூடாது. தனது என்ற புள்ளி வரையப்படும் போதே உறவு என்பது வெளி வட்டத்தில் தான். அதுவும் கடனே என்று மற்றவர்கள் பார்வைக்காக. போதாத காலம் அவர்களைக் கடந்துதான் செல்ல வேண்டியிருக்கும். என்ன செய்வது? வினையோ விதியோ.. நடிக்க வைக்கிறது. கண்ணடி கல்லடி என்று சொல்வார்கள். சமயங்களில் நம்பத்தான் வேண்டும் போல. காரணம் சில உறவுகள் சில நிலைகளைக் கண்டு வியக்கும் போது சில நாட்களிலேயே அந்நிலைகள் அவலமாகிறதென்றால் அந்த உறவு நாடக உறவு என்று அறிய வேண்டும்.

கவலை வருவதற்கு கணக்கற்ற வழிகள் உண்டு. கவலை மறைவதற்கு ஒரே வழிதான். எதையும் எதிர்பார்க்கக்கூடாது. நமக்கென்று யாரும் இல்லை என்ற முடிவோடு பயணப்பட்டால் கவலைகள் குறையும். உன்னைப்பார்த்துக் கொக்கரித் தவர்கள் உன் பாதையைப் பார்த்து பரவசமாக வேண்டும். வசதியோ வாழ்வோ எதுவும் நிரந்தரமில்லை. மரணத்தைப் பற்றி கவலைப்படக்கூடாது. நமக்கென நால்வர் வேண்டும் என்று பொய்யைக் கட்டி அழக்கூடாது. மரணம் வரும்வரை தனித்திரு. மரணத்திற்குப் பின் உனக்கென்ன தெரியப்போகிறது? நட்புக்கோ உறவுக்கோ அரிதாரம் பூசக்கூடாது.

இதுதான் இவ்வளவுதான் என்று போய்க் கொண்டே இருக்க வேண்டும். வலியை நீ உணர்ந்தபோது வழி காட்டாத உறவுகள் மாயை அல்லது சுயத்தில் தன்னை மூடியவர்களே. தான் தனது என்ற பார்வைக்குள் பயணப்படுபவர்கள் வலியை உணராதவர்கள் தான். சந்தேகம் வேண்டாம். உன்னைப்போல் உண்டா என்றதும் உயரத்தில் போய்விடக்கூடாது. ஏற்றிய ஏணியை எப்போதும் இழுத்து விடலாம். தன்னை நியாயப் படுத்திக் கொள்ள உன்னை மட்டம் தட்டினால் தான் அங்கே அவர்கள் வார்த்தை மதிக்கப்படும். இதை எப்போதும் புரிந்து கொள்ள வேண்டும்.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக சிலர்

எதையும் யோசிக்க மாட்டார்கள். பிறர் சொல்வதைக் கொண்டு தன்னிலை கொள்பவர்கள் என்றும் ஆதரவானவர்கள் இல்லை என்பதை உணர வேண்டும். இன்னும் சிலர் நீ எதுவுமே தேவையில்லை ஆணியே பிடுங்க வேண்டாம் என்று இருக்கும் போது மலரும் நினைவுகளை மனம் கொண்டு வருவார்கள். நம்பி விடக்கூடாது. நிச்சயம் அதுவும் ஒரு வகை நாடகம் தான். யாரும் அன்றைக்கிருந்த மணநிலையில் இன்று இருக்க வாய்ப்பில்லை. அதனால் நாடகமாக நினைத்து நகர்ந்தால் நலன் உண்டு. காலத்தைக் கரைத்து கண்ணீரின்றி வாழ்வதற்கு உன்னை நீ கட்டிக்காக்க வேண்டும். உதவும் என்ற நோக்கில் உனது செயலை உன்னை உன் உறவை ஒதுக்கிய நாடகத்தை நீ உணர்ந்தால் தலை நிமிர்ந்து வாழ முடியும். எதிர்பார்ப்பை உதறிவிட்டு எதுவும் இல்லை இனி இழப்பதற்கு என்ற திடமான முடிவு மனதுள் ஓங்கினால் யாராலும் எதுவும் செய்ய இயலாது. வெற்றுக் கண்ணீர் எதையும் தந்து விடப் போவதில்லை. தீதும் நன்றும் செயல் படியே. காலம் சிலவற்றுக்கு தாமதமாகக் கூட பதிலுரைக்கும். கலங்கி விடக்கூடாது. காத்திருப்பு என்பதை வருத்தமில்லை. செதுக்குவதற்கான நேரம். கடமைக்கான வழியில் செல்ல முற்பட்டால் போதும். உன்னை மட்டம் தட்டியவர்கள் மறுபடி உன்னைத் தூக்கிப் பேசும்போது கவனமாக இரு. அது போதும். பசியோடு இருந்தபோது உன்னை ஒதுக்கிவர்கள் இன்று விருந்தே கொடுத்தாலும் கை நனைக்காதிருப்பதே நாடகத்தின் கரு என்பதை உணர்ந்தால் நிம்மதி உண்டு.



# கவிதைகள்

1.

பாலாற்றில்
இருபுறமும்
கரைபுரண்டோடும்
வெள்ளம்

குழந்தைகள்
துள்ளி விளையாட
சிறு ஓடையாய்
காத்திருக்கும்
கொட்டாறு.

2.

பசியாற வந்த
பறவைகளை
பயமுறுத்தி
பட்டினிபோடும்
சோளக்காட்டு பொம்மை.

3.

வாழ்க்கை பயணத்தை கடக்க
கிடைக்கும் இடத்தில்
சிறகை விரிக்கும்
நடைப்பாதை வியாபாரி.

மு. பிரபு,
வேலூர்.

# ஊருக்கு உழைத்திடல் யோகம் !

## முனைவர் ஓசூர் மணிமேகலை



'ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் - உளம்
பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்'
- பாரதி

யோகம் என்பது மூச்சை அடக்கி வாழ்தல், மோனத்தில் இருத்தல், தியானத்தில் இருத்தல் என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கும் வேளையில் ஊருக்கு உழைத்திடல் யோகம் என்ற அரிய கருத்தை பறைசாற்றுகிறார் பாரதி. ஊருக்காக மக்களுக்காகப் பாடிய கவிஞர்களில் தலை சிறந்த கவி பாரதி. அடிமை நாட்டில் பிறந்து, வாழ்ந்து, இறந்த போதிலும், பாரதியின் உள்ளமும் சிந்தனையும் சுதந்திரம் பெற்ற மகிழ்வில் கூத்தாடின. பாரதி ஒரு சுதந்திரமான சிட்டுக்குருவி. தன்னுடைய எண்ணங்களை, கருத்துகளை யாருக்கும் அஞ்சாது சுதந்திரமாக சமூகத்தில் பதிவிட்ட எழுச்சிக் கவிஞன் பாரதி. வாழ்வியல் தத்துவத்தை, மனிதத்தைத் தன் கவி வரிகள் மூலம் மக்கள் மனத்தில் பதித்திட்ட மகாகவி பாரதி. ஊருக்கு உழைத்திடல் யோகம் என்ற சிந்தனையை வெளிப்படுத்தியதால்தான் பாரதி காலம் கடந்து நம்முடன் வாழ்ந்து வருகிறார்.

'அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்'

என்று நம் மனத்தினைத் தொட்டு எழுப்புகிறான் அமர கவி பாரதி. பகைவனுக்கருள்வாய்என்றுநெஞ்சுக்குநீதி சொல்லும் பாரதி, அன்பை, கருணையை, பிறருக்கு உதவும் மனப் பாங்கை ஒரு சக்தியாகவே கருதினார். உள்ளதெல்லாம் ஓர் உயிர் என்று உணர்ந்தால், அன்பு வெள்ளத்தால் பிறர் படும் துயரைப் போக்கி ஊருக்கே உதவிடலாம் என்கிறார். ஊருக்காக உழைத்தவர்கள் செய்த தியாகம் பாலமாகவோ, பள்ளியாகவோ, கோவிலாகவோ, குளமாகவோ, பேருந்து நிறுத்தமாகவோ, பிறர் பசி போக்கும் அன்னதானக் கூடமாகவோ இன்றும் திகழ்கின்றன சாட்சிகளாக. 'இமயச் சாரலில் ஒருவன் இருமினால் குமரியில் வாழ்பவன் மருந்து கொண்டு ஓடுவான்' என்ற பாவேந்தரின் வரி ஊருக்கு உழைத்தல் யோகம் என்ற பாரதியின் கூற்றை நம் கண்முன் காட்சிப் படுத்துகிறது.

காலங்காலமாக எண்ணற்ற தியாகிகள், போராளிகள், தன்னார்வலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் தன்னல மின்றி ஊருக்காக, நாட்டுக்காக, தம் மக்களுக்காக உழைத்ததை வரலாற்றில் நாம் காண்கிறோம். தொழு நோயாளிகளுக்காக, ஆதர வற்றோர்களுக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த அன்னை தெரசா, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலார், தன் சொத்துக்களையெல்லாம் இழந்து நாட்டு விடுதலைக்காகச் செக்கி ழுத்த செம்மல் வ.உ.சி., தன் குடும்ப வறுமையை எண்ணிக் கவலைப் படாமல், எங்கோ பிஜித் தீவில் தோட்டத்து தொழி லாளிகள் படும் துன்பத்தை அறிந்து

கண்ணீர் விட்ட பாரதி, பசியோடு இருந்தால் பிள்ளைகள் படிக்க முடியாது என்று மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த கர்மவீரர் காமராசர், பேரிடர் காலங்களில் உணவு, உடை என்று உதவிக்கரம் நீட்டி பல உயிர்களைக் காத்த தன்னார்வலர்கள் என்று மனிதம் போற்றும் மாமனிதர்களை காலம் உள்ளவரை இம்மானுடம் வாழ்த்திக் கொண்டே இருக்கும்.

யாகம் என்றால் தீயை மூட்டி நெய்யை ஊற்றுவதா என்று கேட்கிறார் பாரதி. ஊரிலுள்ளோரும் உலகத்தாரும் நலமுற்று வாழ, உடல் வருந்தி உழைத்திடல் யாகம் என்கிறார் பாரதி. எப்பேர்ப்பட்ட தீர்க்கதரிசி பாரதி! இன்றைய சூழலில் நாகரிகப் போக்கில் மனிதம் என்பது சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கும் வேளையில், பாரதியின் கூற்றை நாம் உணர வேண்டும். மற்றவர்களுக்குக், குறிப்பாக இளையோருக்கு உணர்த்த வேண்டும். அவசர உலகில் பிறரைப் பற்றிய எண்ணமே சிறிதுமின்றித் தன்னலம் ஒன்றே குறிக்கோளாய், பணம், புகழ் என்று ஓடிக்கொண்டிருக்கும் மனித இனத்தை மீட்டெடுக்கும் ஆற்றல் மகாகவியின் வரிகளுக்கு மட்டும்தான் உண்டு. வறுமையால் பிறரிடம் பிச்சை யெடுக்கும் நிலையில், அதுவும் கோவில் வாசலிலே பிச்சையெடுக்கும் நிலையைக் கண்டும் கவலைப் படாமல் பூசை மட்டும் செய்து என்ன பயன் என்கிறார்.

'பக்கத் திருந்தவர் துன்பம் – தன்னைப்
பார்க்கப் பெறாதவன் புண்ணிய மூர்த்தி '

என்கிறார் .

கற்றறியா பாமரர்களுக்கு தன் எளிய நடை கவிதைகளால் வாழ்வியல் நெறியை, சமூக விழிப்புணர்வைக் கொண்டு போய்ச் சேர்த்த புதுமைக் கவி பாரதி. 'காக்கை குருவி எங்கள் சாதி..' என்று உயிர்நேயம் உரைத்த உன்னதக் கவி பாரதி. ஒரு முறை நண்பர் ஒருவர் அளித்த பட்டாடையை வழியில் மேலாடையின்றி அவதிப்பட்ட ஓர் ஏழைக்குப் போர்த்தி மகிழ்ந்த மனித நேயர் பாரதி. மற்றவர்களுக்கு அறிவுரை கூறுபவர்கள் தம் வாழ்க்கையில் அவற்றைக் கடைப் பிடிக்கின்றனரா என்று கேட்டால் ஒரு சிலரைத்தான் குறிப்பிட முடியும். அந்த வகையில், பாரதி, வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து, ஊருக்கு உழைத்த யோகக்காரர் என்று உறுதியாக நாம் கூறலாம்.

'நல்லவை செய்தலும் அல்லவை கடிதலும் அறம்
கொடையும் தயையும் பிறவிக்குணம் '

என்கிறார் ஔவையார்.

பண்பு மிக்க செல்வந்தர் வீட்டுக் குழந்தை புலவர் ஒருவருக்குத் தன் நடை வண்டியையே கொடைப் பொருளாகக் கொடுத்ததால் உள்ளம் சிலிர்த்து 'நடை கற்குமுன்னே கொடை கற்றாயே 'என்று பாடினாராம் ஔவை. இக்காலத்தில் இவ்வாறு நடக்குமா என்பது ஐயமே. ஏனெனில்சில பெற்றோர்களே'யாருக்கும் உன் பொருளைக் கொடுக்காதே' என்று குழந்தைகளுக்குக் கூறி வளர்க்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் வளரும் ஒரு பிள்ளை எதிர்காலத்தில் தன் வீடு, தன் பொருள், தன் உடைமை என்ற சிறு வட்டத்திற்குள் அடங்கிப் போகிறது. பின் எப்படி ஊருக்கு உழைக்கும் எண்ணம் அப்பிள்ளைக்கு வரும்? சிறு வயதிலேயே பிறருக்குப் பகிரும் எண்ணத்தை உருவாக்க வேண்டும். பகிர்ந்து உண்ண முதலில் பழக்க வேண்டும்.

அன்பைப் பகிர, அறிவைப் பகிர, பண்பைப் பகிரக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதைத்தான் பாரதி

கற்றுக் கொடுக்கிறார் நமக்கு, இவ்வைய கத்திற்கு. வறுமையான காலக் கட்டத் திலும் எல்லா உயிரினங்களும் பசியில்லா மல் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார் மக்கள் கவி. தன் மனைவி சமைக்க வைத்திருக்கும் அரிசியைக் கூடக் காக்கைக்கும், குருவிக் கும் வாரி இறைத்து விட்டு, பாரதி பசியோடு வாழ்ந்த நாட்கள் அதிகம். ஆனாலும் ஊருக்கு உழைத்திடவே உள்ளம் எண்ணுகிறது. அதனால்தான்

'தனியொருவனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்'

என்று வீறுடன் பாட முடிகிறது. அறம் பாட வந்த அறிஞனால். 'நீதி நெறியினின்று பிறர்க்குதவும் நேர்மையர் மேலவர். கீழவர் மற்றோர்' என்ற உலகக்கவி 'மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனி உண்டோ' என்று வினவுகிறார் நம்மிடம்.

அரசியலிலும், சமூக வீதிகளிலும் ஆங்காங்கே தலைவிரித்தாடிய சாதிய, பாலியல் வன்முறைகள் இன்று களங்க மற்ற பிள்ளைகள் பயிலும் கல்விக் கூடங்களிலும்எட்டிப்பார்க்கத் தொடக்கி விட்டன. இது எதிர்கால அழிவிற்கு ஓர் எச்சரிக்கை மணியாகும். இப்போதே நாம் விழித்துக் கொள்ள வேண்டும். ஊர் நலத்திற்காகப் பாடு பட்டவர்கள், பாடுபடுபவர்கள், ஊர் நலத்திற்காகப் போர் புரிந்தவர்கள், போராடிக் கொண்டிருப்பவர்கள், பண்பாளர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் அனைவரைப் பற்றியும் நம் பிள்ளைகளுக்கு, இளைய தலைமுறைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இணைய தளங்களும், ஊடகங்களும் இளைஞர்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கின்றன. மரபையும், மண்ணின் மாண்பையும், மனித நேயத்தையும் மறந்து, புதுமை என்ற பெயரில் வன்முறையை வரவேற் கும் நம் இளைய தலைமுறையை நாம் நல்வழியில் நடத்த வேண்டும். 'எளிமைகண் டிரங்குவாய் வா வா வா ஏறுபோல் நடையினாய் வா வா வா' என்று நம்பிக்கையுடன் அழைக்கும் பாரதியின் வரிகள் நம் உணர்வில் கலக்க வேண்டும்.

---

## குன்றென நிமிர்ந்து கொடிகட்டி வாழ்வோம் !

பாவகை : அளவடிச் சிந்து (நாற்சீரிரட்டை)

குன்றென வாழ்வில் கொடிகட்டி வாழ்வோம் - குணத்தால்
கொடுத்திடும் நெஞ்சமே கோடியை விஞ்சுமே!
இன்பமே ஓங்கிடும் இய ல்பெனும் வாழ்விலே - என்றும்
இனிமையாய் வாழ்வோம் இன்னலை நீக்கியே!


நன்மையைச் செய்திட நானிலம் போற்றுமே - நாளும்
நயன்மைக் காக்கவே நன்னெறி ஓங்குமே!
மென்மை மனத்திலே மேன்மையைக் கொள்ளவே - மெய்யாய்
மின்னல் ஒளியென மிளிரும் வாழ்க்கையே!



**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை** திண்டுக்கல்

# மானாவாரி மக்களும் மண்வாசத் தருணங்களும்...

வாழ்தலுக்கும்
பிழைத்தலுக்கும்
நடுவே ஊசலாடும்
போராட்டங்களில்
மனிதன் பெற்றுக்
கொள்ளும்
அனுபவங்களின்
தொகுப்பே வரலாறாக
மாறுகிறது. போர்க்களமும்
நாடுபிடித்தலும்
மட்டுமல்ல சரித்திரத்தில்
சம்பவங்களைப்
பதிய வைப்பதற்கு
சாதாரண மனிதனின்
வாழ்க்கைப்பாடுகளும்
துணை நிற்கின்றன.
தன்னலம் மறந்து
பொதுநலத்தை நோக்கி
மனிதன் நகரும் போது
அவனுக்குள் பாசம்
பரிவு பற்று கருணை
போன்றவை இயல்பாகவே
ஊற்றெடுக்கத்
துவங்குகின்றன.
தன்னைப்போலவே பிறரது
வாழ்வையும் எண்ணிப்
பார்க்கும்போதே
சமூகத்தின் மீதான
அக்கறை மனதினில்
வேர்விடத் துவங்குகிறது.




பக்கத்து வீட்டில்
குடியிருப்பவர் யார்
என்று அறிமுகமற்றுத்
தெரியும் நகரத்தின்
வாழ்க்கைப் பயணத்தை
விட கிராமத்தின் நீள
அகலங்களைத் தெரிந்து
வைத்திருக்கும் எளிய
மனிதர்களுக்குள்
எண்ணற்ற கதைகளும்
அவற்றின் வழியே
அனுபவங்களும்
புதைந்திருக்கின்றன.
தன்னைத்
தோணடுவோருக்குத்
தேவையானவற்றை
அள்ளித் தரும் நிலத்தின்
புதையலைப் போல
அப்பாவித்தனத்தாலும்
அசராத உழைப்பாலும்
உடலையும் மனதையும்
உறுதிப்படுத்திக் கொண்ட
கிராமத்திடம் எப்போதும்
நமக்கான நகர்தலுக்குப்
பாதைகளைக் கண்டறிய
முடியும். அவற்றின் வழியே
உள்ளத்தை ஈரமாக்கும்
காவியங்களையும் காண
முடியும் உலகத்தை
கட்டியாளும் வீரத்தையும்
அளந்திட முடியும்.

பருவத்தை
எதிர்நோக்கும் உயிர்களின்
பிரசவத்தில் கோழிகளின்
முன்னேற்பாடுகளைப்
போல மழைக்காலத்தை
அறிந்துகொண்டு
உழைப்பைக் கூட்டும்
எறும்புகளின்
சுறுசுறுப்பைப் போல
நீரோட்டத்தைக்

கண்ட பின்னே புற்றுக்களை உருவாக்கும் கரையான்களின் நுண்ணறிவைப் போல கிராமம் தனக்குள் பசுமையைப் பொத்தி வைத்திருக்கிறது. பண்புகளைப் புதைத்து வைத்திருக்கிறது. பந்தங்களுக்குள் சுழன்று கிடக்கிறது தென்றலாகத் தீண்டுகையில் காற்றைக் கொஞ்சும் நமக்குள்ளே சூறாவளியைக் கண்டதும் அச்சத்தின் திசைகள் திறந்து விடுகின்றன. கிராமத்து மனிதனுக்குள்ளும் அடுத்தவரின் கவலைகளுக்கான சிந்தனைகள் துளிர்த்து விடுகையில் உதவிகளும் தானே நடக்கத் துவங்கும். மேகத்தின் கண்ணீர் மண்ணை முத்தமிடுகையில் வாசத்தை தூது அனுப்பி உறவாடும் மண்ணின் பிணைப்பைப் போல உருண்டோடும் நீரை உள்ளே வாங்கி தன்னை உருவாக்கிக் கொள்ளும் நிலத்தின் சேர்க்கையைப் போல அவனுக்குள் எப்போதும் திண்டாடும் வாழ்வுக்கு மத்தியிலும் கரத்தைப் பிணைக்க நீட்டும் அன்பு சுரந்தே கிடக்கிறது.

அத்தகு கதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் வாழையூர் குணா அவர்களின் இத்தொகுப்பில் 18 சிறுகதைகள் மலர்ந்து மணம் வீசுகின்றன.. தலைமுறை இடைவெளி கால்நடைகள் மீதான மக்களின் அன்பு வயதானாலும் விட்டுப் போகாத உழைப்பின் வீரியம் வறுமையின் கொடுமையிலும் அடுத்தவருக்காக நீளும் தாலி இயற்கையைப் போற்றும் விடலைப் பருவம் பெண்ணின் மீதான ஆணின் வக்கிரத்தனம் மாற்றங்களால் தன்னை உருவாக்கிக் கொள்ளும் கிராமத்தின் வனப்பு பிள்ளைகள் இருந்தும் அனாதையாகிப் போன பெற்றோர் சாதிச் சண்டைகளில் மனிதத்தை புதைத்துக் கொண்ட சமூகம் சிலைகளுக்கு கொடுக்கும் மதிப்பை விட மனிதர்களுக்கு கொடுப்பது சாலச் சிறப்பு என்பதை உணர்த்தும் பாடம் மனிதத்தை விட உறவுகளை விட பணமே பெரிதெனும் கூட்டம் என நிறைய அனுபவங்கள் விளைந்து கிடக்கின்றன.

நூலாசிரியர் ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பு வகித்திருப்பதால் பல்வேறு மனிதர்களின் பிரச்சனைகளை அறிந்து கொள்ளவும் ஆழமாக உள்வாங்கவும் முடிந்திருக்கிறது. பிரச்சனைகளின் தன்மைக்கு ஏறப முழுமையான தீர்வை நோக்கி நகர்த்தும் பாங்கில் அவர் கண்ட கேட்ட அனுபவித்த கதைகளின் பாதிப்புகள் இந்த தொகுப்பை கனமாக்கி விடுகின்றன.

கல்வியறிவை விட பட்டறிவால் உணர்ந்து கொள்ளும் பாடத்திற்கு மதிப்பதிகம் என்பதை இந்தத் தொகுப்பில மாந்தர்கள் தெளிவாக உணர்த்தி விடுகிறார்கள். வேப்பம்பழம் பொறுக்கி தனது வாழ்வை நகர்த்தி பிள்ளைகளை ஆளாக்கி வளமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்துவிட்ட கிழவியைக் காணும் போது உழைப்பின் மீதான பற்றை உணர முடிகிறது. இயற்கை மீதான நேசத்தை வெளிப்படுத்தும் கிழவியின் எண்ணத்தில் இருக்கும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கற்றறிந்தவர்களுக்குக் கூட எழுவதில்லை.

விவசாயத்தில் முதுகெலும்பாக கிராமங்களின் வாழ்வாதாரமாக

விளங்கும் மாடுகளைப் போற்றும் 'லட்சுமி' கதையில் மாடுகளைப் பராமரிப்பது பற்றிய கல்வியை பல்கலைக்கழகத்திலும் கற்றுக் கொள்ள முடியாது. அமராவதியின் மாடுகள் மீதான அக்கறையும் பராமரிப்பின் விவரிப்புகளும் மாடுகள் மீதான பேரன்பை நமக்குள் கடத்தி விடுகின்றன. தனது பிள்ளைகளை விட மாடுகளை அவர் வளர்த்தெடுக்கும் விதமும் மாட்டுக்காக அவர் தன்னை ஒப்படைத்துக் கொண்ட தியாகமும் மனிதர்களுக்கு மனிதத்தை விதைப்பதில் முன்னிற்கின்றன.

எளியோரை வலியோர் படுத்தும் பாடுகள் எத்தனை தலைமுறையானாலும் மாறப்போவதில்லை என்பதை பன்றி வளர்ப்பதின் மூலம் 'குடீஸ்' கதை சொல்லிவிடுகிறது

கிராமத்தில் வளரும் மாணவர்கள் விடுமுறை நாட்களில் பல்வேறு வேலைகளுக்குச் சென்று பெற்றோர்களுக்கு உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உதவும் தன்மையைப் பெற்றவர்கள்." சீமை' கதையும் அத்தகைய நான்கு மாணவர்களை படம் பிடிக்கிறது. கருவேல மரங்களை வெட்டி வாழ்வை நகர்த்தும் அவர்களின் பிழைப்பிலும் கரி அள்ளிப் பூசுகிறது சமூகம். மரங்களை வெட்டுவது எப்படி என இக்கதை நமக்கு கற்றுத் தரும் அதே வேளையில் மக்களின் வாழ்க்கைப் பாட்டை அழிப்பது எப்படி என்பதையும் சொல்லிச் செல்கிறது

தொகுப்பின் ஆகச்சிறந்த மனிதத்தை விதைக்கும் கதையாக 'கிராமம்' காட்சியளிக்கிறது. எண்பது கோடிக்கும் மேற்பட்டோர் விரல்களில் விளையாடும் அலைபேசிக்குக் கொடுக்கும் மதிப்பை சுகாதாரத்திற்கு கொடுக்காமல் பொது வெளியில் மலம் கழிக்கும் பெண்களின் நிலையை எடுத்துச் சொல்வதோடு நின்று விடவில்லை இக்கதை. ஒரு பெண்ணைப் பார்த்து காதலிக்கும் ஒருவன் அவள் இறப்பிற்குப் பிறகு என்ன செய்து அந்த கிராமத்தை உயிர்ப்பிக்கிறான் என்பதை இக்கதை படம் பிடித்துக் காட்டுகிறது. காதலின் ஆழம் காதலியின் மீது மட்டுமல்ல அவளைப் போல அபலைப் பெண்களின் அவலத்தை துடைப்பதிலும் முன் நிறபதை நகுல் வெளிப்படுத்தி விடுகிறான்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய ஊரின் ஒற்றை அடையாளமாய் ஓங்கி வளர்ந்திருந்த ஆலமரம் காலப்பெருவோட்டத்தில் காணாமல் போனதை ஏற்றுக் கொள்ள முடியாத மனத்தின் புலம்பலை': தவிப்பு' வெளிப்படுத்துகிறது

வாழும்போது பெற்றோர்களை கவனிக்காமல் அனாதையாக விரட்டி விட்டு மிதப்பில் ஆட்டம் போடும் பிள்ளைகளின் மனநிலையை 'இரட்டை விருந்து' 'தான செட்டில்மெண்ட்' கதைகள் விவரிக்கின்றன.

சாதியால் பிளவுண்டு நிற்கும் சமூகத்தில் கடவுள் சிலை ஊர்வலங்களாலும் பயனில்லை அதிகாரத்தின் சட்டங்களாலும் பயனில்லை. விடுதலை பெற்ற நாட்டில் இன்னும் மனங்களுக்குள் ஆண்டாள் அடிமைத்தனம் இருக்கும் வரை சுதந்திரக் காற்றுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை விநாயகர் சிலை சுதந்திரக் காற்று கதைகள் கோடிட்டுக்

காட்டுகின்றன.

எலி பிடிப்பதில் வல்லவனான ஒருவனுக்கு பிறக்கும் பிள்ளையும் இறந்தே பிறக்கிறது அதைப் பார்க்கையில் எலிக்கறி போலவே அவனுக்குத் தெரிகிறது. உலகம் ஒரு கண்ணாடி தானே நாம் எதை காட்டுகிறோமோ அதையே அதுவும் திருப்பிக் காட்டுகிறது. எலியை எப்படி வேட்டையாடுவது எலிக்கறியை எப்படி சமைப்பது என விவரிப்புகள் நம்மை வியக்க வைக்கின்றன.

பிணத்தை எரிப்பவனின் வேலைகள் சவரத் தொழிலாளியின் குடும்ப நிலை என விரியும் 'நேர்த்திக்கடன்' கதையில் சாவுக்கு வேலை செய்துவிட்டு வாங்கி வரும் கூலியை வைத்து தனது பிள்ளைக்கு முடியிறக்கும நேர்த்திக் கடனை முடிக்கும் சவரத் தொழிலாளியின் வறுமை வெளிப்படுகிறது.

வாழையூர் குணாவின் சிறுகதைகள் வாசித்து முடிக்கையில் கிராமத்தில் பிறந்து அங்கேயே வாழ்ந்து முடிந்த நிறைவைத் தரும் அனுபவங்கள் கிடைக்கின்றன.

**வாழையூர் குணா**
**சிறுகதைகள்**

**வெளியீடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**

***முதல் பதிப்பு செப்டம்பர் 2025 / பக்கம் 190/ விலை ரூபாய் 160***

## இளையவன் சிவா

---

# அன்பென்றால்.....

**ஐந்து வருடங்களின் தனிமை வாழ்க்கை அவளுக்குப் பழகிப் போயிருந்தது.**

பழகிப் பிரிந்தவர்களின் உரையாடல்கள் அவ்வப்போது அவளது செவியில் எதிரொலித்துக் கொள்ளத் தவறுவதில்லை.

பாடசாலைக் காலத்தில் தன்னைக் காதலிப்பதாகச் சொல்லி தொல்லை தந்து கொண்டு 'உன்னைத் தவிர வேறு யாரையும் திருமணம் முடிக்க மாட்டேன். என் உயிர் உள்ளவரை உனக்காக எதையும் செய்வேன்' என்றவன் அவளது வீட்டிலிருந்து இரண்டு தெருக்கள் தள்ளித் திருமணம் முடித்து குழந்தை குட்டிகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

'நீ வாழ்க்கையில் எந்நிலையில் இருந்தாலும், உனக்கு உதவிடும் வாய்ப்பொன்று கிடைத்தால் அதைத் தவற விடவே மாட்டேன் 'என்று சொன்ன ஒருவனையும் அவ்வப்போது எங்கேயேனும் காண நேரிடுகின்றது.

இப்படியாகக் காதலிப்பதாகச் சொன்ன போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றிலே கலைந்து போய் இருக்க வேண்டும்.

உயர்கல்வி முடிந்து இறுதித் தருவாயில் பரிமாறிக் கொண்ட ஒட்டோகிராப்பில் 'எவ்விடம் வாழ்ந்திடினும் உன் சுயத்தை இழக்காதே' என்றெழுதியவன் மட்டும் அவளது கணவன் இறந்ததில் இருந்து மாதம் தவறாமல் பணம் அனுப்பிக் கொண்டிருக்கின்றான். எந்தவிதமான வாக்குறுதிகளோ, உரையாடல்களோ இல்லாமல்.

**மக்கொனையூராள்**

# ஹைக்கூ கவிதைகள்

1.
மூடிய கோயில்
திறந்தே கிடக்கிறது
பசியின் வாசல்

2.
தீர்த்த யாத்திரை
தண்ணீரின்றி தவிக்கும்
கிராமப் பாதை

3.
மந்திர ஓசை
மௌனமாக நின்றது
உண்மைக் கேள்வி

4.
விண்ணைப் பார்த்து
கைகளை நீட்டுகிறான்
வறிய மனிதன்

5.
கோபுர நிழல்
குடிசை வரை வரவில்லை
மதிய வெயில்

6.
நேர்த்திக் கடன்
செலுத்த முடியாமல்
அடமான நிலம்

– சு. சுப்புராஜ்





1.
பருவ காலங்கள்
வழமைக்குத் திரும்புகின்றன
தேர்தல் வாக்குறுதிகள்

2.
விருந்துகளில் பணக்காரர்கள்
நிறைந்திருக்கிறார்கள்
நுழைவாயிலில் யாசகர்கள்

3.
தொழிநுட்ப முன்னேற்றம்
நகர நேரமில்லை
கையில் தொலைபேசி

4.
சமைக்கும் பெண்
மூர்ச்சை ஆகிறாள்
பசியோடு பிள்ளை

5.
உடைந்த மனம்
ஒட்டுவதாய் இல்லை
ஆணின் விவாகரத்து

6.
தேயிலை தோட்டத்தில்
பறிக்கப்படுகிறது
பெண் உரிமை



7.
அடுப்பில் விறகு
புகைந்து கொண்டிருக்கிறது
பெண்ணின் புலம்பல்

8.
அன்பின் மொழியில்
சரணடைகின்றன
உயிர்கள்

9.
அன்பு மனதில்
ஆழமாய் வேரூன்றும்
அழியா நினைவு

10.
அன்பின் முகம்
அழைத்து ஆதரிக்கிறது
நல்ல நட்பு

11.
அன்பின் வடிவம்
அம்மா என்கிறது
அனைத்து உயிர்களும்

12.
அன்பின் தொடர்
முடிவதாயில்லை
சோதனை

சேஹூ மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.



# நிழலின் அருமை

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்,**
**ஓட்டமாவடி**

அந்த அழகிய அந்திப்பொழுது எப்போதும் போலவே அமைதியாகப் படர்ந்திருந்தது. ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த அந்தப் பழைய சிமெண்ட் பெஞ்சில் அஸ்மாவும், பரீனாவும் அமர்ந் திருந்தார்கள். அந்த இடத்திற்கும் அவர்களுக்குமிடையே ஒரு ஆத்மார்த்த மான உறவு இருக்கிறது. சிறுவயதிலிருந்தே இருவரது ஓய்வான பொழுதுகளும் இந்த இடத்தில் தான் அதிகம் கழிந்திருக்கிறது. அது போல் தான் இன்றும் இருவரும் அந்த இடத்திற்கு தமது ஓய்வு நேரத்தை கழிப்பதற்காக வந்திருந்தார்கள்.

பரீனாவின் கண்கள் அஸ்மா அணிந் திருந்த அந்தப் புதிய தங்க வளையல் களையே மொய்த்துக் கொண்டிருந்தன..

'என்ன பரீனா... அப்படிப் பார்க்கிறாய்? நேத்து ரசீத் இதைக் கொண்டு வந்தாரு. 'உன் கைக்கு இதுதான் அழகா இருக்கும் அஸ்மா'ன்னு அவரே போட்டு விட்டாரு தெரியுமா?' என்று அஸ்மா வெட்கத்துடன் சிரித்தாள்.

பரீனா ஒரு பெருமூச்சை வெளியேற்றி விட்டு, தனது கைகளை மறைக்க முயன்றாள். 'ரொம்ப அழகா இருக்கு அஸ்மா. ரசீத்நானா கெடச்சதுக்கு நீ குடுத்து வச்சுருக்கனும்டி மா.. உன்னை ராணி மாதிரிப் பார்த்துக்கிறாரு. என் கதையைத் தான் உனக்குத் தெரியுமே... நேத்து ஒரு நல்ல அபாயா எடுத்துத் தாங்கன்னு அவர்கிட்ட கேட்டேன். 'இந்த மாசம் மழையால வேலை கம்மி பரீனா, அடுத்த மாசம் பாக்கலாம்'னு ஒத்த வரியில முடிச்சுட்டாரு. சில நேரத்துல எனக்கு அழுகையே வந்துடும்' என்றாள் கசப்புடன்.

அஸ்மா அவளது கையைப் பற்றிக் கொண்டாள். 'அப்படிச் சொல்லாதே பரீனா. காசிம் நானா உன்மேல வச்சிருக்கற அன்பு யாருக்குக் கிடைக்கும்? அவரு உழைப்பாளி, ரொம்ப நேர்மையானவரு. காசு பணம் எல்லாம் இன்னைக்கு வரும், நாளைக்கு போகும். ஆனா அன்புதான் என்னைக்கும் நிலைச்சு நிக்கும்' என்று ஆறுதல் கூறினாள்.

ஆனால் பரீனாவின் உள்ளம் அதை ஏற்கவில்லை. 'அன்பு மட்டும் வயித்தை நிரப்புமா அஸ்மா? நீ நினைச்ச இடத்துக்கு கார் வருது, நினைச்சதை வாங்கறே. எனக்கு ஒரு சின்ன ஆசை நிறைவேறக்கூட அடுத்த மாசம் வரைக்கும் காத்துக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு. நிம்மதிங்கறது வசதியிலதான் இருக்குன்னு எனக்குத் தோணுது' என்றாள். அஸ்மாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியாமல்

சங்கடமாகிப் போனாள்..

அப்படியே நாட்கள் உருண்டோடின..

பரீனாவின் வீட்டில் ஒவ்வொரு நாளும் ஒப்பீடுகள் ஒரு கசப்பான போராகவே மாறியது. ஒரு நாள் இரவு காசிம் வேலை முடிந்து களைப்பாக வந்தபோது, பரீனா முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

'ஏன் பரீனா, முகம் ஒரு மாதிரியா இருக்கு? உடம்புக்கு ஏதும் முடியலையா?' என்று காசிம் அக்கறையாக நெற்றியில் கையை வைத்தவாறு கேட்டான். பரீனா உடனே கையைத் தட்டி விட்டு 'உடம்புக்கு ஒன்னும் இல்லை, மனசுக்குத்தான் ஏதோ பண்ணுது.. இன்னைக்கு அஸ்மா வீட்டுக்கு போயிருந்தேன். அவ புருஷன் அவளுக்குப் புதுசா ஐபோன் வாங்கித் தந்துருக்காரு. எனக்கு ஒரு சாதாரண போன் கூட வாங்கித் தர உங்களுக்குத் துப்பில்லை. கூலி வேலை செய்யறவங்களைக் கட்டிக்கிட்டதுக்கு இதுதான் எனக்குக் கிடைச்ச பரிசா?' என்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

காசிம் மௌனமாக நின்றான். அவனது கண்கள் கலங்கின. 'பரீனா, நான் என்ன திருடியா வர முடியும்? வெயில்லயும் மழைலயும் நான் சிந்துற ஒவ்வொரு துளி வேர்வையும் உனக்காகத்தான். என்கிட்ட இருக்கறதை வச்சு உன்னைச் சந்தோஷமா வச்சுக்கப் பாக்கறேன். ஆனா உனக்கு அஸ்மா வாழ்க்கைதான் பெருசாத் தெரியுது. ஒருநாள் இந்த ஆடம்பரத்துக்குப் பின்னாடி இருக்கற வலி என்னன்னு காலம்



உனக்குச் சொல்லும்..' என்று கூறிவிட்டு படுக்கச் சென்று விட்டான்..

சில வாரங்களுக்குப் பிறகு, அஸ்மாவின் வாழ்க்கையில் அந்தப் பேரிடி விழுந்தது. அஸ்மாவின் வீட்டில் அன்று ஆடம்பர அமைதி நிலவியது. ஏசி மெல்லிய சத்தத்துடன் ஓடிக்கொண்டிருக்க, அஸ்மா தனது அறையில் அமர்ந்து ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஆனால், அவளது கவனம் அதில் இல்லை. கடந்த ஒரு மாதமாக ரசீத்தின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் தெரிந்தது. எப்போதும் அவளோடும் குழந்தையோடும் பொழுதைக் ழிக்கும் அவர், இப்போது வீட்டுக்கு வருவதே ஒரு கடமை போல இருந்தது.

அன்று இரவு 11 மணி இருக்கும். ரசீத் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரது கைப்பேசி மேசையில் மெல்ல அதிர்ந்தது. ஒரு குறுஞ்செய்தி வந்திருந்தது. பொதுவாக அஸ்மா அவர் போனைத் தொடுவதில்லை. ஆனால், அந்த நள்ளிரவு நேரத்தில் வந்த செய்தி அவளுக்குள் ஒரு இனம் புரியாத நடுக்கத்தைத் தந்தது. மெல்ல போனை எடுத்துப் பார்த்தாள்.

**'தூங்கிட்டீங்களா? நாளைக்கு நம்ம புது வீட்டுக்கு அந்த லெதர் சோபா வருது. நீங்க நேர்ல வந்து பாத்தா நல்லா இருக்கும் - இப்படிக்கு நூர்.'**

அஸ்மாவின் இதயம் ஒரு நிமிடம் நின்றது போலிருந்தது. 'புது வீடா? நூர் யாரு?' அவளது கைகள் நடுங்கின. தூக்கத்திலிருந்த ரசீத்தை எழுப்பினாள்.

'ரசீத்... ரசீத்... எழுந்திருங்க!'

ரசீத் கண்கள் சொருக எழுந்து அமர்ந்தார். 'என்ன அஸ்மா? இந்த நேரத்துல ஏன் எழுப்புற?'

'இந்த போனைப் பாருங்க. யாரு இந்த நூர்? எதுக்கு உங்களுக்கு இப்போ மெசேஜ் பண்றாங்க? எந்தப் புது வீட்டைப் பத்திப் பேசுறாங்க?' அஸ்மாவின் குரல் கம்மியது.

ரசீத் ஒரு நிமிடம் அதிர்ந்து போனார். ஆனால், அடுத்த கணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்டு போனைப் பிடுங்கினார். 'இது... இது பிசினஸ் அஸ்மா. நூர் என் கம்பெனியோட புது பார்ட்னர். நாங்க ஒரு புது ஆபீஸ் கட்டறோம், அதைத்தான் அவ அப்படிச் சொல்லியிருக்கா. நீ ஏன் தேவையில்லாம சந்தேகப்படுற?' என்று எரிச்சலோடு கத்தினார்.

'பிசினஸ் பார்ட்னர் நள்ளிரவுல இப்படியா மெசேஜ் பண்ணுவாங்க? நிஜத்தைச் சொல்லுங்க ரசீத்.. உங்களுக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்?' அஸ்மா விடவில்லை.

'போதும் நிறுத்து அஸ்மா! உனக்குத் தேவையான எல்லா வசதியையும் நான் செஞ்சு தர்றேன். இந்த வீட்ல உனக்கு என்ன குறை? தேவையில்லாத விஷயத்துல தலையிடாதே' என்று கூறிவிட்டு போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றார். அன்று இரவு முழுவதும் அவர் உள்ளே வரவில்லை.

மறுநாள் காலை, அஸ்மா ஒரு முடிவெடுத்தாள். ரசீத் கம்பெனிக்குச் சென்ற பிறகு, தனக்குத் தெரிந்த ஒரு நண்பர் மூலம் ரசீத்தின் கார் எங்கே செல்கிறது என்பதைக் கண்காணித்தாள். மாலையில் அந்த நண்பரிடமிருந்து போன் வந்தது. 'அஸ்மா, ரசீத் பிரதர் இப்போ சிட்டிக்கு வெளியே இருக்கிற ஒரு புது வில்லாவுக்குப் போயிருக்காரு. கூட ஒரு பெண்ணும் இருக்காங்க.'

அஸ்மாவுக்கு உலகம் சுற்றியது.

உடனடியாக ஒரு டெக்ஸியைப் பிடித்து அந்த முகவரிக்குச் சென்றாள். அது ஒரு பிரம்மாண்டமான வீடு. ரசீத்தின் கார் வாசலில் நின்றது. படபடக்கும் இதயத்துடன் உள்ளே நுழைந்தாள். அங்கே ரசீத்தும், ஒரு இளம்பெண்ணும் சிரித்துப் பேசிக்கொண்டே சோபாவில் அமர்ந்திருந்தனர்.

அஸ்மாவைக் கண்டதும் ரசீத் திடுக் கிட்டு எழுந்து நின்றார். அந்தப் பெண்ணின் முகத்தில் எந்தப் பயமும் இல்லை.

'நீ இங்க எதுக்கு வந்த அஸ்மா?' ரசீத்தின் குரலில் அதிகாரம் இருந்தது.

'நீங்க இங்க என்ன பண்றீங்க ரசீத்? யாரு இந்தப் பெண்?' அஸ்மா கதறினாள்.

அந்தப் பெண் எழுந்து வந்து, 'ஏய்.. ஏன் கத்துற?நான்தான் நூர். ரசீத்தோட ரெண்டாவது மனைவி. நாங்க மூணு மாசத்துக்கு முன்னாடியே நிக்காஹ் செஞ்சுக்கிட்டோம்' என்று ஆணவம் கலந்த அமைதியோடு சொன்னாள்.

அஸ்மா நிலைகுலைந்து போனாள். 'ரசீத்... இது உண்மையா? எனக்குத் தெரியா மலா? என் வாழ்க்கையை இப்படியா சிதைப்பீங்க?' என கதறி அழுதாள்...

ரசீத் இப்போது வெடிக்கத் தொடங்கி னார். 'ஆமா அஸ்மா, இது உண்மைதான். நூர் என் பிசினஸை கவனிச்சுக்கிறா. எனக்குத் துணையா இருக்கா.. உன்னை விட பிசினஸ் நொலேஜ் அவக்கு இருக்கு.. உனக்கு நான் எதைக் குறை வச்சேன்? நகை குடுத்தேன்.. கார் குடுத்தேன்.. அந்த வீட்டுல நீ ராணி மாதிரி இருக்கலாம்.. அவ இங்க இருப்பா.. உனக்கு வசதிதானே முக்கியம்? அதை நான் தர ரெடியா இருக்கேன். அப்புறம் என்ன உனக்குத் தேவை?'

'வசதி மட்டும்தான் வாழ்க்கைன்னு நினைச்சீங்களா ரசீத்? என் அன்பு, என் விசுவாசம் இதெல்லாம் உங்களுக்குக் கேலியா போச்சா? ஒரு துரோகியோட பணத்துல வாழ்றதை விட, ஒரு ஏழையா தெருவுலநிக்கிறது மேலானது.. இப்போவே இந்த நிமிஷமே நான் உங்களை விட்டுப் போறேன்' என்று கதறினாள் அஸ்மா.

'போய்க்கோ... உன்னை யாரும் தடுக்கல. ஆனா ஒன்னு தெரிஞ்சுக்கோ, அந்த வீட்ல இருக்குற ஒரு பொருள் கூட உனக்குச் சொந்தம் இல்லை.. எல்லாத்தையும் நான்தான் வாங்கிக் குடுத்தேன்..' என்றார் ரசீத் அலட்சியமாக..

அஸ்மா தனது கழுத்திலிருந்த வைரக் கல் பதித்த மாலையையும், கைகளிலிருந்த வளையல்களையும் கழற்றி அங்கிருந்த மேசையில் வீசினாள். 'இந்த அழுக்கு எனக்கு வேண்டாம் ரசீத்.. நான் பணத்தை காணாத பொண்ணு இல்ல.. வசதி மேல எனக்கு ஆசையுமில்ல.. நான் உங்கள உண்மையா நேசிச்சன்.. உங்க துரோகம் கலந்த ஒரு காசு கூட என் உடம்புல இனி



இருக்கக் கூடாது..' என்று சொல்லிவிட்டு அழுதுகொண்டே வெளியே ஓடினாள்..

ரசீத் கல் போல் நின்றான்.. அவனது இதயமும் கல் போல் தான் இறுகி இருந்தது.. 'ஹனி.. டோன்ட் வொரி.. போகட்டும்! எப்படி போக வைக்குறது எங்குற டென்ஷன் இனி நமக்கில்லை..' என மனதில் பூரித்த சிரிப்போடு அவனது கையைப் பற்றினாள் நூர்..

அஸ்மா உடைந்து போனாள்.. வீட்டுக்கு வந்து அறையில் அமர்ந்து கதறி அழுதாள்.. அவளை சுற்றியுள்ள அனைத்தும் அவளை நெருஞ்சி முள்ளாய் வருத்தின.. அவளது பெற்றோர் விவரம் அறிந்து ஓடி வந்தனர்.

அவளது தந்தை சொன்னார், 'அஸ்மாம்மா, காசுக்காக ஒரு துரோகியோட நீ வாழ வேண்டிய அவசியம் இல்லை. வா... நம்ம வீட்டுக்குப் போயிடலாம்.. உனக்கும் உன் குழந்தைக்கும் நாங்க எதற்கும் குறை வைக்க மாட்டோம்..'

அஸ்மா தனது பெட்டிகளை எடுத்துக் கொண்டு அந்த மாளிகையை விட்டு வெளியேறினாள்.

மறுநாள் காலையில் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு பரீனா அதிர்ச்சியுடன் ஓடி வந்தாள். அஸ்மா தனது பெற்றோர் வீட்டில் சோர்வாக அமர்ந்திருந்தாள்..

'அஸ்மா... என்ன இதெல்லாம்? ரசீத் நானா இப்படியா செய்வாரு? நம்பவே முடியலையே!' என்று பரீனா பதறினாள்.

அஸ்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சொன்னாள், 'பார்த்தியா பரீனா? நீ எதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டியோ, அந்த வாழ்க்கை இன்னைக்குச் சாம்பலாகிடுச்சு. ரசீத் எனக்கு எல்லாத்தையும் தந்தாரு, ஆனா உண்மையான நேர்மையைத் தரல. அன்னைக்கு நீ சொன்னியே நிம்மதி வசதியிலதான் இருக்குன்னு... இன்னைக்கு அந்த வைரத்தை விட உன் வீட்டுல காசிம் தர்ற அன்பான அரவணைப்பு எவ்வளவோ மேலானதுன்னு எனக்குத் தோணுது.'

பரீனா அப்படியே உறைந்து நின்றாள். அன்று மாலை அவள் வீட்டுக்குத் திரும்பியபோது காசிம் வாசலில் அமர்ந்து அவளுக்காகக் காத்திருந்தான்.

அவள் வந்ததும், 'பரீனா, இன்னைக்கு கொஞ்சம் எக்ஸ்ட்ரா வேலை கிடைச்சது.. இதோ உனக்குப் பிடிச்ச நெய் பூந்தி வாங்கிட்டு வந்திருக்கேன். அஸ்மா எப்படி இருக்கா?' என்று கனிவோடு கேட்டான்.

பரீனா ஓடிச் சென்று காசிமின் கைகளைப் பற்றிக் கொண்டு கதறி அழுதாள். 'காசிம், என்னை மன்னிச்சுடுங்க. இவ்வளவு காலமா உங்களோட அன்பைப் புரியாம, கானல் நீரைப் பார்த்து ஏங்கிக்கிட்டு இருந்தேன்.. அஸ்மாகிட்ட இல்லாத ஒன்னு என் கிட்ட இருக்கு... அது உங்களோட உண்மையான அன்பு. இந்த ஒரு வேளைக் கஞ்சியும், உங்களோட நேர்மையும் போதும் எனக்கு. இனி ஒருபோதும் நான் எதற்கும் ஆசைப்படமாட்டேன்' என்று அழுதுகொண்டே அவன் மார்பில் சாய்ந்தாள்.

காசிம் சிரித்துக்கொண்டே அவளது கண்ணீரைத் துடைத்தான். அன்று அந்தச் சிறிய ஓட்டு வீட்டில் பரவியிருந்த நிம்மதி, அஸ்மாவின் மாளிகையில் ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இருவரும் உணர்ந்தனர்.

முற்றும்

## கூலி

தலை வாரிவிடுவதற்குக்
கூலியாக
சில முடிகளைப்
பெற்றுக்கொள்கிறது
சீப்பு.

## கரும்பலகை

எழுத்துக்களை
உருவாக்கும்
கருவறையாகவும்
அதையே அழிக்கும்
கல்லறையாகவும்
இருக்கிறது
கரும்பலகை.

## தூசி

வாசிக்கப்படாத
புத்தகங்களை
தாமும் தம்
பங்கிற்கு
அவமதிக்கிறது
தூசி.

## யாசகனுக்கு

கையும் காலும்
சரியாக இருந்தாலும்
யாசகனுக்கு
யாரும்
வேலை கொடுப்பதில்லை
பிச்சை மட்டுமே
போடுகிறார்கள்.



## துளிப்பாக்கள்

**பிள்ளையார் சதுர்த்தியில்
பிள்ளையின் ஞாபகம்
பிள்ளையின் பிரிவு!**

**கிழிந்த மெத்தையில்
படுத்துக் கிடக்கிறன
நினைவுச் சுமைகள்!**

**பதவி மோகத்தில்
விளைந்தன புதிய கட்சிகள்
பாவம் பொது மக்கள் !**

**பெயரோ ஆறு
குளிக்க முடியவில்லை
கூவம் ஆறு!**

**என்றோ மண்ணில்
வீசி எறிந்த விதை
இன்று நிழல்தரும் மரம்!**



கவிஞர் பூ..சுப்ரமணியன்
பள்ளிக்கரணை, சென்னை

## புகார்

புதிதாகத் தோன்றிய
கவிதை,
தாள் எடுத்து
எழுதுவதற்குள்
நினைவில் இல்லை
மறதியின் மீது
புகார் அளிக்கப்பட்டுள்ளது.

கவிஞர் எம்.சோலை
அம்பத்தூர்.



# இன்னொரு ‘நான்”

நீ இல்லாவிட்டால்
நான் இருப்பேன்

நீ இருந்தால்
நான் இல்லை

நீ இருந்தால்
அங்கிருப்பது
இன்னொரு நான்

நீ இருந்தால்
உன்னோடிருப்பது
வேறு நான்!!

நீ இல்லாவிடில்
நானெனும் அகந்தை இருக்கும்;

நீ இருந்தால்
நானெனும் நீட்சி இருக்காது

உன்னால் -
அங்கிருப்பது பழைய நானல்ல,

உன்னில் கரைந்து உருமாறிய
இன்னொரு நான்தான்

நீ இல்லாத போது
நான் தனித்தீவு;

நீ வந்த பின்
உன் கடலில் கரைந்த உப்பு நான்

உன் முன்னிலையில்
நானில்லை...

அங்கிருப்பது
நீ தந்த புதிய ஒளி

என்னுள் முளைத்த
வேறொரு நான்!

நீயற்ற பொழுதில் - நான்.
நீயுள்ள பொழுதில் - ’நாம்’.

நீ இருக்கும் இடத்தில்
நான் இல்லாது போய்விடுகிறேன்...

உன்னாதி ஸ்பரிசித்து
உயிர்த்தெழுவதற்காக,

நீதான் மாற்றுகிறாய் என்னை

முற்றிலும் புதியதொரு
ஆன்மாவாக,
வேறொரு நானாக!

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை



## எழுத எனக்குத் தோன்றவில்லை

எழுத எனக்குத் தோன்றவில்லை
  எதற்கோ என்றால் தெரியவில்லை
அழுந்தும் கவலை விலகவில்லை
  அதற்கா என்றால் இல்லையில்லை
கழுத்தை நெரிக்க.. முடியவில்லை
  கரையா பிணிக்கோ முடிவுமில்லை
உழன்றே எழுவேன் சரிவுமில்லை
  உடனே செய்வேன் துயருமில்லை..

தள்ளி எழுவேன் முயற்சியுடன்
  தமிழால் உயர்வேன் இனிதாக
அள்ளி எடுப்பேன் அழகாக
  அணிந்து மகிழ்வேன் அணியாக
துள்ளிக் குதிப்பேன் மகிழ்வாக
  துயரும் விலகும் முடிவாக
பள்ளிப் பிள்ளை நானாக
  படித்து மகிழ்வேன் துடிப்பாக

விழுந்த விதையாய் முளைத்திடுவேன்
  விடியல் காணத் துடித்திடுவேன்
அழுத கண்ணைத் துடைத்திடுவேன்
  அடுத்த அடியை வைத்திடுவேன்
பழுத்தப் பழமாய் இனித்திடுவேன்
  பணிவாய்ப் பேச விழைந்திடுவேன்
இழுத்த இழுப்பில் வளைந்திடுவேன்
  இடிக்கும் இடியாய் மிரட்டிடுவேன்

களைத்து விழவே விரும்பேனே
  கவலை மறந்து மகிழ்வேனே
இளைத்துப் போக மாட்டேனே
  எதற்கும் தாழ்ந்து நில்லேனே
களையைப் பிடுங்கி எறிவேனே
  கவனம் கொண்டே இருப்பேனே
வளைந்தே வாழ நினைப்பேனே
  வந்த வம்பை உடைப்பேனே

**தென்றல்கவி தமிழ்ச்சிட்டு**
பட்டுக்கோட்டை



## உன்னொற்றைப் பார்வையில் சுழலுதே உலகம்

கண்ணடித்துப் போனாயே
இதயம் காணவில்லையே
சிங்காரிச் சிரிப்பினிலே
சிதறித்தான் போனேனே
மௌனத்தால் மயக்கியவளே
புன்னகைத்து ஈர்த்தவளே
நெஞ்சத்தில் மஞ்சம்
போட்டு அமர்ந்தாயே
தஞ்சமானேன் உன்னிடம்
காதலானேன் பைங்கிளியே
உன்னொற்றைப் பார்வையில்
சுழலுதே உலகம்
மனதினிலே கலகம்
உண்டானது உன்னாலே
நிழலாய் தொடர்ந்திடுவேன்
சம்மதம் கூறிவிடு
விழிகளால் கதைபேசிடு
விடியும்வரை கேட்பேனே
உறக்கத்தை மறந்து
உன்னில் கலந்திடுவேனே

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்



# நிழல்

**தீட்டப்படுகிற ஒரு அமைதியான அருள்**

'நிழல்மனிதர்கள்', 'நிழல்வாழ்க்கை', 'நிழலில் நிற்காதே' - இவ்வாறான வார்த்தைகளை நாம் அடிக்கடி கேட்கிறோம். பெரும்பாலும் நிழல் என்ற சொல்லை பலவீனம், மறைவு, பயம் அல்லது மதிப்பில்லாத ஒன்றாகச் சித்தரிக்கிறோம். வெளிச்சத்தைப் புகழும் உலகம், அதன் பின்னால் அமைதியாக நின்று கொண்டிருக்கும் நிழலை பல நேரங்களில் மறந்துவிடுகிறது.

ஆனால் சற்று யோசித்துப் பாருங்கள்.

வெயில் கொளுத்தும் நேரத்தில் சோர்ந்து வரும் பயணிக்குத் தன் தோள்களை விரித்து ஓய்வளிப்பது நிழல் தான். மரம் தன் உயரத்தைப் பற்றி பேசாது; அது தரும் நிழல் மட்டும் மனிதர்களை அமைதியாக அணைக்கிறது. ஒரு சிறு குழந்தை விளையாடும் இடத்திலும், ஒரு முதியவர் சோர்ந்து அமரும் இடத்திலும், ஒரு பறவை சற்று ஓய்வெடுக்கும் கிளையிலும் நிழல் தன் இடத்தை உருவாக்கிக் கொடுக்கிறது.

நிழல் ஒருபோதும் யாரிடமும் கேட்காது:

'நீ யார்?'

'

உன்னிடம் என்ன இருக்கிறது?'

'நீ எனக்கு என்ன தரப் போகிறாய்?'

அது வேறுபாடுகளை பார்க்காது. ஏழையையும் பணக்காரனையும், சோர்வுற்றவரையும் மகிழ்ச்சியோடு இருப்பவரையும் ஒரேபோல அரவணைக்கிறது.

ஒரு உண்மை என்னவென்றால் - நிழல் தனியாக உருவாகாது. வெளிச்சம் இருக்கும் இடத்தில் தான் நிழலும் இருக்கும். அதாவது, நிழல் இருளின் அடையாளம் அல்ல; அது வெளிச்சத்தின் இருப்புக்கான சாட்சியம்.

அதேபோல வாழ்க்கையிலும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முன்னால் நின்று புகழைப் பெற மாட்டார்கள். ஆனால் நாம் சோர்ந்தபோது அமைதியாக துணையாக இருப்பார்கள். நாம் விழுந்தபோது கை கொடுப்பார்கள். நாம் அழும்போது காரணம் கேட்காமல் அருகில் அமர்வார்கள். அவர்கள் நிழலைப் போன்றவர்கள்.



எனவே நிழலைப் பற்றி பேசும் முன் ஒரு கணம் நினைவில் கொள்ள வேண்டும்:

நிழல் எப்போதும் பின்னால் நிற்கிறது என்பதற்காக அது மதிப்பில்லாதது அல்ல;

சில நேரங்களில் நம்மை காப்பாற்று வதற்காகவே அது அமைதியாக பின்னால் நிற்கிறது.

அஸ்மியா நிஜாம்

# சுதந்திரத்தின் விலை

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்,**
**ஓட்டமாவடி**

அதிகாலைப் பனிமூட்டம் அந்தப் பிரம்மாண்டமான பல்கலைக் கழகத்தின் பிரதான வீதியை மெல்லத் தழுவிக்கொண்டிருந்தது.. இரவெல்லாம் பெய்த சிறு தூறலில் நனைந்திருந்த தார்ச் சாலை அதிகாலைச் சூரியனின் ஒளியில் வைரங்களாக மின்னியது.. வீதியின் இருபுறமும் நின்றிருந்த பழமையான மரங்கள் காற்றில் அசைந்தாடும்போது ஏதோ ஒரு ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வது போலக் கிசுகிசுத்தன.. பறவைகளின் ரீங்காரமும், தூரத்தில் கேட்ட மிதிவண்டிகளின் மணியோசையும் அந்தச் சூழலுக்கு ஒரு அமைதியைத் தந்தன..

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் நுழைந்தபோது ஸரீனாவின் மனதுக்குள் ஒருவித இனம்புரியாத உற்சாகம் பெருக்கெடுத்தது.. அவள் அணிந்திருந்த இளநீல நிற அபாயாவும், அதற்குப் பொருத்தமான ஹிஜாப்





அலங்காரமும் அவளது அழகை மெரு கூட்டின.. கண்ணாடியில் முகம் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கு ஒரு பெருமிதம் தோன்றும்.. ஆனால், அந்தப் புனிதமான ஆடைக்குள்ளே ஒரு சலனமான மனம் ஒளிந்திருந்தது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்..

'ஸரீனா! என்ன இன்னைக்கு ரொம்ப சீக்கிரமா வந்துட்ட போல? வழக்கமா செகண்ட் லெக்சருக்குத் தானே வருவ?' என அவளது தோழி அஸ்மா இடை மறித்துக் கேட்டாள்..

ஸரீனா தன் கையில் இருந்த புத்தகங் களைச் சரிசெய்தபடி சிரித்துக்கொண்டே 'இல்லடி.. இன்னைக்கு ஒரு முக்கியமான லெக்சர் இருக்குல்ல.. அதான் மிஸ் பண்ணிடக் கூடாதுன்னு சீக்கிரம் வந்தேன்...' என மழுப்பினாள்...

அஸ்மா அவளைச் சந்தேகமாகப் பார்த்தாள்.. 'நிஜமாவே லெக்சருக்குத் தானா? இல்ல கேன்டீன் பக்கம் யாரை யாவது பார்க்கணுமா?'

ஸரீனா பதில் சொல்லாமல் சிரித்தாள்.. அவளது கண்கள் லெக்சர் ஹாலைத் தேடவில்லை.. கேன்டீன் பக்கமாகத் தனது பைக்கில் சாய்ந்து கொண்டு நின்றிருந்த அர்ஷத்தைத்தான் துழாவின.. பொழுதுபோக்குக்காகத் தொடங்கிய அந்த நட்பு, இப்போது அவளது வாழ்வின் திசையை மெல்ல மெல்ல மாற்றத் தொடங்கியிருந்தது..

ஸரீனாவின் வீடு ஒரு நடுத்தர வர்க்கத்துக் குடும்பம்.. தந்தை அப்துல்லாஹ் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியர்.. ஒழுக்கத்திற்கும் கண்ணியத்திற்கும் முதலிடம் கொடுப்பவர்.. தாய் கதீஜா ஒரு இல்லத்தரசி.. அவர்கள் ஸரீனாவை எவ்வளவோ கனவுகளோடும், நம்பிக்கை யோடும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்தனர்.. அவளுக்கு ஏற்கனவே அவளது மாமன் மகன் ரிஸ்வானுடன்

திருமணம் பேசி முடிக்கப்பட்டிருந்தது.. ரிஸ்வான் கத்தாரில் ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் பொறியியலாளராகப் பணியாற்றுகிறான்.. அவன் ஸரீனாவின் மேல் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருப்பவன்..

அன்று காலை விரிவுரைக்குச் செல்வதற்கு முன்னால் அவளது தாய் போன் செய்திருந்தார்..

'ஸரீனா.. இன்னும் ஆறு மாசத்துல உனக்கு ஃபைனல் எக்ஸாம் முடியப் போகுது.. ரிஸ்வான் மருமகன் லீவ்ல வர்றப்பவே நிக்காஹ்வை முடிச்சிடலாம்னு வாப்பா சொல்றார். உனக்குத் தேவையான நகை, நட்டு எல்லாம் இப்பவே பார்க்க ஆரம்பிக்கணும்..' என்றார் உற்சாகமாக..

ஸரீனா அதற்குப் பதில் சொல்லவில்லை.. 'சரிம்மா.. அப்புறம் பேசுறேன்..' என்று மட்டும் சொல்லித் துண்டித்தாள்.. அவளுக்கு ரிஸ்வானைப் பிடிக்கும்.. அவன் ஒரு நல்ல மனிதன் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.. ஆனால், அர்ஷத்துடன் சுற்றும் அந்தச் சுதந்திரம், அந்தப் பொழுதுபோக்கு அவளுக்கு ஒரு போதையாக மாறியிருந்தது.. அர்ஷத் அதே பல்கலைக்கழகத்தில் கற்கும் ஒரு இளைஞன்.. பணக்கார வீட்டுப் பிள்ளை என்பதால் அவனிடம் ஒருவிதத் திமிர் இருந்தது.. அவன் எதையும் சீரியஸாக எடுத்துக்கொள்பவனும் அல்ல..

கேன்டீன் ஓரத்தில் அர்ஷத்தைச் சந்தித்தபோது அவன் நண்பர்களோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்தான்..

'என்ன ஸரீனா.. இன்னைக்கு லேட்டா? வீட்டுல மாப்பிள்ளை பத்தி பேசிட்டாங்களா? முகம் ஒரு மாதிரியா இருக்கு?' அர்ஷத் நக்கலாகக் கேட்டான்..

'ஆமாம் அர்ஷத்.. ஆனா எனக்கு இப்ப இதெல்லாம் யோசிக்கவே பிடிக்கல.. அந்தப் பழைய பஞ்சாங்கத்து வாழ்க்கைக்கும் நமக்கும் செட் ஆகாதுன்னு தோணுது.. உன்னோட இருக்கும் போது கிடைக்கிற இந்த ஃப்ரீடம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு..' என்றாள் ஸரீனா தாளம் தப்பாமல்..

அர்ஷத் அவளது தோளில் தட்டினான்.. 'விடு பேபி... லைஃப்ங்கிறது என்ஜாய் பண்றதுக்குத்தான்.. படிப்பு, கல்யாணம்னு போட்டு ஏன் மண்டையை உடைச்சுக்கிற? இன்னைக்கு நாம அந்தப் புதுசா ஓப்பன் பண்ணியிருக்காங்களே அந்த ராயல் கஃபேக்கு போலாமா?'

அர்ஷத்தின் அழைப்பை அவளால் தட்ட முடியவில்லை.. அவர்கள் அடிக்கடி வகுப்புக்களைத் தவிர்த்துவிட்டு கடற்கரையிலும், பூங்காக்களிலும் நேரத்தைச் செலவிட்டனர்.. ஸரீனாவுக்கு இது வெறும் டைம்பாஸ் தான்.. அர்ஷத்தை அவள் திருமணம் செய்வாள் என்று அவளே நினைக்கவில்லை.. ஆனால், அவன் கொடுக்கும் அந்தத் தற்காலிகக் கவனம் அவளுக்குப் பிடித்திருந்தது..

'யாரும் என்னைச் சந்தேகப்பட மாட்டார்கள்' என்கிற அகங்காரம் அவளிடம் இருந்தது.. ஆனால், சமூகத்தின் கண்கள் அவளைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தன என்பதை அவள் உணரவில்லை..

ஒரு நாள் மாலை, ஒரு பிரபலமான குளிரூட்டப்பட்ட உணவகத்தில் அர்ஷத்துடன் ஸரீனா சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.. அர்ஷத் ஒரு வேடிக்கையான கதையைச் சொல்ல, ஸரீனா



அவனது கையைப் பிடித்துக் கொண்டு குலுங்கிச் சிரித்தாள்.. அந்தத் தருணத்தை அந்தப் பக்கமாக வந்த அவளது ஊர்க்காரர் ஒருவர் பார்த்துவிட்டார்..

மறுநாள் அந்தச் செய்தி காட்டுத்தீயாய் பரவியது.. ஒரு புகழ்பெற்ற ஆசிரியர் மகளா இப்படி? என்று ஊர் முழுக்கப் பேச்சு எழுந்தது.. யாரோ ஒருவன் அவர்களைத் தூரத்தில் இருந்து புகைப் படம் எடுத்து வாட்ஸ்அப்பில் பரப்பி விட்டான்..

அடுத்த சில நாட்களில், ஸரீனாவின் வீட்டின் சூழல் அடியோடு மாறியிருந்தது.. அவள் விடுமுறையில் வீட்டுக்குள் நுழைந்ததும் வீட்டின் அமைதி அவளுக்கு ஏதோ விபரீதத்தைச் சொல்லியது.. அவளது தந்தை அப்துல்லாஹ்வின் முகம் கறுத்துப்போயிருந்தது.. அவர் தனது அறைக்குள் அமர்ந்து எதையோ உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்..

‘ஸரீனா.. இங்கே வா..‘ என்றார் தந்தை.. அவரது குரல் கோபத்தின் உச்சத் தில் நடுங்கியது..

‘நீ யுனிவர்சிட்டிக்கு படிக்கப் போறியா இல்ல ஊர் சுத்தப் போறியா?‘ தந்தையின் குரல் இடி முழக்கமாய் ஒலித்தது.. அவர் தனது போனைத் தூக்கி எறிந்தார்..

'வாப்பா... நான்... நான் சும்மா ப்ரெண்ட்ஸோட ஒரு வேலையா போனேன்...' எனத் திணறினாள்..

'நிறுத்து! பொய் சொல்லாதே! நீ அங்கே ஒருத்தனோட சுத்துறது எல்லாருக்கும் தெரிஞ்சுப்போச்சு.. இதோ பாரு இந்த போட்டோவை யாரோ ரிஸ்வானுக்கே அனுப்பி இருக்கான்..!'

அந்தப் புகைப்படத்தில் அர்ஷத்தின் பைக்கில் ஸரீனா மிக நெருக்கமாக அமர்ந்திருப்பது தெளிவாகத் தெரிந்தது..

அவளது தாய் கதீஜா மூச்சிரைக்கக் கதறி அழுதாள்.. 'நாங்க உன்னை எவ்வளவு நம்பினோம்? இந்தப் பொட்டலப் பகுதியில இருந்து கஷ்டப் பட்டு உன்னை அனுப்பியது இதுக்குத் தானா? நீ ஒருத்தி பண்ற தப்புனால இன்னைக்கு ஊர்ல இருக்குற மத்த பொண்ணுங்களையும் சேர்த்து பேச ஆரம்பிச்சுட்டாங்க.. யுனிவர்ஸிட்டி போற முஸ்லிம் பொண்ணுங்க எல்லாம் இப்படித்தான் போலன்னு எல்லாரும் கேலி பண்றாங்க.. உன்னால அந்தப் படிக்கிற பொண்ணுங்களோட கௌரவமும் போயிடுச்சு ஸரீனா!'

அந்த வார்த்தைகள் ஸரீனாவின் இதயத்தில் ஈட்டியாய் பாய்ந்தன.. அவளது ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு தனது தந்தையின் இத்தனை கால கௌரவத்தைச் சுக்குநூறாக உடைத்து விட்டதை எண்ணித் தலை குனிந்தாள்..

மறுநாள், ஸரீனா தயக்கத்துடன் பல்கலைக் கழகத்திற்குச் சென்றாள்.. ஆனால் அங்கிருந்த சூழல் அவளுக்கு இன்னும் வேதனையைத் தந்தது.. வகுப்பறையின் வெளியே ஒரு சிறிய கூட்டம் விவாதித்துக் கொண்டிருந்தது..

'பார்த்தீங்களா அந்த ஸரீனா பொண்ணு செஞ்ச காரியத்தை? அபாயா போட்டிருந்தா மட்டும் போதுமா? ஒழுக்கம் வேணாமா?' என ஒருத்தி சொல்லிக் கொண்டிருந்தாள்..

முதலாம் ஆண்டு மாணவி ஒருத்தி அழுதுகொண்டே தன் தோழியிடம் சொன்னாள் 'இந்த ஒரு விஷயத்தை வைச்சு எங்க வீட்ல என்னைத் தங்கிப் படிக்க விடாம, தினமும் ஊர்ல இருந்து வந்துட்டு போகச்சொல்றாங்க.. நாலுமணி நேரம் டிராவல் பண்ணி நான் எப்படிப் படிக்கிறது? அவ பண்ணின தப்புக்கு நாங்க ஏன் தண்டனை அனுபவிக்கணும்?'

அவளது தோழி அஸ்மா அருகில் நின்று கொண்டிருந்தாள்.. அவள் ஸரீனாவைப் பார்த்ததும் ஓடி வந்தாள்.. ஆனால் அந்தப் பார்வையில் நட்பு இல்லை.. மாறாக ஒரு கோபம் இருந்தது..

'உன்னைப் போல ஒரு சில பொண்ணுங்க இப்படி பொழுது போக்குக்காகத் தப்பான பாதையில போறதுனால கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னுக்கு வர நினைக்கிற எங்களைப் போன்ற பொண்ணுங்களோட படிப்பும் கேள்விக் குறியாகுது.. எங்க சுதந்திரத்தை எங்க வீட்டாரே பறிக்க இது ஒரு காரணமா அமையுது.. நீ செஞ்சது வெறும் உன்னோட தனிப்பட்ட விஷயம் இல்ல.. இது ஒரு சமூகப் பிரச்சனை!' என அஸ்மா ஆதங்கத்துடன் கூறிவிட்டுச் சென்றாள்..

ஸரீனா செய்த ஒரு சிறு தவறு அவளது குடும்பத்தின் கௌரவத்தை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவிகளின் பெயரையும் களங்கப்படுத்திவிட்டது என்பதை அவள் உணர்ந்தபோது உலகம் சுழல்வது போல இருந்தது..

அவளது தந்தை அத்தனைக்கும் பின் அவளை மீண்டும் பல்கலைக்கழகம் அனுப்பத் தயங்கினார்.. 'உன் படிப்பு போதும்..நிக்காஹ்வை முடிச்சிடலாம்..' என்றார். ஆனால், ரிஸ்வான் கத்தாரி லிருந்து ஸரீனாவின் வீட்டாரை தொடர்பு கொண்டான்.. அவன் ஒரு முதிர்ச்சியான மனிதனாக நடந்து கொண்டான்.. அவன் ஸரீனாவோடு தெளிவாகப் பேசினான்..

'ஸரீனா, நீ செஞ்சது தப்புன்னு உனக்குத் புரியுதா? பொழுது போக்குங் கிறது வேற.. கண்ணியம்ங்கிறது வேற.. நீ செஞ்ச இந்தச் செயல் இனிமே பல்கலைக்கழகம் வரப்போற எத்த னையோ தங்கச்சிகளோட கனவுக்கு முட்டுக்கட்டையா இருக்கும்.. ஆணா இருந்தாலும் சரி, பெண்ணா இருந்தாலும் சரி... நாம் செய்யுற ஒவ்வொரு செயலும் நமக்குப் பின்னாடி வர்றவங்களுக்கு ஒரு எக்ஸாம்பிளா இருக்கணும்.. நீ உன்னை மாத்திக்கிட்டா மட்டும்தான் நான் இந்தத் திருமணத்துக்குச் சம்மதிப்பேன்.. உனக்கு இன்னொரு வாய்ப்பு தரணும்னு நான் வாப்பாகிட்டப் பேசுறேன்..'

ரிஸ்வானின் அந்தப் பேச்சு ஸரீனா வுக்குத் தார்மீக ரீதியாக ஒரு பெரும் அடியைக் கொடுத்தது.. தான் யாரை ஒரு பழைய பஞ்சாங்கம் என்று நினைத்தாளோ அவன்தான் அவளுக்கு உயிர் கொடுத்தான்..

ஸரீனா அன்று இரவு அழுதுகொண்டே இறைவனிடம் கையேந்தினாள்.. 'இறைவா.. என் அறியாமையினால்



நான் செய்த தவறு பிற பெண்களின் கல்வியைப் பாதித்துவிடக் கூடாது! எனக்கு நேர்வழியைக் காட்டு!' எனப் பிரார்த்தித்தாள்..

மீதமிருந்த சில மாதங்களில், ஸரீனா ஒரு புதிய மனுஷியாக மாறினாள்.. அவள் அர்ஷத்துடனான தொடர்பை முழுமையாகத் துண்டித்தாள்.. அர்ஷத் அவளை அழைக்க முயன்றான்.. ஆனால் அவள் அவனைத் தடுத்துவிட்டாள்..

அவள் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தினாள்.. தேவையில்லாமல் யாரிடமும் பேசவில்லை.. மற்ற மாணவிகளின் விமர்சனங்களை அமைதியாகத் தாங்கிக் கொண்டாள்.. அவளது கண்ணியத்தைக் காப்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.. அவள் வகுப்பிற்குச் செல்வதும், நூலகத்தில் அமர்ந்து படிப்பதும், பின்னர் அமைதியாக வீடு திரும்புவதுமே அவளது அன்றாடப் பணியாக மாறியது..

அவளது மாற்றம் மெல்ல மெல்ல அவளது தந்தையின் உள்ளத்தைக் குளிரவைத்தது.. அஸ்மா போன்ற தோழிகள் மீண்டும் அவளிடம் பேசத் தொடங்கினர்..

பல்கலைக்கழகப் படிப்பை முடித்து வெளியேறும் அந்தப் பட்டமளிப்பு விழா நாள் வந்தது.. ஸரீனா கறுப்பு நிறப் பட்டமளிப்பு அங்கி அணிந்து நின்றபோது, அவளது முகத்தில் ஒரு பக்குவம் தெரிந்திருந்தது..

அவள் தனது தோழிகளிடம் சொன்னாள்.. 'நமது அடையாளம் என்பது நமது ஆடை மட்டுமல்ல.. நமது நடத்தையும் தான்.. நாம் செய்யும் ஒவ்வொரு சின்னத் தவறும், நமக்குப் பின்னால் வரும் ஒரு தலைமுறைப் பெண்களின் கல்வியைத் தடுக்கும் ஆயுதமாக மாறிவிடும்.. அதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.. இந்த யுனிவர்சிட்டி நமக்குக் கல்வியைக் கொடுக்குது, அதே சமயம் அந்தப் படிப்பை எப்படிக் காப்பாத்திக்கணும்ங்கிற பொறுப்பையும் நம்மகிட்ட ஒப்படைக்குது..'

ஸரீனாவின் மாற்றம் அவளது குடும்பத்தில் மீண்டும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது.. அவள் பட்டமளிப்பு விழாவில் பட்டம் வாங்கும்போது அவளது தந்தை மேடைக்குக் கீழே நின்று பெருமையுடன் பார்த்தார்.. அவரது கண்களில் அன்று தெரிந்த கண்ணீர் ஸரீனா இழந்த நம்பிக்கையை மீட்டெடுத்ததற்கான சாட்சி..

விழா முடிந்து வெளியே வரும்போது ரிஸ்வான் அவளுக்காக காத்திருந்தான்.. ஸரீனா அவனிடம் சொன்னாள் 'ரிஸ்வான், நான் செஞ்ச தப்பை மறக்க எனக்கு இன்னும் காலம் பிடிக்கும்.. ஆனா, இனிமே நான் எடுக்குற ஒவ்வொரு அடியும் என் குடும்பத்துக்கும், என் சமூகத்துக்கும் பெருமை சேர்க்கிறதா மட்டும்தான் இருக்கும்..'

ரிஸ்வான் புன்னகைத்தான்.. 'நாம அந்தப் பயணத்தைத் தொடங்குவோம் ஸரீனா..' என்றான்..

ஸரீனாவுக்குத் தெரியும்.. தான் இழந்த முழுமையான நம்பிக்கையை மீண்டும் சம்பாதிக்க அவள் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும் என்று.. ஆனால், இப்போது அவளிடம் நேர்மையும், கண்ணியமும் துணைக்கு இருந்தன..


தொடரும்...

# தூரிகை வரையும் மின்மினிகள்

ஹைக்கூ நூல் இரசனைக்குறிப்பு



**நூலாசிரியர் Dr ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர் இலங்கை**




ஜப்பானியர்களின் கண்டுபிடிப்பான இந்த ஹைக்கூ கவிதைகள் கொஞ்சம் கொஞ்சமாக உலகெங்கும் பரவி கவிதை உலகையே வியாபித்து விட்டது.ஆதியில் அமைதியாய் சிந்தித்த மனிதன் கற்கால சங்க இலக்கியங்களை படைத்தான் பின் அதை படித்து இன்புறவும் பண்புறவும் நாழிகையை கழித்தான். ஆனால் இக்காலமோ நேர குறுகலில் சிக்கி பரபரப்பாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இங்கு படிக்கவும் எழுதவும் நேரம் கிடைப்பதே அரிதுதான். அதற்காக இலக்கிய உலகம் கண்டெடுத்த தீர்வு தான் இந்த ஹைக்கூ படைப்புகள். ஏனென்றால் பேருலகையும் பெருந் தத்துவத்தையும் சிற்சில சொற்களுக்குள் சிறைப்படுத்தி விடும் ஆற்றல் இந்த ஹைக்கூவுக்கு உண்டு. இது கவிதை பிரியர்களுக்கு கிடைத்த ஒரு வரம்.

அந்த வகையில் ஹைக்கூ கவிதை களை படைப்பதில் கைதேர்ந்த வித்தகி யான கலைத்தாரகை டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்களின் 'தூரிகை வரையும் மின்மினிகள்' எனும் ஹைக்கூ நூல் சிறந்ததொரு படைப்பாகும். இதில் வரும் ஹைக்கூக்கள் அழகாய் தொடங்கி புதிராய் தொடர்ந்து புன்னகையில் முடிந்து மனநிறைவைத் தருகின்றன. சில ஹைக்கூக்கள் சமுதாயச் சாடல்களை சிலேடைகளாகச் சிலாகிக்கின்றன. இனி என் எண்ணத்தில் எழுச்சி கண்ட சில மின்மினிகள் இதோ....

ரோஜா பூக்கள்
சிந்தியிருந்த புடவையில்
அம்மாவின் வாசம்

இது ஒரு அழகான உணர்வுபூர்வ மான ஹைக்கூ. அம்மாவின் பாசத்தை ரோஜாவின் வாசத்தோடு கலந்து புடவை யில் பூக்க வைத்திருக் கிறார் அம்மாவின் அன்பு, பிணைப்பு, அரவணைப்பு, அனைத்தும் இதில் மணக்கிறது ஆசையாய் ஓடிப்போய் அன்னையை அணைத்த நினைவுகள் மலர்கின்றன. இத்தனை புதுமையாய் அம்மாவை கவிதை வடிக்கவும் முடியுமா?

அடர்ந்த இருள்
பயமின்றி பயணிக்கும்
மின்மினி பூச்சி

'இளம் கன்று பயம் அறியாது' மிரட்டும் இருளில் தன்னந்தனிமையில் பயணிக்க யார் தான் துணிவர்? ஆனால் சின்ன பூச்சியான மின்மினி எது வித அச்சமும் இன்றி பயணிக்கிறது. இந்த ஹைக்கூவில் இயற்கையோடு சேர்ந்து, தப்பு செய்யாத நேர்மையானவர் எந்த சூழலிலும் துணிந்து செயல்படுவார் என்கிற கருத்தையும் எடுக்க முடிகிறது.

வேதாள கதைகள்
பயம் வரவே இல்லை
அப்பா சொல்லச் சொல்ல

சிறுபராயத்திலே திகில் கதைகளுக்கு பெயர் போனது வேதாள கதைகள். இந்த கதைகளை கேட்க கேட்க சிறுவர்களின் நாடித்துடிப்பு வேகமாகி கண்கள் உருளத் தொடங்கிவிடும். அப்படியான கதைகளை அப்பா சொன்னால் பயம் வரவே வராது. அவரின் மடியிலேயே படுத்துக்கொண்டு பேய் கதைகள் கேட்பது சுவாரசியம் தான். தந்தை என்ற நம்பிக்கை குழந்தைகள் பற்றி பிடிக்கும் இரும்புத்தூண். கண்ணுக்கு புரியாத தந்தையின் பாதுகாப்பு உறுதியானது. தந்தையின் கைகளை இறுகப்பற்றிக் கொண்டால் கண்களை மூடிக்கொண்டு உறுதியாக பயணிக்கலாம். இதை மிக எளிமையாக சொல்லிவிட்டார் கவிஞர்.

மிகவும் சரியாக
கணக்குச் செய்கிறது
படிக்காத கணினி

நேரடி அர்த்தம் உண்மைதான் எனினும் இன்னும் ஒரு கருத்து எனக்குள் எழுகிறது.

இதில் கவிஞர் கணினி என்ற குறியீட்டில் குறிப்பது பாடசாலை சென்று படிக்காத அனுபவம் நிறைந்த வாய்க் கணக்கு வித்தகர்களையே. எவ்வளவு பெரிய கணக்கையும் இலகுவாய் வாயால் கணித்து விடுவார்கள் இந்த பட்டிக்காட்டு பழமைவாதிகள். எனவே அனுபவ அறிவுக்கு முன் அத்தனை அறிவும் தூசுதான் என்பதையும் மறைமுகமாக உணர்த்துவதைக் காணலாம்.

விழும் சிறகு
தொலைந்து போகிறது
பறவையின் வானம்

இயற்கையின் ரசிகையான நூலாசிரியர் தன் மதிநுட்பத்தை இயற்கையோடு பிணைந்து எழுதி இருக்கிறார். ஒரு பறவையின் வாழ்வு அதன் சிறகுகளை நம்பியே இருக்கிறது. அந்த சிறகு விழும்போது பறவை தன் வாழ்வையே இழக்கிறது. அதன் சிறகுகளே வானம் என்று உவமையில் நுட்பமாக ஒரு உண்மையை எளிய நடையில் கூறிவிட்டார்!

முரண்டு பிடித்துக் கொண்டு
வந்த பாடில்லை
கலைந்த தூக்கம்.

காலச்சக்கரத்தின் துரித ஓட்டத்தில் சிக்கித் தவிக்கும் மானிடருக்கு இப்போதெல்லாம் தூக்கம் தொலைத்த இரவுகள் அதிகம். அந்த வகையில் பாதியில் தூக்கம் கலைந்து விடியும் வரை உறக்கம் இன்றி தவிப்போரின் தவிப்பை சுவைபட கூறி இருக்கிறார் கவிஞர்.

நீளப்பாட்டில் வரிகள்
அம்மா அடித்தாரோ
அணிலே முதுகில் உனக்கு

ஆஹா! இந்த கவிஞருக்கு தான் என்ன ஒரு குழந்தை உள்ளம். அணில் முதுகில் நேரிய கோடுகள் இயற்கை வரைந்தது. அதனை அம்மா அடித்த தழும்புகளோ

என அணிலிடம் அன்பு கேள்வி கேட்டு அங்கலாய்ப்பது கவிஞரின் கனிந்த குழந்தை மனதை காட்டுகிறது.

நீண்ட நாள் காய்ச்சல்
மெல்லவே குணமடைகிறது
வாய்க்கசப்பு

இங்கு கவிதாயினி ஒரு வைத்தியர் என்பது நமக்குள் ஒரு புன்னகையை கொண்டு வருகிறது. அத்தோடு இதில் துன்பங்களுக்குப் பிறகு வரும் தேறுதல் மற்றும் நம்பிக்கையை சித்தரிக்கிறது மிக எளிய உதாரணத்தின் மூலம் ஆழ்ந்த தத்துவத்தை சொல்லிவிட்டார்!

விளை நிலங்களில்
உருவாகிக் கொண்டிருக்கும்
விற்பனை வீடுகள்.

இது ஒரு சமூக பற்றுள்ள சோக கவிதையாகும். இயற்கை விளை நிலங்கள் அற்ப லாபத்திற்காக விலை நிலங்களாக மாற்றப்படுகின்றன. பொன் விளையும் பூமி என்று நம் முன்னோர்கள் சொன்ன சொல்லின் ஆழம் புரியாத நவீனர்கள் வளங்களை சிதைக்கும் மனித குலத்தின் எதிரிகள். இந்த கவிதை நூலாசிரியரின் சமூகப்பற்றுக்கு சான்றாக மிளிர்கிறது.

நட்சத்திர உணவகம்
சென்றதும் மறந்து போகிறது
பேரம்பேச

இதில் சமூக ஏற்றத்தாழ்வுகளை சிறப்பாக எடுத்துக் கூறுகிறார் கவிஞர். அன்றாடம் உழைத்து உண்ணும் ஏழைகளின் உணவகங்களில் பத்து ரூபாய்க்கு பேரம் பேசி உணவு வாங்குவர். அதே உணவை நட்சத்திர உணவகங்களில் இரு மடங்கு விலை கொடுத்து மரியாதையாக வாங்கிக் கொள்வார். இத்தகைய போக்கே சமூகத்தில் உயர் மட்டத்தினர் உயர்ந்து செல்வதற்கும் கீழ் மட்டத்தினர் தாழ்ந்து போவதற்கும் காரணமாகும். சமூக ஏற்றத் தாழ்வு களையப்பட வேண்டும். ஏழைகள் உயர வேண்டும் என்பதோடு தற்காலத்தில் நவீன கலாச்சார மோகம் சமூகத்தில் எந்தளவு ஊடுருவி உள்ளது என்பது புலப்படுகிறது.

கவிஞர் டாக்டர் ஜலீலா முஸம்மில் இந்த 'தூரிகை வரையும் மின்மினிகள்' மூலம் ஹைக்கூ உலகத்தில் தனது தனித்துவ முத்திரையை பதித்துள்ளார். இயற்கையின் நுட்பமான மாற்றங்கள், மனித உணர்வுகளின் ஆழமான வெளிப்பாடுகள் ஆகியவற்றை எளிய நடையிலும் கவித்துவமான வரிகளிலும் படம் பிடித்து காட்டியிருக்கிறார். இயற்கையின் ஒவ்வொரு அசைவிலும் வாழ்வின் தத்துவார்த்தமான பொருளை காணும் அவரது பார்வை போற்றுதலுக்குரியது. இந்த புத்தகத்தை படித்திடும்போது வாசகர் மனதில் ஒருவித அமைதியும் புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது. மொத்தத்தில் டாக்டர் ஜலீலா முஸம்மிலின் 'தூரிகை வரையும் மின்மினிகள்' ஒரு அற்புதமான ஹைக்கூ கவிதை படைப்பாகும். கவிஞர் மேலும் மேலும் ஹைக்கூ கவிதை உலகில் சாதனைகள் படைத்திட மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**அல் ஆலிமா நூருல் ஈமானி**
(அந்நூரிய்யா)
ஏறாவூர்.இலங்கை

நூல் பெற - நூலாசிரியரின்
தொலைபேசி எண்+94771308495
மின்னஞ்சல் முகவரி-
galeelamuzammil @gmail.com

# கற்பகத்தின் கல்யாணம்





## 15

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை - 600072

கற்பகம் அவளின் அம்மா, தம்பியுடன்மதுரைக்கு கிளம்பிக் கொண்டிருந்த வேளையில் சித்தப்பாவும், அப்பாயி (அப்பாவின் அம்மா) யும் வந்தார்கள்.

'வாங்க... வாங்க' அம்மாவின் குரல் கேட்டு எட்டிப் பார்த்த கற்பகத்தின் மனது படபடவென அடித்துக் கொண்டது. குடிக்கத் தண்ணீர் தந்தவள் அங்கேயே நின்று கொண்டாள்.

'வாராயோ வான்மதி
தாராயோ நிம்மதி...
ஏதேதோ என்
ஆசை கேட்டு போனேன்
காதல் தூது போனேன்..
என் மனம் உன் வசம்
இனி எலாம் பரவசம்
வாராயோ வான்மதி தாராயோ...'

பகல்நிலவு படப்பாடலை பாடிக் கொண்டே கிண்டலாகப் பார்த்தத் தங்கையை முறைத்தாள்.

'என்ன விசயமுங்க அத்தை' அம்மா கேட்கவும் 'நல்ல விசயந்தே, நம்ம கற்பகத்தோட சாதகம் நல்ல பொருத்தம் இருக்குனு சொல்லி விட்டிருக்காக... உங்கருத்து என்ன?' அப்பாயி பேசும்போதே 'இம்புட்டு வெள்ளன வந்திருக்கீங்க... அதுக்குள்ள எப்படி சாதகம் பார்க்க முடியும்? கற்பகம் கேட்க 'இந்தா.. இப்படி குறுக்கமறுக்க பேசாத... பெரியவுகள மொதல்ல முழுசா பேசிவிட்டு. எப்பப்பாரு... முந்திரிக் கொட்டையாட்டமா முந்திக்கிறது. உங்கப்பா ஒடம்பு இருக்குற நெலைல ஒரு நல்லது நடந்தா, கொஞ்சம் சந்தோசப்படுவார்ல... கண்ணாசை பாக்க அவருக்கும் ஆசையிருக்காதா?' அப்பாயி சத்தம் போடவும் சட்டென வாய் மூடிக் கொண்டாள் கற்பகம்.

'போயி காப்பி போட்டுட்டு வா பாப்பா, நா பேசிக்கிறேன்' அம்மா சொல்லவும் காதை அங்கேயே விட்டு விட்டு மெல்ல நகர்ந்தாள் கற்பகம்.

'இன்னைக்கு செவ்வாயா... மாப்பிள்ளை வீட்டுல கற்பகத்தை பிடிச்சுருக்கு, வர வெள்ளிக்கெழமை பூ வைக்க வரவானு கேக்குறாங்க... என்ன சொல்லுறது அண்ணி' சித்தப்பா பேசப் பேச கற்பகத்தின் கண்களில் கண்ணீர் புரண்டோடியது.

கண்ணீர் வழிய காப்பித்தம்ளரை நீட்டிய கற்பகத்தைப் பார்த்துத் திடுக்கிட்ட சித்தப்பா'என்னாச்சு பாப்பா, எதுக்கு அழுகுற' கேட்கவும்'என்னத்துக்கு

அழுகப் போறா... கல்யாணப் பேச்சு வந்தாலே எல்லா பொம்பளைகளுக்கும் அழுகதா வரும். பொறவு பொறந்தவீடு அடுத்த வீடா ஆகப்போகுதுல... நெல்லு நாத்தை பிடுங்கி நடுறாப்ல அடுத்த இடத்துல நடுவுகா... நாமதே தைரியமா ஊனி நின்னு வளரணும். இதுக்கெல்லாம் பயந்தா ஆவுமா?'

படபடவென்று பொரிந்த அப்பாயி 'இந்தா பாருங்க.. நா சொல்றேன்னு கோபப்படாதீக, நல்ல சம்பந்தம் கூடி வரைல வேணாமுனு சொல்லப்படாது. நீங்க ஆஸ்பத்திரிக்கு போயி உங்கப்பாட்ட கலந்து பேசிட்டு வாங்க. நா நாளைக்கு வந்து என்னன்னு கேக்குறேன்'


'பேசிக்கொண்டே கௌம்புனா எப்படி அப்பாயி, நாங்களும் சாதகம் பார்க்க வேணாமா?' தங்கச்சி கேட்க 'இந்த வீட்லதா புள்ளபூச்சிக்கு எல்லாம் கொடுக்கு மொளைக்குது. நண்டு, சிண்டு எல்லாம் வாய் பேசுது. அதா அவங்க சாதகம் பார்த்துட்டாங்கல, அது போதும். உங்க வீட்லதா யாருக்கும் சாமி நம்பிக்கை கெடையாதே... பொறவு என்ன சாதகம் அதுக்குன்னு... நாங் கௌம்புறேன். நேரமாச்சு நீங்க சட்டுபுட்டுனு மதுரைக்கு போயிட்டு வாங்க' பேசியபடியே அப்பாயி கௌம்பிப் போக

'எனக்கென்னவோ இவங்க சாதகம் பார்க்காமலே பொய் சொல்லுறாங்களோனு தோணுது' முணங்கியபடியே தங்கச்சி நகரவும், யோசனையில் ஆழ்ந்து இருந்த அம்மாவிடம் 'என்னம்மா யோசனை' கற்பகம் கேட்க 'ஒன்னுமில்ல... ஏற்கனவே நேரமாச்சு, வாங்க கௌம்புவோம்'

'சரிங்கம்மா' என்றபடியே ஒரு பையில் அப்பாவுக்குரிய மாற்றுத் துணி மற்றும் அவருக்குத் தேவையான பொருட்களுடன் அனைவரும் கிளம்பினார்கள்

(இன்னும் வரும்)





சிறுவர் சங்கமம்

# கோடைக்காலமும் பாட்டி வீடும்

## விடுமுறை நாட்களிலிருந்து சிறிய பாடங்கள்



### அத்தியாயம் 1

### பாட்டியின் வீட்டிற்கு பயணம்

அர்ஜுன் ரயிலின் ஜன்னல் அருகே அமர்ந்து தனது முகத்தை கண்ணாடியில் சாய்த்துக்கொண்டான். ஆரம்பத்தில் உயரமான கட்டிடங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாக பின்னால் ஓடின. கடைகள், பேருந்துகள், சிக்னல்கள், கூட்டம் நிறைந்த சாலைகள் எல்லாம் மெதுவாக மறைந்து கொண்டே போனது.

சிறிது நேரத்தில் நகரம் முழுவதும் மறைந்து, அதன் இடத்தில் முடிவில்லாத பசுமை வயல்கள், காற்றில் ஆடும் தென்னை மரங்கள், தூரம் வரை நீளும் வெறிச்சாலைகள் தோன்றின கோடைக்கால சூரியன் பிரகாச மாக ஒளிர்ந்து, எல்லாவற்றையும் பொன்னிற மாக மாற்றியது.

அர்ஜுன் சலிப்புடன் மூச்சுவிட்டான்.

"எவ்வளவு வெயில்... பார்க்கவே எது வும் இல்லையே," என்று முணுமுணுத்தான்.

அவனது அம்மா பக்கத்தில் செய்தித் தாளை மடித்தபடி மெதுவாகச் சிரித்தார்.

"சில நேரங்களில்," அவள் மென்மை யாகச் சொன்னார்,

"அழகான விஷயங்களை கவனிக்க கொஞ்சம் நேரம் ஆகும்."

அர்ஜுன் எதுவும் சொல்லவில்லை. கைகளை மடக்கிக்கொண்டு மீண்டும் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். அவனுக்கு இன்னும் உற்சாகம் வரவில்லை.

முழு கோடை விடுமுறையையும் அவன் தனது பாட்டியுடன் ஒரு கிராமத்தில் கழிக்கப் போகிறான்.

மால்கள் இல்லை.
வீடியோ கேம்கள் இல்லை.
வேகமான இணைய வசதியும் இல்லை.

ஒரு அமைதியான சிறிய கிராமம் மட்டுமே.

பல மணி நேர பயணத்திற்குப் பிறகு, ரயில் மெதுவாக நின்றது. அது ஒரு சிறிய நிலையம்.

அர்ஜுன் சோம்பலாக தனது சிறிய பையை எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். ஒரு வெப்பமான காற்று அவன் முகத்தைத் தொட்டது. மழைக்குப் பிறகு மண் வீசும் மணம் போல காற்று மிகவும் புதிதாக இருந்தது. அருகில் எங்கோ மல்லிகைப்பூ வாசனையும் வீசியது.

எல்லாமே வேறுபட்டதாக இருந்தது.

ஹார்ன் சத்தமில்லை.
அவசரமாக ஓடும் கூட்டமில்லை.
பெரிய வாகனங்களின் சத்தமில்லை.

தொலைவில் பறவைகள் கீச்சிடும் சத்தமும், காற்றில் இலைகள் சலசலக்கும் இனிய ஒலியும் மட்டும்.

நிலையத்தின் வெளியே, பாட்டி கூட்டத்தை ஆர்வமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அர்ஜுனை பார்த்த வுடன் அவரது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"அர்ஜுன்!" என்று சந்தோஷமாக கையை அசைத்தார்.

அர்ஜுனின் சோர்வான முகமும் உடனே பிரகாசித்தது. அவன் ஓடிவந்து பாட்டியை இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

"அய்யோ! எவ்வளவு உயரமாக வளர்ந்துட்டே!" என்று பாட்டி சிரித்தபடி அவன் கன்னத்தைத் தொட்டார்.

இருவரும் சேர்ந்து ஒரு குறுகிய மண் பாதையில் நடந்து வீட்டை நோக்கிப் போனார்கள். மாலை சூரியன் சுற்றியிருந்த அனைத்தையும் பொன்னிறமாக மாற்றியது. சிறிய பட்டாம்பூச்சிகள் புல்வெளி அருகே பறந்தன. சாலையோர சிறிய நீர்த் தேக்கங்களின் மேல் தட்டான் பூச்சிகள் மிதந்தன.

பாட்டியின் வீடு சிறியதாயும் எளிமையானதாயும் இருந்தது. சிவப்பு ஓடுகள் பொருத்தப்பட்ட கூரை, பெரிய திறந்த ஜன்னல்கள்-அதைச் சுற்றி உயரமான மரங்கள் காவலர்களைப் போல நின்றன. அருகில் ஒரு பழுப்பு நிற பசு அமைதியாக புல் மென்றுகொண்டே தனது வாலை ஆட்டியது.

அர்ஜுன் சுற்றிலும் கவனமாகப் பார்த்தான்.

தொலைக்காட்சி சத்தமில்லை.
வேகமாக ஓடும் கார்கள் இல்லை.
மொபைல் சிக்னலும் இல்லை.

அமைதி மட்டுமே.

"இங்கே ரொம்ப அமைதியா இருக்கு, பாட்டி," என்று அவன் சொன்னான்.

பாட்டி மரக்கதவைத் திறந்தபடி மெதுவாகச் சிரித்தார்.

"அதனால்தான் உலகத்தின் சத்தத்தை

நன்றாகக் கேட்க முடியும்," என்றார்.

அன்று மாலை, இருவரும் வீட்டின் முன் வராண்டாவில் அமர்ந்திருந்தார்கள். சூரியன் மெதுவாக மரங்களுக்குப் பின்னால் மறைந்தது. வானம் ஒரே நேரத்தில் ஆரஞ்சு, இளஞ்சிவப்பு, ஊதா நிறங்களாக மாறியது. பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பின. குளிர்ந்த காற்று மெதுவாக அவர்களைத் தொட்டுச் சென்றது.

அன்று முதல் முறையாக, அர்ஜுன் நகரத்தைப் பற்றி நினைப்பதை நிறுத்தினான்.

அவன் கிரிக்கெட்டுகளின் இனிய ஒலியைக் கேட்டான்.

இலைகள் மெதுவாக ஆடுவதைப் பார்த்தான். அவன் மனம் அமைதியாகியது.

"இது ரொம்ப நல்லா இருக்கு," என்று மெதுவாகச் சொன்னான்.

பாட்டி அவனை அன்பும் அறிவும் நிறைந்த கண்களால் பார்த்தார்.

"வாழ்க்கை அழகாக இருக்க, அது சத்தமாக இருக்க வேண்டிய அவசியமில்லை," என்றார்.

அர்ஜுன் அமைதியாகச் சிரித்தான்.

அவனுக்குத் தெரியவில்லை.
ஆனால் அந்த கோடை விடுமுறை அவனை முழுவதுமாக மாற்றப் போகிறது.

**பர்வதவர்மன் பி**
பத்தாம் வகுப்பு
ஓசூர்

# முடிவு

அறிவின் முடிவு காண்பது அரிது!
அன்பின் எல்லை முடிவே இல்லை!
அல்லவை இல்லவை என்பதும் இல்லை!
ஆற்றல் என்பது அளவிட முடியா!

பார்க்கும் தூரம் கணக்கில் இல்லை!
பாவையின் பாசம் பரந்தே விரியும்!
பார்த்தால் தூரம் அதிகம் தெரியும்!
பண்பட என்றும் அருகே தெரியும்!

விரியும் பொருளில் எல்லை இல்லை!
சுருங்கும் பொருளைக் காண்பது இயலா!
இடதும் வலதும் மேலும் கீழும்
எங்கும் முடிவு என்பது இல்லை!

இயற்கைக் கொடையை அளித்தவன் நிலையை
ஆழம் பார்க்கும் கருவிகள் இல்லை!
அன்பின் துணையால் அருகே செல்லும்
அற்புத வழிகள் ஆயிரம் உண்டு!

முடிவு என்பது முடிவே இல்லை!
தொடக்கம் என்பது சாத்தியம் உண்டு!
ஒருவர் முந்தி மறுவர் பிந்தி
என்பது என்றும் இயல்பின் முறையே!

**சிவசு-மணியன்**





# நிலாவுடன் பேசும் சிறுவன்

ஒரு அழகான கிராமத்தில் அருள் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு இரவு வானம் மிகவும் பிடிக்கும். தினமும் வீட்டின் முன் அமர்ந்து நிலாவையும் நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் முழுநிலா மிகவும் பெரியதாகவும் பிரகாசமாகவும் இருந்தது. ஏரிநீரில் அதன் ஒளி பட்டு நீரில் மின்னியது.

அருள் மெதுவாகக் கேட்டான்: நிலாவே! நீ ஏன் எப்போதும் வானத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறாய்?"

அப்போது குளிர்ந்த காற்று வீசியது. அருளுக்கு நிலா பேசுவது போல தோன்றியது.

"குழந்தைகளின் சிரிப்பைப் பார்க்கத்தான் நான் வருகிறேன்," என்றது போல இருந்தது.

அருள் மகிழ்ச்சியாக சிரித்தான்.

அந்த நேரத்தில் ஒரு சிறிய நட்சத்திரம் வானத்தில் இருந்து நீண்ட ஒளியுடன் விழுந்தது.

“அம்மா! பாருங்கள்! நட்சத்திரம் விழுகிறது!” என்று கத்தினான் அருள்.

அம்மா சிரித்துக் கொண்டு,

“அது விழும் நட்சத்திரம் இல்ல அருள்... அது வானத்தின் ஓவியம்,” என்றார்.

அருள் ஏரிக்கரைக்கு ஓடினான். நீரில் நிலா ஆடுவது போல இருந்தது. அவன் கையை நீரில் வைத்தான். அலைகள் சுற்றிச் சுற்றி ஓடின.

□நிலா என்னுடன் விளையாடுகிறது!□ என்று மகிழ்ந்தான்.

அன்று இரவு அருள் ஒரு முடிவு செய்தான்.

□நான் தினமும் இயற்கையை இரசிப்பேன். மரங்களையும் ஏரியையும் பாதுகாப்பேன்,□ என்றான்.

அந்த இரவு நிலா இன்னும் பிரகாசமாக



இருந்தது. நட்சத்திரம் கண்ணைச் சிமிட்டிச் சிரித்தது.

**சு.பிரவந்திகா**
**பட்டாபிராம், சென்னை - 600072**



## ஒன்று கூடி வாழ்ந்திடுவோம்.

செல்லப்பாப்பா சாய்ந்தாடு
செந்தமிழை நீ பாடு
கைகள் தட்டி நீயாடு
கலகலவென நீ பாடு
மலர்ந்த முகத்தோடு நீயாடு
மகிழ்ச்சி பொங்க நீபாடு
செம்மொழி மண்ணை நீபாடு
செழித்த தமிழே அன்போடு
தாத்தா பாட்டி உன்னோடு
ஒழுக்கத்தை கற்பாய் உயிரோடு
அப்பா அம்மா உன்னோடு
பண்பைப் பெற்றிடு பணிவோடு
அண்ணன் தம்பி உன்னோடு
கொஞ்சி மகிழ்வாய் அன்போடு
நண்பர் கூட்டம் உன்னோடு
நாளும் சிரித்து விளையாடு
மூவேந்தர் வாழ்ந்த பொன்னாடு
வரலாற்றை போற்றி நீபாடு
சுற்றத்தோடு நீ உறவாடு
உள்ளத்தில் இனிமை வெளிப்பாடு
பள்ளி சென்றே கற்றிடு
காலமெல்லாம் மேன்மை பெற்றிடு
வேற்றுமையில் ஒற்றுமை கண்டிடு
ஒன்றுமையே வலிமை என்றிடு




**பொன் முருகன்**
**புதுச்சேரி**


## பாவேந்தர் பாரதிதாசன்

சிறப்பு கவிதை
பா வகை: அறுச்சீர் விருத்தம்

பாரதியின் பகுத்தறிவு பாசறையில்
பக்குவமாய் பிறந்திட்ட பாவேந்தே!
தீரமுடன் சமூகத்தின் இன்னலையே
திறமாக எதிர்த்திட்ட தமிழ்ச் சொத்தே!
வீரத்தில் விளைந்திட்ட நற்றமிழை
வீழாமல் காத்திட்ட காவலனே!
வைரமாக மிளிர்ந்திங்கு புரட்சித்தீ
வளர்த்திட்ட அருந்தமிழின் நாயகனே!

பெண்ணுரிமை பேசிட்ட பெருங்கவியே!
பேதமையைப் போக்கிடவே வழிச் சொன்னாய்
வண்டமிழின் வளத்தையெல்லாம் வாழ்த்துரைத்து
வான்புகழும் செந்தமிழே உயிரென்றாய்
பண்பாட்டை தரணிக்கே பறைச்சாற்ற
பாட்டாலே பைந்தமிழின் திறம்சொன்னாய்
கொண்டாடி கொண்டாடி தமிழினத்தின்
கொள்கையினை கொடையாக்கி தடம்பதித்தாய்

தளர்வுற்ற மானுடத்தின் திண்மையினை
தரணியெங்கும் தண்டமிழால் நிலைநிறுத்தி
பிளவுற்ற சமூகத்தில் பொதுவுடைமை
பேரொளியை பரப்பிடவே முற்பட்டாய்
இளமையோடு பொலிவாக மிளிர்கின்ற
இணையற்ற செந்தமிழை செம்மையாக்கி
கள்ளார்களையும் களைந்திங்கே எளியோரின்
கண்ணீரைத் துடைத்திடவே புறப்பட்டாய்

பாட்டாளி படுந்துயரை எடுத்தியம்பி
பாரினிலே வேறுபாட்டை வேரறுத்தாய்
ஏட்டினிலே மட்டுமில்லை புரட்சித்தீ
இருள்வாழ் மக்கட்கே நீபடைத்தாய்
பாட்டாலே பாருக்கே பகுத்தறிவை
பைந்தமிழில் விதைத்திடவே பிறந்துவந்தாய்
ஆட்கொள்ளும் ஆளுமையும் தனித்திறனும்
ஆசானே கற்றறிந்தோம் உன்னிடத்தில்


வளர்மதி முருகன்
புதுச்சேரி




## 1. உயரப் பறக்கும் பருந்து

உயரப் பறக்கும் பருந்து
இரையை நோக்கும் கூர்ந்து!
சரியாய்க் கணிக்கும் குறியை!
இறங்க அசைக்கும் சிறகை!

இறங்கிய விசையில் பருந்து
கவ்விய உணவைக் கொண்டு
சிறகை அசைத்து விரைந்து
உயரப் பறக்கும் பருந்து!

சிறப்பு என்ன இருக்குது?
சிறந்த கவனம் இருக்குது!

## 2. கிளியின் அலகைப் பாரு!

கிளியின் அலகைப் பாரு!
சிவந்த அழகைப் பாரு!
உடலின் வண்ணம் பாரு!
உகந்த பச்சை பாரு!

குழந்தை போல இருக்கும்!
பழங்கள் விரும்பி உண்ணும்!
கீக்கீ கீக்கீ என்று சத்தம்
குரலில் வரும் சத்தம்!

பாடச் சொன்னால் பாட்டு
பாடிச் செல்லும் பாட்டு!

## 3. வண்ணச் சட்டைப்பூச்சி!

வண்ணச் சட்டைப்பூச்சி!
சின்ன பட்டாம்பூச்சி!
பறக்கும் பூவைப் போல
பறக்கும் அழகைப் பாரு!

வண்ணச் சட்டைப்பூச்சி!
சின்ன பட்டாம்பூச்சி!
பூக்களில் தாவித் தாவி
பறக்கும் பட்டாம்பூச்சி!

பூக்களில் தேனை உறிஞ்சும்!
எனக்கும் தேன் பிடிக்கும்!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.



# உழைப்பால் உயர்ந்த அன்பு...

மாலதி சந்திரசேகரன்

**வை**கறைப் பொழுது இன்னும் விடியவில்லை. வானத்தில் வெள்ளி முளைத்து, மங்கலாகக் கசிந்த வெளிச்சத்தில் பொட்டல் காடு அமைதியாக இருந்தது. அந்தக் கிராமத்தின் ஓரத்தில் இருந்த ஓட்டு வீட்டின் கதவு 'கிரீச்' என்ற சத்தத்துடன் திறந்தது.

முத்துவும் அவன் மனைவி பொன்னியும் அந்தக் கிராமத்தின் சலவைத் தொழிலாளர்கள். பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலைச் செய்தாலும், ஊரில் அவர்களுக்கு என்று ஒரு தனி மரியாதை இருந்தது. காரணம், அவர்களின் நேர்மையும், உழைப்பும்.



'என்னங்க, எந்திரிச்சிட்டீங்களா? நான் அடுப்ப மூட்டி கஞ்சி ஊத்தி வச்சிட்டேன். குடிச்சிட்டு மூட்டையைத் தூக்குங்க,' என்றாள் பொன்னி, அடுப்பங்கரையில் இருந்து புகையோடு போராடியபடி.

முத்து திண்ணையில் அமர்ந்து கயிறு கட்டிய கட்டிலில் இருந்து எழுந்தான்.

'இந்தா வந்திட்டேன் பொன்னி. நேத்து ராத்திரி அந்தப் பண்ணையார் வீட்டுத் துணியை வெளுத்தப்போ கவனிச்சியா? ஒரு வெள்ளை வேட்டியில பத்து ரூபாய் நோட்டு அப்படியே இருந்துச்சு. அதைத் தனியா எடுத்து வச்சிருக்கேன், இன்னைக்குக் கொண்டு போய் குடுக்கணும்,' என்றான்.

ஆற்றங்கரை உரையாடல்

இருவரும் துணி மூட்டைகளைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆற்றங்கரைக்கு நடக்கத் தொடங்கினர். பனி மூட்டம் கால்களை உரசிச் சென்றது.

முத்து: 'பொன்னி, இந்தத் தடவை மழை கம்மிதான். ஆத்துல தண்ணி கொஞ்சமா ஓடுது. துணியை அடிச்சுத் துவைக்கிறப்போ கவனமா இருக்கணும். பாறைங்க மேல சேறு படிஞ்சிருக்கும்.'

'தெரியும்ங்க. ஆனா, இந்தத் தடவை துணிங்க ரொம்ப அழுக்கா இருக்கு. கல்யாண விசேஷம் முடிஞ்ச துணிங்கல்ல? அதான் எண்ணெய்ப் பிசுக்கும், சாம்பிராணி வாசனையுமா இருக்கு. நாமதான் பார்த்துப் பார்த்து வெளுக்கணும். அப்பத்தான் ஊர் ஜனங்க நம்ம நேர்மையை மெச்சுவாங்க.'

முத்து: (சிரித்துக்கொண்டே) 'மெச்சுறது இருக்கட்டும் பொன்னி. ஒரு துணி கிழியாம, சாயம் போகாம வெளுத்துத் தரணும். அதுதான் ஒரு தொழிலாளிக்கு அழகு. காசுக்காக வேலை செய்யுறதை விட, மனசுக்காகச் செய்யணும்.'

நேர்மையும் சோதனையும்

ஆற்றங்கரையில் கல்லைத் தேய்க்கும் சத்தம் 'டப் டப்' என எதிரொலித்தது.

முத்து துணிகளைத் துவைக்க,

பொன்னி அவற்றை அலசிப் பிழிந்து மணலில் பரப்பினாள். மதிய வெயில் உச்சிக்கு வந்தபோது, முத்து ஒரு பட்டுச் சேலையை விரித்தான். அது ஊர் பெரியவரின் பேத்திக்குச் சொந்தமானது.

திடீரென பொன்னி கத்தினாள், 'என்னங்க! இங்க பாருங்களேன்!'

அவள் கையில் ஒரு தங்கச் சங்கிலி இருந்தது. அந்தப் பட்டுச் சேலையின் மடிப்பிற்குள் அது சிக்கிக்கொண்டிருந்தது.

பொன்னி: 'சாமி! இது பெரிய நகை மாதிரி தெரியுதே? இதுல ஒரு மூணு பவுன் இருக்குமா?'

முத்து அந்தச் சங்கிலியை வாங்கிப் பார்த்தான். வெயிலில் அது மின்னியது. அவன் கண்கள் ஒரு நிமிடம் பிரமிப்பில் விரிந்தன. ஆனால், அடுத்த வினாடியே அவன் முகம் தெளிவடைந்தது.

முத்து: 'பொன்னி, இது நம்ம சொத்து இல்லை. அந்தப் பெரியவர் வீட்டுப் பிள்ளைங்களுக்குச் சொந்தமானது. அவங்க பாவம், இதைக் காணோம்னு ஊரே கதியின்னு தேடுவாங்க. நம்ம கஷ்டம் நமக்கு, அவங்க கஷ்டம் அவங் களுக்கு.'

பொன்னி மனதார ஆமோதித்தாள். 'ஆமாங்க, தப்பான காசு நமக்கு வேணாம். உழைச்சுச் சாப்பிடுற கஞ்சியே நமக்குத் தேவாமிர்தம். சாயங்காலம் துணியைக் கொண்டு போகும்போது அப்படியே இதைக் குடுத்திடலாம்.'

மாலை மறைந்தது. துணிகள் எல்லாம் மடிக்கப்பட்டு மூட்டையாக மாறின. முத்துவும் பொன்னியும் ஊருக்குள் நுழைந்தார்கள். முதலில் பண்ணையார் வீட்டுக்குப் போய் பத்து ரூபாயைக் கொடுத்தார்கள். பண்ணையார் ஆச்சரியப்பட்டுப் போனார். 'இந்தக் காலத்துல பத்து ரூபாயை யாராவது திருப்பிக் குடுப்பாங்களா? நீ ரொம்ப நல்லவன் முத்து!' என்றார்.

அடுத்து பெரியவர் வீட்டின் திண்ணைக்குச் சென்றனர். அங்கே வீடே களேபரமாக இருந்தது.

பெரியவர்: 'என்ன முத்து, துணி கொண்டு வந்தியா? இப்போ அதெல்லாம் முக்கியமில்லை. என் பேத்தி கல்யாணச்

## வாழ்த்து சொல்வோம்

கருமலைப் பழம் நீ

கிளம்பிய புயலின் சீற்றம்
கீழ்மேல் உருட்டிச் செல்ல
புலம்பின ரப்பர் வாய்கள்
விளைந்ததே அறத்தின் சீற்றம்

மக்களின் தீர்ப்பை ஏற்போம்
மாநிலம் மகிழ்ச்சி காணும்
தக்கநல் லாட்சி பூக்க
தாயென வாழ்த்து சொல்வோம்

தமிழினைக் கட்டிக் காக்கும்
தலைவனாய் நிமிர்ந்து நின்று
அமிழ்தென ஆட்சி செய்ய
அனைவரும் விரும்பு கின்றோம்

புதியதோர் புயலே வாழ்க
புதுமைகள் புரிய என்றும்
மதிநுட்பம் கொண்டு நல்ல
மாற்றங்கள் மலர வாழ்க!

சங்கிலியை எங்கேயோ தொலைச்சிட்டா. அதான் தேடிக்கிட்டு இருக்கோம்.'

முத்து மெதுவாகத் தன் மடியில் இருந்து அந்தச் சங்கிலியை எடுத்தான். 'ஐயா, இதுதானா பாருங்க. அந்தப் பட்டுச் சேலையில சிக்கிக்கிட்டு இருந்துச்சு.'

வீடே நிசப்தமானது. பெரியவரின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

'முத்து, இது வெறும் நகை இல்லை. இது எங்க குடும்பத்தோட நம்பிக்கை. நீ நினைச்சிருந்தா இதை வித்திருக்கலாம். ஆனா உன் மனசு சுத்தமானது,' என்று நெகிழ்ந்தார் பெரியவர்.

பெரியவர் முத்துவுக்குப் பணமும், புதுத் துணிகளும் பரிசாகக் கொடுத்தார். முத்து மறுத்தாலும் கட்டாயப்படுத்தி வழியனுப்பினார்.

வீட்டுக்குத் திரும்பும் வழியில், பொன்னி பெருமிதத்துடன் முத்துவைப் பார்த்தாள்.

பொன்னி: 'என்னங்க, இன்னைக்கு நமக்குத் தூக்கம் ரொம்ப நிம்மதியா வரும்ல?'

'நிச்சயமா பொன்னி. காசு பணம் என்னைக்கும் வரும் போகும். ஆனா, நம்ம உழைப்பும், இந்த ஊர் மக்கள் நம்மமேல வச்சிருக்க நம்பிக்கையும் தான் நம்மளோட உண்மையான சொத்து.'

நிலவொளியில் அந்தச் சிறிய குடிசை, மாளிகையை விடப் பிரகாசமாகத் தெரிந்தது. அவர்களின் நேர்மையும், உழைப்பும் அந்தக் கிராமத்தின் இருளைப் போக்கும் ஒளியாக இருந்தது.

## பசுமை நிறைந்தவள்

வீட்டின் வாசலில்
வசந்தம் போல நிற்கின்றாய்...

சேலையின் மடிப்பிலும்
சாந்தம் ஒன்று தெரிகின்றது...

சாதாரண நாளிலும்
அழகு வந்து சேர்கின்றது...

வெயிலோடும் வாழ்வை
நீ சிரித்தே தாங்குகின்றாய்...

கைகளில் வேலைகளிருந்தும்
கண்களில் கனவு காண்கின்றாய்...

காற்றிலாடும் கூந்தலில்
கவிதை ஒன்று தவழ்கின்றது...

துணிகள் உலர்த்திட
திருநாளாய் என்னுள் மாறுகின்றது,..

தூயமனம் கொண்டவளே
தேம்பி அழுதிடத் தோன்றுகிறது...

பார்க்கும் விழிகளுக்கு
பாசம் மட்டுமே தருகின்றாய்...

பசுமை நிறைந்தவளே
பார்க்காது தவிக்கின்றேன் பாரினில்...

**தமிழ் தம்பி**



ரஸ்னா ரம்ஸான்

இலங்கை , அக்குறணை

தொடர் : 13

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ஐஸ்வர்யா காய்கறிகளை நறுக்கத் தொடங்கியபோது, அந்த எக்ஸிகியூட்டிவ் கிச்சனின் குளிர்சாதன வசதியையும் மீறி அவளுக்குள் ஒரு தகிப்பு ஏற்பட்டது. காரணம், அவளுக்குச் சற்று தள்ளியமர்ந்து, அவளது ஒவ்வொரு விரல் அசைவையும், கத்தியின் வேகத்தையும் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அஷ்வினின் கூர்மையான பார்வைதான்.

அவளது கைகள் லேசாக நடுங்குவதை அஷ்வின் கவனிக்காமல் இல்லை. அவனது இதழ்களில் ஒரு கசப்பான புன்னகை அரும்பியது.

‘என்ன ஐஸ்வர்யா... கத்தி உங்க கைக்கு புதுசு மாதிரி தெரியுது? முன்னாடி எல்லாம் உங்க சமையல்ல ஒரு வேகம் இருக்கும், இப்போ வெறும் நடுக்கம் மட்டும்தான் தெரியுது‘ என்றான் அஷ்வின், நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தபடி.

ஐஸ்வர்யா அவன் பக்கமாகத் திரும்பவில்லை. தன் பார்வையைத் தக்காளி மற்றும் வெங்காயத்தின் மீது மட்டுமே நிலைநிறுத்தி, ‘வேலையில இருக்குற கவனம், பேசுற பேச்சில சிதறக் கூடாதுனு நீங்கதானே சார் நேத்து போன்ல

சொன்னீங்க? நான் என் வேலையைச் செய்றேன், நீங்க உங்க டைமரை கவனிங்க,' என்றாள் மிக அமைதியாக, ஆனால் அழுத்தமாக.

அவள் தன்னை 'சார்' என்று அழைத்த ஒவ்வொரு முறையும் அஷ்வினின் உள்ளுக்குள் ஏதோ ஒன்று சுருக்கென்று தைத்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னால், இதே போன்ற ஒரு சூழலில் தன்னை 'அஷ்வின்' என்று உரிமையோடு அழைத்து, தன் சமையலில் குறை கண்டுபிடித்த அதே ஐஸ்வர்யாதான் இன்று தன் முன்னால் அத்தனை அந்நியமாய் நின்று கொண்டிருக்கிறாள்.

நேரம் வேகமாக ஓடியது. முப்பது நிமிடங்கள் என்பது ஒரு செஃபிற்கு மிகக் குறுகிய காலம். ஆனால், ஐஸ்வர்யா தன் அம்மாவின் கைபக்குவத்தையும், இத்தனை வருடத் தேடலையும் அந்த உணவில் கொட்டினாள். அவள் தேர்ந்தெடுத்தது ஒரு பாரம்பரியமான, அதே சமயம் நவீன முறையில் பரிமாறக்கூடிய 'சிக்கன் ஸ்டஃப்டு பராத்தா மற்றும் ஸ்பெஷல் மிண்ட் சட்னி' (Chicken Stuffed Paratha with Special Mint Chutney).

மசாலாக்கள் வதங்கும் மணம் அந்தப் பெரிய சமையலறை முழுவதும் பரவியது. அஷ்வின் ஏற்கனவே அந்த வாசனைக்கு மிகவும் பழகியிருந்தான். அவன் அறியாமலேயே அவனது நாற்காலியிலிருந்து நிமிர்ந்து அமர்ந்தான்.

சரியாக இருபத்தெட்டாவது நிமிடத்தில், ஐஸ்வர்யா ஒரு நேர்த்தியான வெள்ளை நிறத் தட்டில் உணவை அழகாக அலங்கரித்து (Plating) அஷ்வினின் முன்னால் இருந்த மேஜை மீது வைத்தாள்.

'டைம் அப் சார். உங்களுக்கான டிஷ் ரெடி,' என்று கூறிவிட்டு இரண்டு அடிகள் பின்வாங்கி, கைகளைக் கட்டிக்கொண்டு நின்றாள்.

அஷ்வின் மெதுவாக எழுந்து மேஜையருகே வந்தான். தட்டில் இருந்த உணவின் நேர்த்தியைக் கண்டவன், மனதிற்குள் அவளது சமையல் கலைத் திறமையை மெச்சினாலும், வெளியில் அதைக்காட்டிக் கொள்ளவில்லை. ஒரு ஃபோர்க் (Fork) மற்றும் கத்தியை எடுத்து, அந்த பராத்தாவின் ஒரு பகுதியை வெட்டினான். உள்ளே இருந்த சிக்கன் கலவை சரியாக வெந்து, சரியான பதத்தில் இருந்தது.

அவன் ஒரு துண்டை வாயில் வைத்தான்.

அடுத்த நொடி, அவனது கண்களுக்குள் ஒரு மின்னல் வெட்டியது. நேற்று திருமண விழாவில் மஹிரா கொடுத்த உணவை விட, இது இன்னும் நேரடியாக அவனது இதயத்தைத் தாக்கியது. இந்தச் சுவை... அவனது கல்லூரிக் காலத்தில், அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு சிறிய போட்டிக்காகத் தயாரித்த அதே சுவை. அதில் ஒரு துளி கூட மாறவில்லை.

அஷ்வின் உணவை விழுங்கிவிட்டு, முகத்தை எவ்வித சலனமுமின்றி வைத்துக் கொள்ள முயன்றான். ஆனால், அவனது கண்கள் லேசாகச் சிவந்திருந்ததை ஐஸ்வர்யா கவனித்துவிட்டாள். அவளது நெஞ்சு 'படபட'வென அடித்துக் கொண்டது.

'சுவை நல்லா இருக்கு... ஆனா, உன்னோட பழைய சமையல்ல இருந்த ஏதோ இதில குறைவா இருக்குற மாதிரி தெரியுது ஐஸ்வர்யா. இது ஏதோ கடமைக்குச் செஞ்ச மாதிரி இருக்கு,' என்றான் அஷ்வின், தன் குரலில் இருந்த

தடுமாற்றத்தை மறைத்துக்கொண்டு.

பசியோட வர்றவங்களுக்கு உணவளிக்கும் ஒரு சாதாரண வேர்கரா நான் இங்க வந்திருக்கேன். அதுல கடமை மட்டும்தான் இருக்கும். சுவையில ஏதும் குறை இருந்தா சொல்லுங்க, நான் கிளம்புறேன்.'

'நான் இன்னும் உன்னைப்போகச் சொல்லல' அஷ்வினின் குரல் சமையலறை முழுவதும் எதிரொலித்தது. அவன் அவளருகே நெருங்கி வந்தான். அவளது கண்கள் அவனது வருகையில் லேசாக விரிந்தன.

'நீ செலக்டட். நாளைல இருந்து நீ இந்த எக்ஸிகியூட்டிவ் கிச்சனோட அசிஸ்டென்ட் செஃப். உன்னோட அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கவின் உனக்குத் தருவான். ஆனா ஒன்னு ஞாபகம் வச்சுக்கோ... இது வேலைக்கான இடம் மட்டுமல்ல சில மறைக்கப்பட்ட உண்மைக்கான ஆரம்பம்' என்று அவன் கூறிமுடிக்கும் போது, அவனது போன் ஒலித்தது.

திரையில் 'அவினாஷ்' என்று காட்டியது. அஷ்வின் போனை எடுத்துக் கொண்டு ஜன்னலோரம் செல்ல, ஐஸ்வர்யா ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுவிட்டு, தன் பையோடு கிச்சனை விட்டு வெளியேறினாள். அவளது கால்கள் தரையில் ஒட்டாமல் நடப்பது போல் இருந்தது. 'நான் உள்ளே நுழைந்துவிட்டேன் அஷ்வின்... ஆனா என் மனசை உன்கிட்ட தோற்கடிக்க மாட்டேன்,' என்று தனக்குள் சபதம் செய்து கொண்டாள்.

ஹோட்டலின் வரவேற்பறைக்கு வந்த ஐஸ்வர்யாவை நோக்கி ஓடி வந்தாள் ராகினி. அவளுடன் பிரியாவும், சாலினியும் இருந்தனர். ராகினிக்கு இன்று காலையில் இருந்தே தன் அக்காவுக்கு என்ன வேலை கிடைக்கப்போகின்றது என்ற ஆர்வம் தாங்கவில்லை.

'அக்கா! என்னாச்சு? இன்டர்வியூ நல்லா போச்சா? அஷ்வின் சார் என்ன சொன்னாரு?' என்று ராகினி அவளது கைகளைப் பற்றிக் குலுக்கினாள்.

ஐஸ்வர்யா ராகினியின் முகத்தைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்து, 'வேலை கிடைச்சிடுச்சு மா. நாளைல இருந்து அசிஸ்டென்ட் செஃப்பா ஜாயின் பண்ண சொல்லியிருக்காங்க,' என்றாள்.

'வாவ்! சூப்பர் அக்கா! நான் சொன்னேன்ல, பிரின்ஸஸ் எப்பவுமே கிரேட் தான்' என்று சாலினி துள்ளிக் குதித்தாள். பிரியாவும் ஐஸ்வர்யாவைக் கட்டியணைத்து வாழ்த்தினாள்.

ஆனால், சாலினியின் கண்களில் ஒரு தந்திரமான புன்னகை மறைந்திருந்தது. அவள் மெதுவாகத் தன் போனை எடுத்து அவினாஷுக்கு ஒரு மெசேஜ் அனுப்பினாள்: 'ஆதி! பிளான் சக்சஸ். அக்கா ஹோட்டல்ல ஜாயின் பண்ண ஒத்துக்கிட்டாங்க. இளசுகள் ஆட்டத்த நாங்க லைவா பார்க்கலாம்'ட

மறுபுறம், கார் பார்க்கிங்கில் தன் பைக்கில் அமர்ந்து போனில் பேசிக் கொண்டிருந்தான் ரிஷாந்த். அவனது நண்பன் ஒருவன் போனில் ஏதோ சொல்ல, ரிஷாந்தின் முகம் தீவிரமானது.

'டேய்... நீ சொல்றது உண்மையா? அந்தப் பொண்ணு ராகினி, மெடிக்கல் காலேஜ்ல ஜாயின் பண்ணப்போறா ஓகே. ஆனா அவளோட அக்கா ஐஸ்வர்யா, இப்போ அஷ்வினோட ஹோட்டல்ல

*வேலைக்குச் சேர்ந்திருக்காளா? இது என்னடா புதுக் கதையா இருக்கு? அஷ்வினுக்கும் அவளுக்கும் ஏதோ பழைய கனெக்ஷன் இருக்குற மாதிரி எனக்கு நேத்தே தோணுச்சு. இரு... நான் இன்னைக்கே அஷ்வினைப் பார்த்துப் பேசணும்,' என்று கூறிவிட்டு பைக்கை ஸ்டார்ட் செய்தான்.*

*அவன் பைக்கை திருப்பிய போது, தூரத்தில் ராகினி தன் தோழிகளுடன் சிரித்துப் பேசிக்கொண்டே பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடப்பது அவனது கண்ணில் பட்டது. அவளது அந்தத் துள்ளலான நடை அவனது இதழ்களில் ஒரு சிறிய புன்னகையை வரவழைத்தது. 'பஜாரி... உன்னோட அக்காவுக்குப் பின்னாடி ஏதோ பெரிய கதை ஓடுது போல. நீதான் அது எதுவும் தெரியாம சுத்துற என தனக்குள்ளே சொல்லிக்கொண்டு பைக்கின் வேகத்தை கூட்டினான்*

*இரவு 8:00 மணி.*

*அஷ்வின் தன் அறையில் தனியாக அமர்ந்திருந்தான். கையில் அந்த உடைந்த இதயத்தின் டாலர் இருந்தது. ஐஸ்வர்யா அவனிடம் மதியம் அந்த டாலரை திருப்பிக் கொடுத்திருந்தாள். அவன் அதைத் தன் கழுத்தில் மறுபாதியோடு இணைத்துப் பார்த்தான். இரண்டு துண்டு களும் கச்சிதமாகப் பொருந்தின. ஆனால், அவர்களின் மனங்கள்?*

*அவன் லேப்டாப்பில் கவின் அனுப்பிய ஐஸ்வர்யாவின் பர்சனல் ஃபைலை (Personal File) திறந்து பார்த்தான். அதில் அவளது தற்போதைய முகவரி, அவளது தங்கை ராகினியின் விபரங்கள் மட்டுமே இருந்தன. கடந்த இரண்டு வருடங்கள் அவளது வாழ்க்கையில் என்ன நடந்தது என்ற எந்த விபரமும் இல்லை.*

*'நீ எதை மறைக்கிற ஐஸ்வர்யா? அன்னைக்கு என் கண்ணு முன்னாடியே அவன்கூட காரில் ஏறிப் போனவ தானே நீ? இன்னைக்கு ஒன்னும் தெரியாதவ மாதிரி வந்து நிக்கிற... உன்னோட இந்த மௌனத்தை நான் உடைக்கலை, என் பெயர் அஷ்வின் இல்லை' என்று ஆக்ரோஷமாகக் கூறிக் கொண்டான்.*

*அதே நேரம், ஐஸ்வர்யாவின் வீட்டில்...*

*ராகினியும் ஆனிஷாவும் தூங்கி விட்டனர். ஐஸ்வர்யா மட்டும் ஜன்னலோரம் நின்று நிலவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கையில் அந்த உடைந்த டாலர் இருந்தது.*

*'நீங்க என்னை தப்பாத்தான் புரிஞ்சு வச்சிருக்கீங்க அஷ்வின். அன்னைக்கு நான் உங்களை விட்டுட்டுப் போகல... உங்க வாழ்க்கைக்காகத்தான் நான் என்னையே அழிச்சுக்கிட்டேன். அந்த உண்மை உங்களுக்குத் தெரிஞ்சா நீங்க தாங்க மாட்டீங்க. அதனால, இந்த வெறுப்பே நமக்குள்ள இருக்கட்டும். நாளைல இருந்து நான் உங்க முன்னாடி ஒரு சாதாரண ஊழியரா நிப்பேன்... ஆனா என் இதயத்தை மட்டும் உங்ககிட்ட காட்டவே மாட்டேன்,' என்று விம்மி அழுதுகொண்டே கண்களை மூடினாள்.*

*இரு துருவங்களாகப் பிரிந்திருந்த இரண்டு இதயங்கள், நாளை ஒரே கூரையின் கீழ் சந்திக்கப் போகின்றன. அந்தச் சந்திப்பு காதலை வளர்க்குமா? அல்லது கடந்த காலத்தின் கசப்புகளைக் கிளறிப் பிரிவின் பாதையை அகலப் படுத்துமா?*

*(நேசம் தொடரும்...)*


# சாயல்

மெழுகு கொண்டு வடித்ததுபோல் மேனி
மிரட்டும் விழிகளில் மின்னல் பார்வை
கொவ்வைப் பழம் தோற்று விடும்
கொள்ளை அழகுடை செவ் விதழ்கள்

உம்மம்மாவின் வதனத்தின் வாளிப்பும்
வாப்பம்மாவின் கன்னச் சிவப்பும்
தெரிகிறதே பிள்ளையிடம் என்கிறார்கள்
அறிந்து வந்த அக்கம் பக்கத்தினர்

எங்களைப் போல்தான் சாயல் என்கிறார்
தாய் வழிப் பாட்டன் தள்ளிநின்று
தந்தை வழிப் பாட்டனுக்கோ நல்ல
தயிர்ச் சாதம் உண்பதுபோல் இருக்கிறது

பெற்றோரை நகலெடுத்துப் பிறப்பிற்கு வழிசமைத்த
வல்லோன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்
சாயலும் சடங்குகளும் சர்வ வல்லமை படைத்த
சத்திய வேதந்தந்த சங்கையாளனுக்கு எதற்கு?



எஸ். ஏ. கப்பார்
(இலங்கை)



# பாடம்

நாம்  காணும் ஒவ்வொன்றும் ஒரு பாடம்
நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு அனுபவமும் பாடம்
நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் பாடம்,
நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் பாடம்,
அதை நாம் வெறுமனே வாசிப்பதில்லை,

சிரித்து, ரசித்து, மகிழ்ந்து, அழுது, சேர்ந்து, பிரிந்து, தொலைத்து, தொலைந்து, தேடி, ஓடி, வாசிக்கின்றோம்.

வாழ்வும் அப்படியே பழக்கப் படுத்துகின்றது,
இங்கு சிரிப்புக்கு உள்ள அதே அளவு தடை அழுகைக்கும் உள்ளது,

அழுகை சொல்லித்தரும் பாடம் மிகவும் ஆழமானது அழுத்தமானது அதிலிருந்து வரும் தெளிவுகள் மிகவும் வலுவுள்ளது, அதன் பிறகு அழுதவரின் பயணம் எல்லோரையும் போல் அல்லாமல் வேறு பட்டு இருக்கும்,

அவர்களின் எதுவும் அவர்களை தவிர யாருக்கும் புரியாது,
நீங்கள் யாருக்கேனும் பாடம் நடத்த புறப்பட்டால் கற்றுக்கொண்டு திருப்புவீர்,
இங்க சிலர் தன்னை பெரிதாக நினைக்க காரணம் அதுதான்,
அவர் நிம்மதியாக இருக்க இயலாது,

தன்னைச் சரியாகவும், மற்றவர்களை மட்டமாக நினைக்கும் நினைப்பு பெயரில்லாத ஒரு பெரு நோய், இந்நோய்க்கு மருந்தும் இல்லை.

வாழ்க்கை சிறப்பாக இருக்கவேண்டுமெனில்
மனிதர்களை ஆழமாக நேசியுங்கள்,

எல்லோரிடத்திலும் பாடம் படிக்க விரும்பாமல் சிலரை தவிர்ப்பது நல்லது, ஏனென்றால் ஒரு சிலரை முழுமையாக தெரிந்துகொள்ள நினைக்கும் பொழுது தன்னையே மறக்கக்கூடும்,  தொலைக்கக் கூடும்,

இதுபோல் தன்னை தொலைத்துவிட்டு தேடுபவர்களும் இங்கு அதிகம்.
எச்சரிக்கை,
உங்கள் கவனம் உங்களுக்கு  மிகவும் முக்கியம்
உங்கள் மகிழ்ச்சி உங்களுக்கு முக்கியம்,
உங்கள் ஆரோக்கியம் உங்களுக்கு முக்கியம்
உங்கள் வளர்ச்சி உங்களுக்கு முக்கியம்,
நீங்கள் உங்களுக்கு மிக மிக முக்கியம்,
நீங்கள் தான் இங்கு முக்கியம்.




## நாகேஸ்வரி
திரைத்துறை
சென்னை, தமிழ்நாடு.

# தெய்வத்தின்-திருமகள்

சிவசு—மணியன்

நான்கு வருடங்களுக்கு முன்பு குமார், ரமா இருவரும் தன்னுடைய ஒரு வயது குழந்தை யாழினியுடன் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

குமார் என்னுடைய சித்தப்பாவின் மகன். ரமா என்னுடைய தங்கையின் மகள். இருவரும் விருப்பப்பட்டு மற்றும் பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார்கள்.

நெருங்கிய உறவுகளுக்குள் திருமணம் செய்து கொள்வது குழந்தைகளுக்கு நல்லதல்ல என்ற கேள்வி அப்போது அலசப்பட்டது.

ஒரு சிலருக்குத்தான் அப்படிக் குறை பாடுகள் ஏற்படுகிறது. பெரும்பாலும் அப்படி இருப்பது இல்லை என்றும். மருத்துவர்களிடம் ஆலோசனை செய்தும் ஒன்றும் பாதகமில்லை என்று திருமணம் செய்து கொண்டார்கள்.

குழந்தை யாழினி பிறக்கும் பொழுது ரமாவைப் பார்த்து வந்த மருத்துவர் தாமதமாக வந்ததாலோ அல்லது வேறு ஏதேனும் கோளாறு காரணமாகவோ இயற்கையான பிரசவத்தின்போது குழந்தையின் மூளைக்குப் போகும் ஆக்சிஜன் குறைபாட்டால் பிரச்சனை ஏற்பட்டு. இரண்டு மாதங்கள் வரை மருத்துவக் கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டு உயிர் பிழைத்தது பெரிய விஷயம். குழந்தை வளர வளர அதன் செயல்பாடுகளைப் பார்க்கும் பொழுது. சாதாரண குழந்தையாக இல்லாமல் சிறப்புக் குழந்தையாகவே வளர்ந்து வந்தாள்.

அடிக்கடி வலிப்பு நோய்கள் வந்த தால். குழந்தையின் வளர்ச்சியும் தாமத மாகத்தான் இருந்தது.

ஆறு வயது வரை மிகவும் ஜாக்கி ரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு சரியாகிவிடும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

வேலை நிமித்தமாக அவர்கள் இருவரும் குழந்தையுடன் வெளிநாடு சென்று விட்டார்கள்.

சகலவிதமான மருத்துவங்களும் செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். ரமா அந்தக் குழந்தைக்காகவே 24 மணி நேரமும் பயிற்சிகள் மற்றும் மருந்துகள் கொடுப்பது என்று போராடிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது வீடியோ கான்பரன்ஸ் மூலம் பேசிக் கொள்வது வழக்கம்.

இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்வது பற்றி நான் அடிக்கடி அவர்களிடம் சொல்லி வருவேன். பிற்காலத்தில் அந்தக் குழந்தைக்கு துணை வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

முற்றிலுமாக அதை மறுத்து யாழினிக் காகவே இருவரும் வாழ்ந்து வந்தார்கள். இரண்டாவது குழந்தையைப் பற்றி அவர்கள் நினைக்கவில்லை.

நான்கு வருடங்களுக்குப் பிறகு குழந்தையுடன் இப்பொழுது எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்.

என்னுடைய மகன் மற்றும் மகள் இருவரும் திருமணமாகி வேறு வேறு ஊர்களில் இருந்ததால். நானும் என் மனைவியும் மட்டும் தனியாக இருந் தோம்.

குழந்தை யாழினி அழகாக இருந்தாள். ஆனால் மனவளர்ச்சி இல்லாமல் உடலள விலும் அதிகமான வளர்ச்சி இல்லை.

எங்கள் வீட்டு வாசலில் உள்ள வராண்டாவில் உள்ள சிறுசிறு கான்கிரீட் தூண்களால செய்யப் பட்ட கைப்பிடிச்சுவர் மரத்தின் கலரில் வண்ணம் தீட்டப்பட்டதால் மரத்தால் ஆனது போலவே தோற்றமளிக்கும்.

அங்கிருந்து பார்த்தால் வெளியில் உள்ள மரங்கள் இயற்கைக் காட்சிகள் பறவைகள் பறப்பது எல்லாம் ரம்மிய மாகத் தெரியும்.

அந்தக் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு குழந்தை யாழினியை நிற்க வைத்து பயிற்சி அளிப்பது வழக்கம்.

குழந்தைக்கும் அப்படி நிற்பது மிகவும் பிடித்துப் போனதால். அவ்வப்போது பயிற்சி அளிக்க சௌகரியமாக இருந்தது.

‘குமார்...!. நீ வேண்டுமானாலும் விடுமுறை இல்லாவிட்டால் வெளிநாட் டிற்கு போய் விடு. எங்களிடம் கொஞ்ச நாட்கள் ரமாவும் குழந்தையும் இருக் கட்டும். இங்கும் நல்ல மருத்து வர்கள் இருக்கிறார்கள். பார்த்துக்கொள்கி றோம்.‘ என்று சொன்னதற்கு இணங்க குமார் வெளிநாடு சென்று ஒரு வாரம் ஆகிவிட்டது.

எங்களுக்கும் குழந்தையுடன் நன்றாக பொழுது போனது.

நான்கு வயது ஆனாலும் இன்னும் சரிவர கால்களை ஊன்றி நடக்க முடியவில்லை. ஒரு நாள் குழந்தை யாழினி தவழ்ந்து கொண்டே உள்ளே வந்தாள். என்னுடைய மகள் வாசிப்பதற்காக வைத்திருந்த வீணையை மனைவி சுத்தப் படுத்திக் கொண்டிருந்தாள்.

வீணையைப் பார்த்தவுடன் குழந் தைக்குப் பிடித்துப் போனது. பிஞ்சு விரல்களால் தந்திகளை மீட்டுவது அவளுக்குப் பிடித்திருந்தது.

நாங்களும் அப்படியே இருக்கட்டும் என்று வீணையை அவள் விளையாடும் பொருளாகவே வைத்து விட்டோம். என்னுடைய மனைவிக்கும் வீணை வாசிப்பதில் கொஞ்சம் பயிற்சி இருந்த தால். குழந்தையைத் தன் மடியில்



வைத்துக்கொண்டு வீணையை மீட்டு வதற்கான சிறுசிறு பயிற்சிகளை ஆர்வத் துடன் சொல்லிக் கொடுத்தாள்.

குழந்தையும் அவள் சொல்படி வீணை யின் தந்திகளை அப்படியும் இப்படியும் பிஞ்சு விரல்களால் மனம் போன போக்கில் வாசித்துக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் திடீரென்று என் மனைவி என்னைக் கூப்பிட்டு 'கொஞ்சம் இங்க வர்றீங்களா. எப்படி ஸ... ப... ஸ வாசிக்கி றாள்.... பார்த்தீர்களா?' என்று ஆச்சரி யத்துடன் சொன்னாள்.

எனக்கு அது பற்றி ஒன்றும் தெரியாத தால் 'அப்படியா....? மேற்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக சொல்லிக் கொடேன். ஒரு மாறுதலாக இருக்கும். குழந்தைக்கும் ஒரு கலையில் தேர்ச்சி பெற்றால் நல்லது தானே'என்று பதில ளித்தேன்.

'என்னங்க நீங்க. வீணையை மடியில் வைத்துக்கொண்டு வாசித்தால்தான் சரியாக வரும். குழந்தையால் எப்படி முடியும் ?..' என்று கேட்டாள்.

'நீதானே வாசிக்கிறாள் என்று சொன் னாயே' என்று கேட்டேன். தன்னுடைய மடியில் உட்கார வைத்துக் கொண்டு சிறு சிறு சிறு பயிற்சி களைச் சொல்லிக் கொடுத்தாள் என் மனைவி.

குழந்தையின் விரலுக்கு ஏற்றபடி நெளி என்று சொல்லப்படும் கம்பிகளால் ஆன மீட்டுகோளை ஒருவிதமாக வளைத்து சிறியதாக்கி குழந்தையின் வலது கை ஆள்காட்டி விரலில் மாட்டி.விட்டு அவளது இடது கை மேற்பகுதியை அழுத்துவதற்கு எட்டாத தால் தன்னுடைய கையால் கம்பிகளை அழுத்திக்கொண்டு பயிற்சி கொடுத்தாள்.

இப்படியாக ஒரு மாதம் கழிந்து விட்டது.

குமாரும் ஊரிலிருந்து அவர்களை அழைத்துப் போவதற்காக வந்தான்.

எங்களுக்குக் குழந்தையைப் பிரிய மனது இல்லா விட்டாலும். அவர்கள் போக வேண்டிய கட்டாயம்.

'குமார்..!. நம் யாழினி போன்று ஸ்பெஷல் குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு விஷயத்தில் ஈடுபடுத்தினால் . நிச்சயமாக ஈடுபாட்டுடன் செய்வார்கள். அது அவர் களது வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும். எனக்கு என்னவோ சொல்லிக் கொடுத்தால் வீணை வாசிப்பு அவளுக்குக் கைவரும் என்று நினைக்கிறேன். கொஞ் சம் வளர்ந்ததும் அதற்கான ஏற்பாடு களைச் செய்யுங்கள்.' என்று சொன்னதற்கு மிகவும் மகிழ்ச்சியுடன் எனக்கு நன்றி சொன்னார்கள் இருவரும்.

'என்னை விட உன்னுடைய அண்ணிக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.' என்று சொன்னவுடன்

'ஆமாம் மாமா... மாமி.. தான் இதற்கு முழு முதற் காரணம்' என்று ஆமோதித்தாள் ரமா.

'எல்லாம் சரிதான். இன்னொரு குழந்தை வேண்டாம் என்று நீங்கள் முடிவெடுத்தது இதுவரை சரியாகவே இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் அவளுக்குத் துணையாக தம்பியோ தங்கையோ அவசியம் வேண்டும்" என்று நான் சொன்னதற்கு இருவரும் தலை அசைத்து ஆமோதித்தார்கள்.




ஆக்கம்.

**குயில்.மு.இரசியா பேகம்**

தஞ்சை

# மின்னலைத் தேடி...



குயில்.மு.இரசியா பேகம்

## 2

சனா தன் வீட்டை அடைந்தபோது வாசலில் மகிஷாவின் காலணிகள் பார்க்கிறாள்.

மகி வந்து விட்டாள் என்று காலிங் பெல்லை அழுத்துகிறாள்.

கதவைத் திறந்த மகி' என்ன இவ்வளவு நேரம் என்கிறாள்?.'

மகியும் சனாவும் பள்ளித் தோழிகள். பிளஸ் 2 முடித்தபின் இருவரும் இருவேறு துறைகளைத் தேர்ந்து எடுக்கின்றனர்.

ஒருத்தி என்ஜினீயரிங், சனா மருத்துவம் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி யில் சேர்கிறாள்.

இருவரும் ஒருவீட்டை வாடகை எடுத்துக்கொண்டு தங்கி படிக்கிறார்கள். உணவு மற்றும் வாடகையை பகிர்ந்து கொண்டு வாழ்கிறார்கள.

இருவரும் தஞ்சையில் பாபநாசம் என்ற கிராமத்தை சேர்ந்தவர்கள்.

சனாவை நல்ல அழகி என்று சொல்ல வேண்டும்.

மகியும் அழகிதான் சனாவைவிட ஒரு மாற்று கம்மியான நிறம்.

சனா இஸ்லாமியப் பெண், மகி ஹிந்துப் பெண். மதம் இருவருக்கும் ஒரு பொருட்டில்லை. உயிருக்குயிரான சிநேகிதிகள் இருவரும்.

சனா 'மகி ஏன் கேட்கிறாய் என்ன வெல்லாம் நடந்தது தெரியுமா?' என்று எல்லா கதையும் கோர்வையாக சொல்லி முடிக்கிறாள்.

'நான் இப்போது இந்த கருப்பு பையில் இருந்து போன் எடுத்து பேசப் போறேன்.'

‘ஏய்! லூசா நீ!

நமக்கெதுக்கு வம்பு

நாளைக்கு காலேஜிக்கு போய் யாராவது சாரிடம் சொல்லி கொடுத்து விடுவோம். அப்புறம் அது அவுங்கப்பாடு‘

சனா பதில் பேசவில்லை

ஆனால் அவள் மனது அவளை அரித்தது.

அந்த சமயத்தில் மீண்டும் போனடிக்க, போனை எடுத்து ஹலோ என்றாள்.

நீங்க யாரு?

சாகுல் இல்ல?

‘அம்மா என் பெயர் சனாம்மா கொஞ்சம் பதறாமல் கேளுங்கம்மா ’

நீங்க யாருங்க?

இன்று சாயங்காலம் என்று ஆரம்பித்து



நடந்த கதையை சொன்னாள்

பதறிய அந்த தாய் இப்போ என் பிள்ளை எங்கம்மா?

நான் மெடிக்கல் காலேஜ்ல இரண்டா மாண்டு படிக்கிறேன்.

உங்கப்பிள்ளையை என் காலேஜ் இந்திரா காந்தி அரசு மெடிக்கல் காலேஜ் அட்மிட் பண்ணி இருக்கனும் என்று நினைக்கிறேன்.

நீங்க எங்கிருங்கீங்க?

‘காரைக்கால்‘

நெட்ல பார்த்து பக்கத்து போலீஸ் டேசனுக்கு கால் பண்ணி விபரம் கேளுங்க

அது நடந்த இடம் ரெட்டியார் பாளையம். அருகிலுள்ள மோர் மார்க்கெட் எதிரில் நடந்தது.

‘அவர் எங்கிருக்கார் என்ற விபரம் எனக்கு இதே போனில் சொன்னீங்கன்னா நாளை காலை 11 மணி வாக்கில் தங்களிடம் உங்கள் போன் மற்றும் பேகை கொடுத்து விடுகிறேன்‘


‘அந்த பேகில் நகை இருந்ததா?‘

‘அய்யோ அம்மா அதெல்லாமில்லை...’

‘சரி என் மகன் உயிரோட வந்தால் போதும்‘ என்று சொல்லி போனை வைக்கிறாள்.

அட இதென்ன வேலியில் போன ஓணான் கதையா? நகை எங்கே? என்ற கவலையுடன் சனா

தொடரும்.



# தெம்மாங்கு பாடவந்தேன் தென்னந் தோப்போரம்

அத்தமக ரத்தினமே
ஆசையுள்ள சித்திரமே
மாமன் நானும்
காத்திருக்கேன் ஒனக்காகத்தான்
ஆடி அசைஞ்சி
மனசத்தான் பறிக்கிறியே
அன்ன நடையிலே
சின்ன இடையில
கண்ணுந்தான் அலைபாயுது
மோகமும் கூடுதே
மல்லிகைப்பூ கொண்டையில
அத்தானை முடிஞ்சிக்கடி
ஆசையாத்தான் நானிருக்கேன்
கண்டுக்காம போவதென்ன
இலவம் பஞ்சு
சேலைய கட்டியவளே
தெம்மாங்கு பாட வந்தேன்
தென்னந் தோப்போரம்
அத்த பெத்த அழகுச் செல்லமே
நெஞ்செமெல்லாம் ஒன்
நெனப்புதான் கண்ணே
அன்னக்கிளியே சொர்ணமே
தாளாமத்தான் தவிக்கிறேனே
செவத்த ஒதட்டுல
முத்தம் தந்திடவா
மாராப்புல ஒளிச்சி
வைத்ததென்ன என்னத்தான்

வட்டப் பொட்டுக்காரி
கட்டழகு ஒடம்புக்காரி
கண்ணாலம் கட்டிக்கிட
நாளும் வந்திடுச்சி
சம்மதம் சொல்லிடு
சங்கடத்தை தீர்த்திடு
பருவத்தில பூத்தவளே
சங்கதியெல்லாம் தெரிஞ்சவளே
மாலையோட காத்திருக்கேன்
மணமேடைக்கு வந்திடடி
தாலியத்தான் கட்டுறேன்
பொஞ்சாதியா ஏத்துக்கிறேன்
சந்தோசமா நாமிருப்போம்
சஞ்சலமில்லாம வாழ்ந்திருப்போம்
ஒத்துமையா நாமிருந்தா
ஓராயிரம் இன்பந்தானே
தென்றலும் வீசிடும்
தேகமும் சொகமாகும்
பெரியவங்க ஆசிர்வதிப்பாங்க
நூறாண்டு வாழ்ந்திடத்தானே...


**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்

# உன் நிழல்

திரும்பிப் பார்க்க
திரும்பாமல் இருக்கும்
உன் நினைவுகள்...

ஒரு கடலைப் போல...
நெருங்கினால் தொடும்,
தொட்டவுடன் விலகும்...

நீ சென்ற பாதைகள் எல்லாம்
இன்னும் உன் நிழலை
தாங்கிக் கொண்டிருக்கின்றன...

ஆனால்..?
நினைவுகள் மட்டும்
ஒருபோதும் திரும்பிப் பார்க்காது..!

என்னவள்
திண்ணத்தில்...

தமிழ் தம்பி



## பள்ளத்தில் இருப்பவன்

(தன்முனை அந்தாதி)

உச்சியில் நிற்பவன்
பள்ளம் அறியான்
பள்ளத்தில் இருப்பவன்
உச்சி அறிவான்

அறியாத பாதையை
தேடியே தெளிவான்
சரியான முயற்சியில்
தரித்தே நிற்பான்

நிற்கும் இடம்
கருதி பொருந்துவான்
எது வந்து தடுப்பினும்
உவந்து ஏறுவான்

எறி பந்து போல
விசை கொண்டு எழுவான்
நிலமிசை நசையற்ற ஒழுங்கில்
ஒருங்கி வாழ்வான்.

தளர்ந்து போகான்
கிளர்ந்தே வளர்வான்
ஊர்ந்தே ஏறினாலும்
உச்சியில் நிற்பான்

சசிகலா விஸ்வநாதன்

# திருமணங்கள்

## சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதில்லை

சொந்தகாரர்களின் குடைச்சல் தாங்க முடியாததால் பெண் பார்க்க சென்றான் அவன்...

மாப்பிள்ளைக்கு இருக்கும் ஒரே கெட்ட பழக்கம், அவன் ஒரு 'காபி பிரியன்'. இதை ஏற்கனவே சொந்தகாரர்கள் மூலம் அறிந்து கொண்ட பெண் வீட்டார், பொண்ணு அவள் கையால் போட்ட காபி என்று சொல்லி அவள் கையாலே காபியை பறிமாற வைத்து விட்டார்கள், அப்படி ஒரு காபியை அவன் இதுவரை குடித்ததே இல்லை..

அவ்வளவு சுவை...

அவன் மெய்மறந்து குடித்து கொண்டிருக்கும் போது 'என்ன மாப்ள காபி புடிச்சிருக்கா?' என்று பெண்ணின் தகப்பனார் கேட்க, அதே நேரத்தில் ''என்னடா பொண்ண புடிச்சிருக்கா'' என்று பையனின் சித்தப்பா கேட்க ,

'ரொம்ப புடிச்சிருக்கு... சான்சே இல்ல..' என்று மாப்பிள்ளை சொல்லி விட்டார்.

அப்புறம் என்ன?

'பையனே பொண்ண ரொம்ப புடிச்சிருக்குன்னு சொல்லிட்டான்' என்று சொல்லி சித்தப்பா தட்டை மாற்றி விட்டார். கல்யாணமும் முடிந்து விட்டது.

முதலிரவில் நம்ம மாப்ள தன் மனைவியின் கையை பிடித்து கொண்டு, 'எனக்கு சுவையான காபியை போட்டுத்தந்த இந்த கைக்கு அன்னைக்கே முத்தம் குடுக்கனும்னு நெனச்சேன்.. ஆனா உங்க அப்பா திட்டுவாருன்னு பேசாம போயிட்டேன்'

'நீங்க அன்னைக்கே முத்தம் குடுத்திருந்தாலும் எங்க அப்பா ஒன்னும் சொல்லி இருக்க மாட்டாரு, ஏன்னா அந்த காப்பிய போட்டதே எங்க அப்பா தான். அதனால தான் காபி எப்படி இருக்கு மாப்ளன்னு ரொம்ப ஆர்வமா உங்க கிட்ட கேட்டாரு...'

'அப்புறம் எதுக்கு நீ போட்டதுன்னு உங்க அம்மா பொய் சொன்னாங்க ??'

'அந்த பொய்ய சொல்ல சொன்னதே உங்க அம்மாவும் உங்க சித்தியும் தான். எனக்கு பொய் சொல்ல தெரியாது. எனக்கு அடுப்பு கூட பத்த வைக்க தெரியாதுன்னு அப்பவே அவங்க கிட்ட உண்மையை சொல்லிட்டேன்'

- நீதி : திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கபடுவதில்லை, சொந்தகாரர்களால் நிச்சயிக்கப்படுகிறது.

Nagamany Sathasivam

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

.

கண்ணே மணியே கனியமுதே; நான்சூடும்
பொன்னே அழகே புதுவுலகே; - என்னை
உனதசைவால் ஆள உருவெடுத்து வார
மனதளவில் போனேன் மகிழ்ந்து.

.

வாய்க்கசந்தால் நீபேசு; வம்பென்றால் கண்சிமிட்டு;
சாய்ந்துநான் சோர்வில் சலித்திருந்தால்; - வாய்மொழிந்து
அப்பாஅம் மாவென் றழைத்துவிடு; செல்வமே;
எப்போதும் நீதானே இல்.

.

சொந்தங்கள் கோடி சுகமாய் அருகிருந்தும்
உந்தன் அருகென் உயிருஇருக்கும் - அந்திநிலா
விண்ணோடே இல்லையென்பேன் விந்தை உனதுருவில்
உன்தந்தை கையிலென்பேன் ஓர்.

.

உன்வயிற்றில் மீண்டும் உயிராய்உன் பெற்றோர்கள்
என்றும் பிறக்க இதழ்சிரித்து? - உன்னுடைய
கண்ணசைவைப் பார்த்தவர்கள் காலம் கழித்தபடி
இன்பம் பெறட்டும் இனி.

.

இம்மை பலவெடுத்து; ஏக மகிழ்வளித்து;
உம்மைப்போல் இன்னோர் உயிர்பிறந்து; - இம்மண்ணில்
வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்துகிறேன் கண்மணியே
போழ்தெலாம் உன்னைப் புகழ்ந்து.

.

குன்றாய்ச் செழிக்கும் குலமகளாய்; நாளெல்லாம்
பொன்றா சிரிப்பின் பொலிவழகாய் - என்றென்றும்
இல்லாள ஈன்றெடுத்த ஈடில்லா முத்தாக
எல்லோரா வாழ்க இனித்து .



பேரன்புடன்

**தமிழ்நெஞ்சம் அமின்**

07.05.2026

# அன்புள்ள அம்மா

அன்னை உன்னை வணங்குவதில்
அகமும் முகமும் மலர்கின்றேன் .
என்னை ஈன்ற தாயன்றோ?
எதிலும் உனக்கு நிகருண்டோ ?

அன்பும் பண்பும் புகட்டிவிட்டாய்.
அன்னை உன்னை என்றும்நான்
மறவா நிலையை எனக்கருள
மன்றில் உன்னை வேண்டுகின்றேன்

நன்றி பலநாள் கூறிடினும்
நயந்தே நானும் நடந்திடினும்
நேயம் கொண்டு எனைவளர்த்த
நேசந் தனக்கு ஈடாமோ ?

உந்தன் அன்பு கிட்டிடிலோ
உயரும் எந்தன் வாழ்வுமன்றோ ?
இமயம் கூட எட்டிவிடும் .
இயல்பும் எனக்கு வாய்த்துவிடும்.

உதிரந் தன்னை உணவாக்கி
உண்மை அன்பை உணர்வாக்கி
உதிரா வண்ணம் வளர்த்தென்னை
உலகம் அறிய செய்திட்டாய் .



உணர்வும் உயிரும் நீயாகி
உள்ளம் சேர அரவணைத்துப்
பலவாய் நெறிகள் போதித்து
பண்பாய் எனையும் வளர்த்தாயே .

கருவாய் என்னைச் சுமந்தாயே .
கண்போல் என்னைக் காத்தாயே .
உன்னைப் போல யாருண்டு
உலகில் நீதான் கடவுளன்றோ ?

மண்ணில் பிறந்து மகவானேன் .
மாதா உன்னை மதித்திடுவேன் .
பண்ணில் பாடி மகிழ்ந்திடுவேன் .
பாதம் தன்னைத் தொழுதிடுவேன் .

அம்மா ' என்னும் சொல்லில்தான்
அகிலம் முழுதும் அடங்கிவிடும்
மகவாய் நானும் பிறப்பதற்கே
மகிமை பலவும் செய்தாயே .

உனக்காய்ச் சொல்லும் உன்னதங்கள்
உலகில் யார்க்கும் சொல்வதுண்டோ ?
கோவில் தெய்வம் நீயன்றோ ?
குடும்ப விளக்கும் நீயன்றோ ?

வாட விடாது எனைக்காத்த
வரமே நீதான் அன்னையன்றோ?
பாடிப் பாடிப் புகழ்ந்திடுவேன் .
பாத மலர்கள் வணங்கிடுவேன் .

**சரஸ்வதி பாஸ்கரன்**

# வெண்பாப் போட்டி (பயணம்) 54

போட்டியின் காலம் மே 01 முதல் 12 வரை 2026

ஈற்றடிக்கு வெண்பா : 'படிக்கும் பழக்கத்தைப் பற்று'

நாடழிந்து போவதற்கு நாமுரைக்குப் காரணமோ
கேடுதரும் என்றறிந்தும் கேட்பதில்லை - நாடகமே
விடியாத வாழ்க்கையிலும் வெற்றிவேண்டு மென்றால்
படிக்கும் பழக்கத்தைப் பற்று

எழுத்தாளர் நாகா

.

சனாதானம் கேடுதரும் சாத்திரங்கள் ஓங்கி
இனமானம் விற்குதடா இங்கு - தினமும்
விடியல் மலர்ந்தொளிர ஈ.வெரா தம்மைப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று

வள்ளி முத்து

.

நீலக் கடலலைகள் நீந்துகிற மேகங்கள்
சோலைக் குயில்களின் சங்கீதங்கள் - காலை
விடியலில் நல்ல வியப்பளிக்கும் நல்லியற்கை
படிக்கும் பழக்கத்தைப் பற்று

பக்ருதின் இபூ ஹம்துன்

.

முடிக்கத் தெரிந்தவரை முன்னேற்றி விட்டுத்
துடிப்போடு செல்வீர் தொடர்ந்து - முடிந்தால்
குடியைக் கெடுக்கும் குடியை ஒதுக்கி
படிக்கும் பழக்கத்தைப் பற்று!

செ. இராசா

கல்லாமை என்பதனை இல்லாமல் செய்திட
எல்லோரும் கூடியே ஏற்றுவோம் - கல்வியொளி
கடிதிலா வாழ்க்கைக்குக் கல்வியொன்றே கைகொடுக்கும்
படிக்கும் பழக்கத்தைப் பற்று!

அ.வள்ளிபாபு, நெய்வேலி.

.

உறவின் இடையில் உரசல் விளைக்கும்
வெறுப்பு மொழியை விலக்கும் - அறத்தைக்
கடைப்பிடிக்கப் பண்புடையோர் கையாளும் மாண்பைப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

ஃ

அ. சி. தியாகராசன், காரைக்குடி.

.

மனிதனைக் கற்க மகத்துவம் பெற்றே
புனிதம் பெறலாம் புவியில் - கனியாய்
வடிவாக்கும் வாழ்வை வளமாக்க நூல்கள்
படிக்கும் பழக்கத்தைப் பற்று

ஜனனி செல்வா

.

பார்த்த உடன்காதல் பற்றிவிடும் பாவையர்மேல்
ஈர்த்துளம் மோகிக்கும் ஏக்கத்தில் - வேர்த்துத்
துடிக்கும் உணர்வைத் துயிலெழுப்பும் பெண்ணைப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று !

பாவலர் கோவதன், மலேசியா

.

இன்றைய சூழ்நிலையில் ஏணியென மேலேற்றும்
மன்றமு மாளும்! மகிழ்வாக்கும்! - என்றும்
துடிப்பா யியங்கவைக்கும்! தோள்கொடுக்கும் நூலைப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

மாலதி திரு

.



புலனைந்து மொன்றப் பணிசெய்வார்! கையிற்
பலனொன்றுங் காணாரிப் பாரில்! நலமாய்
நடிப்போ ருயர்கின்ற நாடீதாம்! நீசொம்
படிக்கும் பழக்கத்தைப் பற்று!

சுந்தர ராஜன்

உலகதன் வாழ்விலே உண்மையும் பொய்யும் !
நலமுறவே வாழ்ந்திட நாமும் - உலகில்
நடிக்கும் மனிதரை நன்கறிந்தால் நன்று
படிக்கும் பழக்கத்தைப் பற்று .

இரா. சம்பந்தன் - யேர்மனி

.

மாந்தர் மனங்களினை மாவியற்கைச் சூழலினை
நீந்தும்மீன் ஆழியினை நீள்வானை - ஏந்திப்
படிக்கின்ற நூல்போல்நீ பார்போற்ற வாழப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்

.




நடிக்கவே நீயுமிங்கு நாட்டிலே இருக்க
கடியது நாளும் களைய - படிய
வடித்த அறிவு வளமை பெறவே
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

கு.கதிரேசன்

.

தடிதனைக் கொண்டும் தடுக்க முடியா
மடியா முயற்சியின் மாற்றம் - வடியா
கடிதாய்த் தோன்றிடும் கல்விநலம் போற்றப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

கலைகளுக்கோ பஞ்சமிலைக் காற்றைப்போல் எங்கும்
நிலைத்திருக்கக் காண்பாயே நீயும் - நிலைக்கத்
துடிக்கு மிதயமே துன்பமின்றி வாழ
படிக்கும் பழக்கத்தை பற்று.

ப. முருகன் யோகீஸ்வரர்

.

குடிக்கும் குடிமகனாய்க் குன்றிப்போ காதே
துடிக்கும் இதயத்தைத் தூய்மை - வடிக்கும்
நடிப்பினை மாற்றி நலந்தரும் என்றும்
படிக்கும் பழக்கத்தைப் பற்று .

சரஸ்வதி பாஸ்கரன்

.

வளமும் நலமும் வரவாய் அமையக்
களமும் அமைத்துமே கற்போம் - பலமாய்த்
துடிக்கும் இதயம் துயிலும் வரையில்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

பாவலர்மணி வா.சண்முகம்

.

கல்லை, மலையிடைக் காடுகளை, மேடுகளை,
புல்லினத்தைப், பூவகையைப், புல்வெளியை - நல்ல
முடியிடைசூழ் மேக விசும்பியற் கையைப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

முனைவர். சுந்தரராசன் தயாளன், பெங்களூர்.

.

நடிக்கும் தகுதியொன்றே நாடாளப் போதும்?
இடிக்கும் வினாவாம் இதயத்தை - பிடித்த
நடிகன் தலைவனாயின் நாட்டின் நிலைமை
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

இரா இரத்தினகுமார்

.



துடிக்கும் உயிர்க்குத் துரித உதவி
வடிகால் புனலோடும் வாய்க்கால் - குடிலில்
குடியிருக்கும் மாந்தர் குடிக்கிற நீரில்
படிக்கும் பழக்கத்தைப் பற்று!

கீதா அருண்

.

துடிப்பும் துணிவும் துயரம் களையும்
பிடித்த கலையால் பெருமை - நடிப்பு
நொடியினில் நம்மை நசுக்கி அழிக்கும்
படிக்கும் பழக்கம் பற்று.

கவிஞர் க.தங்கவேலு, கிருட்டிணகிரி

.

செய்யறிவன் காலத்தும் சிந்தனையை மேம்படுத்தி
மெய்யறிவைக் கொள்வதற்காய் மேவுக - உய்வைத்
துடிப்பாய்த் தொடர்ந்தென்றும் தூக்கி நிறுத்த
படிக்கும் பழக்கத்தைப் பற்று

விசு. இம்மானுவேல், பெங்களூரு

காலத்தை ஆளும்  குணித்தலும் நல்லறிவும்
சீலமோங்கும் வாழ்க்கையின்  சாரமாக - சாலத்
துடிப்புடன் ஓடியாடும்  துள்ளிளமைப் போழ்தே
படிக்கும் பழக்கத்தைப்  பற்று.

வானதி சந்திரசேகரன்

.

இடித்து இயம்பும் இயல்புடைத்தக் கல்வி
துடிக்கின்ற இன்னலைத் துண்டித்து முடித்து
வடித்திடுமே உன்னத வாய்ப்புதனை நல்கி
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

குயில்.மு.இரசியா பேகம்.

.

கண்ணே உணர்ந்திடு கண்களுக்கு நல்லது
விண்வரை நீள விழிவிரிய - மண்ணில்
மடியினில் கல்வி மலர்ந்திடும் வாழ்க்கை
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

சோ. சுந்தரேசுவரி

.

நற்கல்விப் பெற்றிங்கே  நல்லொழுக்கம் கண்டிடத்
தற்காத்து முன்னே  துடிப்புடன் - பற்ற
வடித்திடும் வாழ்வது   வெற்றியின் பாதை
படிக்கும் பழக்கத்தைப் பற்று

கவிஞர் கவி நிலா மோகன்,  தஞ்சாவூர்.

.

கற்றறிந்தோர் நூல்களவை காட்டும் வழிசெல்வாய்
பெற்ற அறிவும் பிறழாமல் - நிற்க
துடிப்புடன் வாசிப்பைத் தூண்டியதற்(கு) இன்றே
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

தன்ராஜ் பாப்பணன்

.

மக்கள் மனங்களை மாறும் உலகினை
எக்கணமும் மாறா இயற்கையை - தக்க
அடித்தளம் நூலை அறிந்து பொறுப்பாய்ப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

ஓசூர் மணிமேகலை

.

கல்வியே செல்வம் கடலினும் பேரருமை
கல்லாமை கேடாம் கருதுக - நல்ல
விடியலைக் காட்டிடும் வெற்றிநூல் தேர்ந்து
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

பாவலர் இரா.ச.பத்மநாபன் தஞ்சாவூர்

.

ஓடி விளையாடி உண்டுக் களித்திருந்(து)
ஆடித் திரிந்துலவி யாழ்ந்தோனே - தேடிக்
குடிவிளங்க நீயும் குறைவின்றி நாளும்
படிக்கும் பழக்கத்தைப் பற்று

‘ மலர்மைந்தன்

.

படிக்கும் வயதில் படிப்பதே தம்பீ!
துடிக்கும் இளமைக்குத் தூணாம் - கடிதே
குடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு விட்டு
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

சி. செல்லமுத்து, மேல்மங்கலம்.

.

தடித்தனத்தை மாற்றிடத் தன்மை நிலையில்
நடிக்காதுச் செய்திடவே நன்மை - கடிதாய்
வடித்தே எடுத்திங்கு வல்லமை பெறவே
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

கு.கதிரேசன்




**அலைபேசி நோண்ட அமைதிதான் போகும்**
**இளையோரே என்சொல்லும் கேளீர் - தலையும்**
**வெடித்து உயிர் போகும் முன்னே நூல்கள்**
**படிக்கும் பழக்கத்தைப் பற்று.**

**மு. மதனகோபால், சென்னை**

கல்லாமை நீங்கிக் கதிபெறவே எந்நாளும்
நல்லறிவை ஊட்டும் நலம்நாடி - மெல்லத்
துடிப்புடன் சிந்தை சிறப்படையச் சீராய்ப்
படிக்கும் பழக்கத்தைப் பற்று.

கவிஞர் இரா. சீ. பாலகுமார்.,M. A.,

# வெண்பாப் போட்டி (பயணம்) 55

போட்டியின் கால அளவு ஜூன் 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி....

.

இந்த ஆண்டின் கோடை விடுமுறையைத் தாங்கள் எப்படி கழித்தீர்கள் என்பதை ஒரே வெண்பாவில் சொல்லவேண்டும்...



.

சிலபேர் கோயில்களுக்குச் சென்றிருக்கலாம்....
சிலபேர் சுற்றுலா சென்றிருக்கலாம்....
சிலபேர் வீட்டிலேயே குழந்தைகளுடன் இருந்திருக்கலாம்....
சிலபேர் சொந்தக்காரர்கள் வீட்டிற்கு சென்றிருக்கலாம்....

யார் யார் எப்படிக் கழித்தீர்கள் என்பதைப் பார்க்க ஆவலுடன் இருக்கிறோம்...

.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு .

## வாசகர்களுக்காக..

# வலிமைமிகு எண்ணங்கள்

( கட்டுரைத் தொகுப்பு )




**தொகுப்பாளர்கள்:**

**தமிழ்நெஞ்சம் அமின்**

**அன்புச்செல்வி சுப்புராஜ்**

**பக்கங்கள்: 480.** **விலை: 4X0**

**உங்களுக்காக: ரூ380/- மட்டுமே.**

அஞ்சல் செலவு: உங்களுக்காக நாங்கள்

**வேண்டுவோர் தொடர்பு கொள்க**

**Gpay: 8946082893**

# யாயும் ஞாயும்
## யாராகியரோ?

நேற்று வரையில் இருவரும் வெவ்வேறே
வேற்று நினைவுகள் ஒன்றானது இன்றே
கண்டதும் காதல் கொண்டுவிட் டேனென
தண்டனை ஏதும் தந்து விடாதே!


கண்கள் பார்த்தால் காதல் பிறக்கும்
கவிஞனின் எழுத்தால் பாக்கள் சிறக்கும்
நீயும் நானும் உறவினர் அல்லர்
பாயும் நீரில் பிரிவுகள் இல்லை

உனது தந்தையும் எனது தந்தையும்
இனத்தில் உறவோ எதுவும் அல்லர்
உனது தாயும் எனது தாயும்
உறவுக் காரர்களோ அதுவும் இல்லை

வானில் இருந்து வழியும் மழையில்
வண்ணமும் இல்லை களங்கமும் இல்லை
வந்து விழுகின்ற இடத்தைப் பொறுத்தே
சொந்தமும் குணமும் அதற்கென உண்டு

அங்கே பாராய் செம்மண் சாலையில்
பொங்கி ஓடும் மழைநீர் அழகை
நிறமே இல்லா வான்நீர் ஆங்கே
நிறத்துடன் இழைந்து பிணைந்ததைப் பாராய்

பிரிக்க இயலாப் பிணைப்பு போல்நாம்
நீரும் செம்மண் நிலமாய் இணைந்தோம்
பிரிக்க எவரும் புவிதனில் இல்லை
விரிந்த வானே நம் காதலின் எல்லை



"நீர் போல இணைந்த
நம் காதல்...
வானம் போல
விரிந்ததே!"


இராம வேல்முருகன்
வலங்கைமான்


தஞ்சைத் தமிழ் மன்றம்
வாழும் தமிழ் வளர்ப்போம்
தஞ்சைத் தமிழ் மன்றம்
எட்டாம் ஆண்டுவிழா
நாள் : 16.08.2026
ஞாயிற்றுக்கிழமை
இடம் : வலங்கைமான்
கவியரங்கம்
வயலினிசை
தவிலிசை
நாதஸ்வர இசை
பரதநாட்டியம்
நூல் வெளியீடு
விருது வழங்குதல்
அனைவரும் வருக




# நிழல்கள்

நூலை இலவச தபாலில் பெற்றுக்கொள்ள 650.00 ரூபா பணத்தை கீழுள்ள ஏதாவது முறையில் வைப்பிலிட்டு பற்றுச் சிட்டையை 0768672030 என்ற இலக்கத்திற்கு பெயர், விலாசம், மாவட்டம், தொடர்பிலக்கம் என்ற ஒழுங்கு முறையில் அனுப்பி வைக்கவும்.

## Mutur JMI (Pvt) Ltd

Sampath Bank - Mutur
**Ac No - 120814031874**

BOC - Mutur
**Ac No - 72892830**

Peoples Bank - Mutur
**Ac No - 095200360053090**
**EZ Case Number**
**0771020030**

**இவ்விதழைப் படிக்க**

muththamizh.kalasam@gmail.com





கவிஞரேறு
வாணிதாசனார்
சிறப்பிதழ்
தமிழ்நெஞ்சம் இதழ் கவிஞரின் 112 வது பிறந்தநாளை
கொண்டாடும் விதமாக ஜூலைத் திங்களில்
சிறப்பிதழொன்றை வெளியிட உள்ளது.
கவி வாணியின் பிறந்தநாள் சிறப்பிதழுக்கு
கவிதைகள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
அன்புடன்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு
ஆக்கங்கள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல்
email: editor@tamilnenjam.com